உதயன்

சுடர் 31 கதிர் 018 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 28, திங்கட்கிழமை 14.12.2015

## கிளிநொச்சி - முல்லைத்தீவில் மீள்குடியேறியோருக்கு வீடுகள்

### வழங்கும் திட்டம் ஜனவரியில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 14

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 3 ஆயிரத்து 400 வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி பக். 24

## தாஜுதீன் படுகொலையில் மகிந்தவின் வாகன சாரதி

### கைதாவார் என்கிறது சி.ஐ.டி.

கொழும்பு, டிசெ. 14

பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புள்ளதாகத் தெரிவிக்கப்படும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வாகன சாரதியாகப் பணியாற்றிய ஒருவரும் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு பக். 24

# சோதிடத்தை நம்பியே தோல்வியுற்றார் மகிந்த

### கடவுளை மட்டும் நம்புமாறு ஆணைக்குழுத் தலைவர் காணாமற்போனோரின் உறவினர்களுக்கு அறிவுரை

பருத்தித்துறை, டிசெ. 14

சோதிடத்தில் நம்பிக்கை வைத்துத் தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தோல்வி கண்டார். அதனை மறந்து விட வேண்டாம். கடவுளை மட்டுமே நம்புங்கள் என்று காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு அறிவுரை கூறினார் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று 3 ஆவது நாளாகவும் காணாமற் போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதியின் ஆணைக்குழு விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணைக்காக வருகை தந்திருந்த பக். 05

## பாப்பரசரை இன்று சந்திக்கிறார் மைத்திரி

கொழும்பு, டிசெ.14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக, நேற்று இத்தாலிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் ஆண்டகையின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி வத்திக்கானுக்குச் சென்றுள்ளார். அத்துடன், புனித பாப்பரசரை ஜனாதிபதி இன்று சந்திக்கவுள்ளார்.

வத்திக்கானிலுள்ள நூதனசாலையொன்றை பக். 05

முச்சந்தி முரளி



நல்ல அட்வைஸ் தான் பாருங்கோ...

# பஸ் ஓடாது, ரயில் வராது இன்று நள்ளிரவு முதல்

### தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு

கொழும்பு, டிசெ.14

இன்று நள்ளிரவு முதல் பஸ் ஓடாது, ரயில் வராது, அரச அலுவலகங்கள் பல இயங்காது, வைத்தியசாலைகள் நடைபெறாது என அரச தொழிற்சங்கங்கள் இணைந்து எடுத்த தீர்மானத்தை நேற்று அறிவித்துள்ளன.

அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் இல்லாமல் செய்துள்ள அரச ஊழியர்களின் நலன்களைப் பெற்றுத் தர உடன்படும் வரையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அரசு பேச்சுவார்த்தைக்கு பக். 24

## சிறப்புத் தூதுவரை கொழும்புக்கு அனுப்புகிறது புதுடில்லி

கொழும்பு, டிசெ.14

பாகிஸ்தானிடம் இருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசு திட்டமிட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பக். 05

## 60 போராளிகளுடன் படையினரிடம் சரணடைந்த எனது கணவர் எங்கே?

### அவரை மீட்டுத்தாருங்கள் என மனைவி உருக்கம்

பருத்தித்துறை, டிசெ.14

எனது கணவர் உள்ளிட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் அறுபதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 10 போராளிகளின் குடும்பங்கள் வண. பிதா



பிரான்ஸிஸ் ஜோசப்புடன் பக். 25

## பிரதமர் இன்று விசேட உரை

கொழும்பு, டிசெ.14

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்த உள்ளதாக பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்றுமுன் பக். 24

## வடக்கில் 5 ஆண்டுகளில் புதிதாக 18 விகாரைகள்

### சுட்டிக்காட்டுகின்றன புள்ளிவிவரங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 14

போருக்குப் பின்னரான கடந்த 5 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் புதிதாக 18 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 29 விகாரைகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், 2014 ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துக் காணப்படுகின்றன. பக். 05

## போர் முடிந்த பின்னரே அம்மாவைக் கடத்தினர்

### கண்ணீருடன் மகள் சாட்சியம்

கரணவாய், டிசெ. 14

போர் முடிவடைந்த பின்னர் இரவுவேளை வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் கதறக்கதற அம்மாவை இழுத்துச் சென்று வானில் கொண்டு சென்றனர். பக். 05

## ஊசிமருந்து ஏற்றி சித்திரவதை செய்வதாக மகன் அழுதான்

### தாயொருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.14

இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவித்து தொலைபேசி அழைப்பு எடுத்த எனது மகன், தனக்கு ஊசி மருந்து ஏற்றிச் சித்திரவதை செய்வதாக அழுதார். பக். 25

# திருமலை, முல்லைத்தீவு வழியாக யாழிற்கு அதிவேக நெடுஞ்சாலை

### அடுத்த ஆண்டு பணிகள் ஆரம்பமென அரசு அறிவிப்பு

கொழும்பு, டிசெ.14

திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு வழியாக யாழ்ப்பாணத்திற்கான அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக, அரசு அறிவித்துள்ளது.

எனினும், முன்னர் திட்டமிட்டதற்கு அமைவாக, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணம் வரையான திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.பி.கே.எல்.குணரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம், தம்புள்ளை ஊடாக பொலன்னறுவை - கந்தளாய் - திருகோணமலை - முல்லைத்தீவு வழியாக பக். 24

## படையினரிடம் இருந்து மகனை மீட்டுத் தருமாறு தாயார் மன்றாட்டம்

பருத்தித்துறை, டிசெ.14

எனது மகன் தங்களிடம் தான் இருக்கிறார் என்று ஒவ்வொரு வருடமும் கையெழுத்திட்டு வந்தேன். எனினும், கடந்த பக். 25



நாளை செவ்வாய்க்கிழமை 15/12/2015 மாலை 5.00 மணி
Free Information Seminar
Cardiff Metropolitan University
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 - 4777888
Information Technology MBA
Information Technology MSc IT
இடம் : ICBT Campus
காலம் : 15.12.2015 செவ்வாய்க்கிழமை
நேரம் : 5.00 - 6.00 (மாலை)



First Time in Jaffna
Jacqui Hare
பிரதி துணைவேந்தர்
Cardiff Metropolitan University, UK
www.icbt.lk For more information & Registration: Amaresh 076 928 978 4
Digitized by Noolaham Foundation.

# யாழ். மாவட்டத்துக்கு 39,300 வீடுகள் தேவை

## மாவட்ட செயலகம் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் முழுமையாக 39 ஆயிரத்து 300 புதிய வீடுகளும், 32 ஆயிரத்து 17 மலசல கூடங்களும், 13 ஆயிரத்து 711 குடிநீர் பெறும் கிணறுகளும் அமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற 2016 ஆம் ஆண்டுக்கான நகரத்திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்கள், மீள்குடியேறவுள்ள மக்கள், நலிவடைந்த மக்கள், மற்றும் பொதுவாக அமைக்கப்பட வேண்டியுள்ள வீடுகள், மலசலகூடங்கள், நீர் வசதிகள் தொடர்பான மதிப்பீட்டுத் தரவுகளில் இது குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரால் இடம்பெயர்ந்த மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளில் இதுவரை விடுவிக்கப்பட்டவற்றில் அமைக்கப்பட வேண்டிய வீடுகள், மலசலகூடங்கள், நீர் வசதிகளும், இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகளில் மீள்குடியேற்றத்துக்காகக் காத்திருக்கும் மக்களுக்கான வீடுகள், மலசலகூடங்கள், நீர் வசதிகள் மற்றும் நலிவடைந்த மக்கள் மற்றும் பொதுவான பாதிப்புக்களுக்கு உள்ளான வீடுகள், மலசலகூடங்கள், நீர் வசதிகள் போன்ற தகவல்களும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கான 14 ஆயிரத்து 391 புதிய நிரந்தர வீடுகளும், பகுதியளவு திருத்த வேலைப்பாடுகளுடன் மூவாயிரத்து 512 வீடுகளும் அமைக்கப்பட வேண்டியுள்ளது. 11ஆயிரத்து 329 புதிய மலசலகூடங்களும், விசேடதேவைகளுடன் கூடிய 412 மலசல கூடங்களும், திருத்த வேலைப்பாடுகள் அடங்கிய ஆயிரத்து 670 மலசலகூடங்களும் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் 5 ஆயிரத்து 235 கிணறுகளும், ஆயிரத்து 667 குழாய்க்கிணறுகளும், திருத்த வேலைப்பாட்டுடன் கூடிய 376 கிணறுகளும் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

அதேவேளை இன்னமும் மீள்குடியமர்த்தப்படாத மக்களுக்கான நிவர்த்தி சேர் தேவைகளில் 9 ஆயிரத்து 457 புதிய வீடுகளும், 9ஆயிரத்து 254 புதிய மலசல கூடங்களும், விசேட மற்றும் திருத்த வேலைகளுடன் கூடிய 18 மலசலகூடங்களும், 109 புதிய கிணறுகளும், 69 குழாய்க்கிணறுகளும், 3ஆயிரத்து 927 புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய கிணறுகளும் உள்ளடங்கியுள்ளன.

நலிவடைந்த மக்களுக்காகப் புதிதாக அமைக்கப்பட வேண்டியனவாக 15ஆயிரத்து 452 வீடுகளும், பகுதியளவு திருத்த வேலைப்பாட்டுடன் கூடிய 5ஆயிரத்து 243 வீடுகளும், புதிதாக அமைக்கப்பட வேண்டிய 11ஆயிரத்து 434 மலசல கூடங்களும், விசேடமாக அமைக்கப்பட வேண்டிய 134 மலசல கூடங்களும், திருத்த வேலைப்பாடுகள் நிறைந்த 968 மலசல கூடங்களும் காணப்படுவதுடன், புதிதாக அமைக்கப்பட வேண்டிய மற்றும் திருத்த வேலைப்பாடுகளுடன் கூடிய 11ஆயிரத்து 129 கிணறுகளும் அமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைவிடப் பொதுவான தேவைகளுக்காக 168 புதிய மலசல கூடங்களும், 36 திருத்தப்பட வேண்டிய மலசலகூடங்களும், 203 புதிய கிணறுகளும், தேவையாக உள்ளதுடன் 295 கிணறுகள் திருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

(ற-ஜ-ரி5)

# யாழ்.போதனாவில் நாளை தொழிற்சங்கப் போராட்டம்

## நோயாளர்கள் வீண் அலைச்சலைத் தவிர்க்குமாறு தாதியர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்குவதில் தடை ஏற்படலாம். அதனால் அன்றையதினம் நோயாளர்கள் சிகிச்சை மற்றும் கிளினிக்குகளுக்காக வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தாதியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

வைத்தியசாலையில் நாளை தாதியர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்றே பிரிவினர் உட்படப் பல பிரிவினர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அதனால் நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்று அலைச்சலுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தாதியர்கள் அறிவித்துள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிதொடக்கம் நாளை மறுதினம் காலை 7 மணிவரை இந்தப் பணிப்புறக்கணிப்பை அவர்கள் முன்னெடுக்கவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

அரச பணியாளர்களின் ஓய்வூதியக் குறைப்பு, அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா வேதனம், அடிப்படை வேதனத்துடன் இணைக்கப்படாமை, மனிதவள பணியாளர்களுக்கு நிலையான நியமனம் வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சு தோல்வியடைந்த நிலையில், பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நேற்றிலிருந்து 48 மணித்தியாலங்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்குள் உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால்தான் இந்தப் போராட்டம் நாளை நடத்தப்படும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம் கல்வித் துறை சார்ந்தவர்களும் எதிர்வரும் 15 ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற-ஜ-4)

# சிகிச்சைக்குச் சென்றபோது ஆச்சிரமத்து யுவதி மாயம்

யாழ்ப்பாணம், டிசெ.14

நெல்லியடியிலுள்ள ஆச்சிரமம் ஒன்றில் தங்கியிருந்த யுவதி ஒருவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்த நிலையில் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகாராஜா கயல்விழி (வயது - 19) என்ற யுவதியே காணாமற் போயுள்ளார் என்று இல்லத்தின் பொறுப்பதிகாரியால் யாழ். சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த யுவதி சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை முடிந்த பின்னர் விடுதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியே பொறுப்பாளருடன் வந்து மருந்தகத்தில் நின்றபோது, திடீரெனக் காணாமற் போயுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று முன்னர் இதே போன்று இல்லம் ஒன்றில் இருந்த யுவதி காணாமற் போய் உரும்பிராயில் உள்ள ஒரு உறவினரின் வீட்டில் இருந்த நிலையில் கோப்பாய் பொலிஸார் அவரைச் சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்திருந்தனர்.

(ற-ஜ-4,101,106)

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி நெடுந்தீவை அண்மித்த இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் எட்டுப் பேரில் ஏழு பேரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

அவர்களில் 16 வயதுடைய சிறுவனைத் தொடர்ந்தும் அரச சான்று பெற்ற அச்சுவேலி நன்னடத்தைப் பாடசாலையில் சேர்க்குமாறும் கட்டளையிட்டார்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இரண்டு விசைப்படகுகளில் இலங்கை கடற்பரப்புக்குள் வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த மீனவர்களைக் காங்கேசன்துறைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

(ற-ஜ-107)

# கடந்த 13 நாள்களில் 130 பேருக்கு டெங்கு

## அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.குடாநாட்டில் கடந்த 13 நாள்களில் 130 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள யாழ்.பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர், "இந்த வருடம் இதுவரை ஆயிரத்து 500 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த 13 நாள்களில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி எல்லைக்குட்பட்ட பகுதியிலேயே அதிகளவானோர் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 56 பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரியில் 14 பேரும், கரவெட்டியில் 12 பேரும், உடுவிலில் 9 பேரும், பருத்தித்துறையில் 8 பேரும், சண்டிலிப்பாயில் 7 பேரும், கோப்பாயில் 6 பேரும், சங்கானையில் 5 பேரும், தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்றுறையில் தலா 4 பேரும், வேலணையில் 3 பேரும், நல்லூரில் 2 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த வருடம் கடந்த ஜனவரியிலிருந்து கடந்த நவம்பர் வரை மிக அதிகளவாக யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 446 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

சாவகச்சேரி பிரிவில் 200 பேரும், கோப்பாய் பிரிவில் 130 பேரும், நல்லூர் பிரிவில் 103 பேரும், சண்டிலிப்பாயில் 97 பேரும், பருத்தித்துறையில் 93 பேரும், உடுவிலில் 88 பேரும், கரவெட்டியில் 83 பேரும், தெல்லிப்பழையில் 57 பேரும், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 47 பேரும், ஊர்காவற்றுறை மற்றும் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 38 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# யன்னல் பிரித்து இறங்கி 20 பவுண் நகை திருட்டு

## யாழ்.கொக்குவிலில் சம்பவம்

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள வீடொன்றின் பின்பக்க யன்னல் கதவைப் பிரித்து உள்இறங்கியதிருடர்கள் 20பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி நள்ளிரவு இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில்உள்ள அனைவரும்உறங்கிக் கொண்டிருந்த சமயம், உள் இறங்கிய திருடர்கள் அலுமாரியில் இருந்த தாலிக்கொடி, நெக்லஸ், 6 சோடி காப்பு, 2 சோடி தோடு உட்பட 20 பவுண் நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் மறுநாள், யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஜ-107)

# நெடுந்தீவு மாணவருக்கு சீருடை

யாழ்ப்பாணம், டிசெ.14

நெடுந்தீவுப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்தின் மூலம் வழங்கப்படவுள்ளன என்று பல.நோ.கூ.சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ற-ஜ-7)

# வெளிநாடு அனுப்புவதாக 38 லட்சம் ரூபா மோசடி

## இந்தியப் பிரஜையை தேடுகின்றது காங்கேசன்துறை பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ.14

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 8 பேரிடம் 38 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த இந்தியப் பிரஜை ஒருவரை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்று பொலிஸ் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரால் பாதிக்கப்பட்ட நபர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறியும், வெளிநாடுகளுக்கு செல்லவிரும்புவோரை அந்தந்த நாடுகளுக்கு அனுப்புவதாகக்கூறியுமே குறித்த இந்திய பிரஜை ஒருவர், 8 பேரிடமும் இருந்து 38 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதற்கு இடைத்தரகராக பருத்தித்துறை முதலாம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் செயற்பட்டுள்ளார். பணத்தைப் பெற்றுக் கொண்டவர் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி காலத்தை இழுத்தடித்து வந்துள்ளார். தாம் ஏமாற்றப்படுவதை உணர்ந்து கொண்ட இடைத்தரகராக நின்றவர் பணத்தைக் கேட்டுள்ளார். வழங்கப்பட்ட பணம் மீண்டும் கிடைக்காததால் இடைத்தரகராக நின்று பணத்தை வாங்கிக் கொடுத்தவர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவில் கடந்த 4 ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஏமாற்றிய நபரை கைது செய்வதற்குப் பொலிஸாரால் இந்தியத் தூதரகம் ஊடாக தகவல் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைமேற்கொள்ளப்படுகிறதுஎன்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-ஜ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உதயன் மீதான தாக்குதலின் சூத்திரதாரி நாடாளுமன்றில்

## சுதந்திரமாக செயற்படுகிறார் என சபையில் சுட்டிக்காட்டினார் சரவணபவன் எம்.பி.

கொழும்பு, டிசெ.14

இராணுவத்தினரின் ஆதரவுடன் உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்த ஆயுததாரிகள் வெறியாட்டம் நடத்தி இரண்டு ஊழியர்களைச் சுட்டுக் கொன்றார்கள். மூன்று பேரைக் காயப்படுத்தினார்கள். ஒரு கோடி ரூபா அள விலான சொத்துக்களை நாசமாக்கினார்கள்.

இதனைச் செய்தவர்களின் தலைவர் – தாக்குதலின் சூத்திரதாரி – முன்னைய ஆட்சியில் அமைச்சராக இந்தச் சபையில் இருந்தார். இன்று நாடாளுமன்ற உறுப்பினராக சுதந்திரமாகச் செயற்படுகிறார்.



இவ்வாறு, நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை வரலாற்றிலேயே முதன் முதலில் ஊடக நிறுவனமொன்றுக்குள் புகுந்து, அங்கிருந்தவர்களைச் சுட்டுக் கொன்று, சொத்துக்களுக்கெல்லாம் சேதம் விளைவித்த சம்பவம் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி – சர்வதேச ஊடக சுதந்திர தினமான மே 3 ஆம் திகதிக்கு முதல் நள்ளிரவு – யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்த ஆயுததாரிகள் வெறியாட்டம் நடத்தி இரண்டு ஊழியர்களைச் சுட்டுக்கொன்றார்கள். 3 பேரைக் காயப்படுத்தினார்கள். ஒரு கோடி ரூபா அளவிலான சொத்துக்களை நாசமாக்கி னார்கள். இலங்கையின் ஊடக வரலாற்றையே அதிர்ச்சியால் புரட்டிப்போட்ட இந்தச் சம்பவம் குறித்து இதுவரையில் எந்த விசாரணையும் இல்லை.

இந்த நல்லாட்சி அரசின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தத் தாக்குதல் இராணுவத்தினரின் ஆசீர்வாதத்துடனும், ஆதரவுடனும்தான் நடத்தப்பட்டதென்றாலும் அதனை நேரடியாகச் செய்தவர்களின் தலைவர் – தாக்குதலின் சூத்திரதாரி – முன்னைய ஆட்சியில் அமைச்சராக இந்தச் சபையில் இருந்தார். இன்று நாடாளுமன்ற உறுப்பினராக சுதந்திரமாகச் செயற்படுகிறார்.

தான் செய்த கொலைகளுக்காக, ஊடக நிறுவனங்களைத் தாக்கியமைக்காகத் தன்மீது வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படுமென்றோ, சிறையில் அடைக்கப்படுவோமென்றோ எந்த அச்சமுமின்றி, இங்கு அமர்ந்திருக்கும் போது, வெளியே ஊடகவியலாளர்களும்ஊடகநிறுவனங்களும் எப்படி முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்? அந்தக் குற்றவாளி அரசின் பங்காளிக்கூட்டணிஒன்றிலேயே உபதலைவராக இருக்கும்போது, ஊடகவியலாளர்களால் எப்படி சுதந்திரமாகச்செயற்பட முடியும்? நல்லாட்சி அரசின் கீழும் இப்படியான குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகிறார்களென்கின்றபோது, ஊடகவியலாளர்களால் எப்படி முழுமையான சுதந்திரத் துடன் செயற்படமுடியும்?–என்றார்.

(விரிவு 4ஆம் பக்கத்தில்)

# கடவையில் ஓட்டோவை மோதித் தள்ளியது ரயில்

## மீசாலையில் நேற்று சம்பவம்



யாழ்ப்பாணம், டிசெ. 14

மீசாலையில் ரயிலுடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளாகியதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்தில் ஓட்டோ மோசமாகச் சேதமடைந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட கடுகதி ரயில், மாத்தறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது மீசாலை, அல்லாரையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குறித்த ரயிலுடன் ஆட்டோ மோதியுள்ளது. ஓட்டோ நொருங்கியபோதும் தெய்வாதீனமாக அதன் சாரதி உயிர் தப்பியபோதும் படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாக, அவர் அம்புலன்ஸில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள தேனீர் கடை உரிமையாளரான மீசாலை வடக்கைச் சேர்ந்த நந்தன் என அழைக்கப்படும் சின்னத்துரை பிரசன்னா (வயது -22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

புகையிரதம் சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, புகையிரதம் வருவதனை எச்சரிக்குழ் சமிக்ஞை போடப்பட்டிருந்துள்ளது. பாதுகாப்பற்ற கடவையில் சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டு சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்துள்ளது. தவிர, வேகமாக வந்த ஓட்டோவை வீதியில் நின்றோர் ரயில் வருவதாக குரல் எழுப்பியபோதும், ஓட்டோவில் அதிக சத்தத்துடன் பாடல் பாடிக்கொண்டிருந்ததாகவும் அதனால் அங்கு நின்றவர்கள் எழுப்பிய குரல் கேட்காது விட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனால் ஓட்டோவை கடவையில் ஏற்றவும் எதிரே ரயில் வரவும் சரியாக இருந்ததனால் ரயில் ஓட்டோவை மோதித் தள்ளி அதன் சாரதியையும் தூக்கி வீசிவிட்டு சிறிது தூரம் சென்று நின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த வருட முற்பகுதியில் இதே கடவையில் வீதியைக் கடந்த உழவு இயந்திரத்தை ரயில் மோதியதில் சாரதி காயமடைந்ததுடன் உழவு இயந்திரப் பெட்டி சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் ஆலயங்கள் பாடசாலைகள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாவிக்கும் மீசாலை – அல்லாரை வீதியில் பாதுகாப்புக் கடவை போடப்படாதது குறித்துப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆனால் வடக்கில் குறிப்பாக யாழ்.மாவட்டத்திலேயே பொதுமக்கள் குடியிருப்புக்கள் கொண்ட பகுதிகளில் ரயில் கடவையைக் கடக்க வேண்டிய நிலைமை தேவை உள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் கூட ரயில் வருவதனைக் கவனிக்காது சென்ற காரை ரயில் மோதியதில் காரில் பயணித்த பொறியியலாளர் உயிரிழந்தார்.

எனினும் அந்தச் சம்பவங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டும் சாரதிகள் அது பற்றிய அக்கறையோ கரிசனையோ இல்லாது போடப்பட்டுள்ள எச்சரிக்கைச் சமிக்ஞையைக்கூடக் கவனத்தில் கொள்ளாது செல்கின்றமை தொடர்ந்து கொண்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4,9,106)

# 5 வயது சிறுமி துஷ்பிரயோகம் குடும்பஸ்தர் கைது

மாங்குளம், டிசெ.14

5 வயதுச் சிறுமி குடும்பஸ்தர் ஒருவரால் பாலியல் துஷ் பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்



தினம் சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

5 வயதுப் பெண் பிள்ளை தனியாக வீட்டிலிருந்த சமயம் அயலில் வசித்துவரும் 53 வயதுடைய குடும்பஸ்தரினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சிறுமியினால் பெற்றோருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேக நபர் இன்று திங்கட்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (வ-422)

# புதிய அரசமைப்பு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு

## மனோ கணேசன் தகவல்

கொழும்பு, டிசெ.14

புதிய அரசமைப்பு தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு குறித்து மக்களே தீர்மானிப்பார்கள் என பிரதமர் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தலைமையில் புதிய அரசமைப்பு வரைவு குறித்த அமைச்சரவைக் குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.இந்த குழுவில் அமைச்சர் மனோ கணேசனும் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# அக்கரை கிராமத்து வீதியை புனரமைக்குக

## பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14

தொண்டமானாறு அக்கரை கிராமத்தில் உள்ள சிறுவீதிகளுக்குக் கொங்கிறீற் கொண்டு வீதி அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் பிரதேச சபையின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இயற்கையாகக் களிமண்ணுடன் மணலைக் கொண்ட இந்தப் பகுதியில் பெய்த கன மழை காரணமாக நீர் வழிந்தோட வழியின்றி கிராமத்துக்குள் தேங்கி நிற்கின்றது. மண்ணின் களித்தன்மை காரணமாகவே நீர் தேங்கி நிற்கின்றது.

அதனால்சுமார் 49 குடும்பங்கள் வசிக் கும் இங்கு மக்களுடைய வாழ்வதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. வாகனங் கள் உள் செல்லவும், வெளிவருவதிலும் பல இடர்களை சாரதிகள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. சிறுதீவுபோன்று காட்சியளிக்கும்



அக்கரை கிராமத்தில் தேங்கியுள்ள மழை நீரால் தொற்று நோய்கள் பரவக்கூடிய ஏதுவான நிலையும் தோன்றியுள்ளது. மேலும் நீர் மாசடைந்து துர்நாற்றம் வீசுகின்றது.

சிறுவர்கள் நீரில் விளையாடுவதால் தோல்நோய்கள், மற்றும் சுவாச நோய்கள் ஏற்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-107)

2016 தரம்-10 -G.C.E (O/L) வகுப்புக்களுக்குரிய



"விஞ்ஞானம்"
பாடத்தை விஞ்ஞானமாகக் கற்க
விருப்புடைய மாணவர்களுக்கும்,
பெற்றோருக்கும் அழைப்பு விடுகின்றேன்.
ஆரம்பம்: 14.12.2015 காலை 8.30
தொ.பே. எண்: 077 955 4276
NO.66 Chapel street, Jaffna
J.J.Michael (விஞ்ஞானமாணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை குறித்து அரசு விசாரணை நடத்தாதது ஏன்?

## சரவணபவன் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, டிசெ.14

கடந்த 10 வருடங்களில் கொழும்பில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதற்கும், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டதற்கும் மேலாக வடக்கு, கிழக்கிலும் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் கடத்தப்பட்டும் தாக்கப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால், இந்த அரசு அவற்றில் ஒன்று குறித்துக்கூட இதுவரையில் விசாரணை நடத்தியதில்லை. ஏன்? தமிழ் ஊடகங்கள் அல்லது தமிழ் ஊடகவியலாளர்கள் என்ற பாரபட்சமா?

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சபையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தகவல் ஊடகத்துறை அமைச்சின் வரவு–செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆற்றிய உரையில் நேற்றைய உதயனின் முதலாவது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டதன் மிகுதி இங்கு தரப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டமானது இரு வாரங்களுக்கு முன்னதாக அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டதுடன் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 8 இல் ஆட்சிக்கு வந்ததும் 100 நாள்களுக்குள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் எனக் குறிப்பிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் தற்போது ஒரு வருடத்தின் பின்னர் வரவுள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் நடைமுறைக்கு வருமிடத்து பொதுமக்கள் தேசிய பாதுகாப்பு உட்படச் சில விடயங்களுக்கு அப்பாலுள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்ற போதிலும் அவற்றைப் பிரசுரிக்க முடியாதென்ற கருத்து நிலவுகின்றது. பெற்றுக் கொண்ட தகவலைப் பிரசுரிக்க முடியாவிடின் அதனால் என்ன பலன் கிடைக்க முடியும் என்று நினைக்கத்தோன்றுகின்றது.

பொதுவாகக் காணப்படுகின்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமூலம் பொது மக்களுக்குக் கிடைக்கின்றபோது அவர்களால் அரசச் செயற்பாடுகளில் துடிப்போடு பங்கேற்க முடிவதுடன் அன்றாட வாழ்வில் தம்மைப் பாதிக்கும் விடயங்களில் தீர்மானங்களை எடுக்கும் போது அதிலே செல்வாக்குச் செலுத்த முடியும்.

ஊடக நிறுவனங்களைத் தாக்கியவர்களும் ஊடகவியலாளர்களைக் கொன்று குவித்தவர்களும் இன்றும் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடித் திரியும்போது, ஊடகவியலாளர்கள் எப்படி முழுச் சுதந்திரத்துடன் செயற்படமுடியும்? அவர்களின் மனங்களில் இருந்து எப்படி அச்சம் விலகும்? ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் ஊடக நிறுவனங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படாத வரைக்கும் எப்படி முழுமையான ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்படும்?

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் வழக்கையும், "சண்டே லீடர்" ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கையும் மட்டுமே இந்த நல்லாட்சி அரசு விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது. இவை நல்ல விடயம். அந்த வழக்குகளில் குற்றவாளிகள் கண்டறியப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். உலகின் கவனத்தை ஈர்த்த அந்த வழக்குகளில் மட்டும் தான் அரசு அக்கறையாக இருந்துகொண்டு மற்றைய சம்பவங்களைப் புறக்கணிப்பது ஏற்புடையதல்ல.

நீங்கள் நல்லாட்சி என்றுதான் மக்களுக்கு வாக்குறுதியளித்தீர்கள். ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் எத்தனையோ தாக்குதல்கள் கடந்த காலங்களில் நடந்திருக்க, இரண்டு வழக்குகளை மட்டும் விசாரிப்பது குற்றவாளிகளைக் கட்டுப்படுத்த உதவாது. இது சும்மா மக்களுக்கும் உலகத்திற்கும் காட்டுவதற்கான நடவடிக்கை மட்டுமே.

எனவே, அனைத்துத் தாக்குதல்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும். கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான அத்தனை வழக்குகளும் விசாரிக்கப்படவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அனைத்தையும் உடனடியாகச் செய்ய முடியாது என்று இந்த அரசு கருதினால், அவற்றை எப்போது செய்து முடிப்பது என்கிற கால அட்டவணை ஒன்றை அரசு அறிவிக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நம்பிக்கை வரும். ஊடகவியலாளர்களுக்கு நம்பிக்கை வரும். ஊடக நிறுவனங்கள் துணிந்து சுதந்திரமாகச் செயற்பட முன்வரும். இவையெல்லாம் இல்லாமல் முழுமையான ஊடக சுதந்திரம் என்று கூறுவது வெறும் கண்துடைப்பாகத்தான் அமையும்.

ஊடகத்துறையைச் சார்ந்த நான் பேசும் போது இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்டியே ஆகவேண்டும். அது யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமான இடைவெளி பற்றியதாகும். ஊடகங்களைப் பொறுத்தவரை இலங்கையில் இரண்டு மையங்கள் தான் உள்ளன. பாரம்பரியமாக கொழும்பு ஊடகங்கள் அனைத்தினதும் தலைமையகமாக – தளமாக இருக்கிறது. அதற்கு அப்பால் யாழ்ப்பாணம் தான் முழு இலங்கையிலுமே வளமான, ஊடகப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. தேசியப் பத்திரிகைகளுக்கு நிகராக, ஏன்! அதற்கும் மேலாக, சிறந்த செயற்பாட்டை யாழ்ப்பாண ஊடகக்கலாசாரம் தான் கொண்டிருக்கின்றது. கொழும்பிலிருக்கும் ஊடகங்கள் எதிர்கொள்ளாத – எதிர்கொள்ளவே முடியாத – பயங்கரங்களையெல்லாம் யாழ்ப்பாணத்து ஊடகங்கள் தான் எதிர்கொண்டிருக்கின்றன. அரச பயங்கரவாதம் உள்ளிட்ட எல்லா வன்முறைகளையும் அவை தான் கடந்த காலங்களில் எதிர்கொண்டிருந்தன. ஆனால், அவை குறித்து ஒரேயொரு விசாரணையைக் கூட இந்த நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்படவில்லை.



இலங்கை வரலாற்றிலேயே முதன் முதலில் ஊடக நிறுவனமொன்றுக்குள் புகுந்து, அங்கிருந்தவர்களைச் சுட்டுக்கொன்று, சொத்துக்களுக்கெல்லாம் சேதம் விளைவித்த சம்பவம் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி – சர்வதேச ஊடக சுதந்திர தினமான மே 03 ஆம் திகதிக்கு முதல் நள்ளிரவு – யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்த ஆயுததாரிகள் வெறியாட்டம் நடத்தி இரண்டு ஊழியரைச் சுட்டுக் கொன்றார்கள். 3 பேரைக் காயப்படுத்தினார்கள். ஒரு கோடி ரூபா அளவிலான சொத்துக்களை நாசமாக்கினார்கள். இலங்கையின் ஊடக வரலாற்றையே அதிர்ச்சியால் புரட்டிப்போட்ட இந்தச் சம்பவம் குறித்து இதுவரையில் எந்த விசாரணையும் இல்லை.

இந்த நல்லாட்சி அரசின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தத் தாக்குதல் இராணுவத்தினரின் ஆசீர்வாதத்துடனும், ஆதரவுடனும் தான் நடத்தப்பட்டதென்றாலும் அதனை நேரடியாகச் செய்தவர்களின் தலைவர் – தாக்குதலின் சூத்திரதாரி – முன்னைய ஆட்சியில் அமைச்சராக இந்தச் சபையில் இருந்தார். இன்று நாடாளுமன்ற உறுப்பினராக சுதந்திரமாகச் செயற்படுகிறார்.

தான் செய்த கொலைகளுக்காக, ஊடக நிறுவனங்களைத் தாக்கியமைக்காகத் தன்மீது வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படுமென்றோ, சிறையில் அடைக்கப்படுவோமென்றோ எந்த அச்சமுமின்றி, இங்கு அமர்ந்திருக்கும் போது, வெளியே ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் எப்படி முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்? அந்தக் குற்றவாளி அரசின் பங்காளிக் கூட்டணி ஒன்றிலேயே உப தலைவராக இருக்கும்போது, ஊடகவியலாளர்களால் எப்படி சுதந்திரமாகச் செயற்பட முடியும்? நல்லாட்சி அரசின் கீழும் இப்படியான குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்கின்ற போது ஊடகவியலாளர்களால் எப்படி முழுமையான சுதந்திரத்துடன் செயற்படமுடியும்?

எல்லா ஆட்சிகளும் இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்துகொள்ளும்போது ஊடகவியலாளர்கள் சுய தணிக்கைக்குள் கட்டுண்டு கிடப்பதைத்தவிர, வேறு என்ன வழிவகை இருக்கப் போகிறது? இப்போதும் அதுதான் நடந்துகொண்டிருக்கின்றது. தாங்கள் விரும்புபவற்றை எழுதவோ, பேசவோ முன்னர் ஒன்றுக்குப் பல தடவை யோசிக்க வேண்டியவர்களாகத்தான் ஊடகவியலாளர்கள் இருக்கின்றனர். அந்த நிலைமை மாற வேண்டுமென்றால் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். அந்த விடயத்தில் இந்த அரசு நேர்மையுடன் செயற்படவேண்டும்.

வடக்கில் பிரபல ஊடகவியலாளராக விளங்கிய நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. யின் முக்கியஸ்தர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். பின்பு அவர்கள் சட்டமா அதிபரின் சம்மதத்துடன் பிணையில் விடப்பட்டனர். இந்த வழக்கில் பிரதான எதிரியான ஈ.பி.டி.பி. உறுப்பினர் வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இன்றுவரை அவர் கைது செய்யப்படவோ அல்லது அவரைக் கைது செய்ய "இன்டர்போல்" அமைப்பைக் கோரவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கிழக்கில் ஊடகவியலாளர்களான சுகிர்தராஜன், நடேசன் போன்றோரின் கொலைகளுக்கும் நீதி கிடைக்கவில்லை. இதுபோன்று ஏராளமான தமிழ் ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் நீதியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றன. இந்த அரசாவது அதனை செய்யுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த அரசு அதில் இன்னமும் அக்கறைகாட்டவில்லையென்பது கவலைக்குரியது.

கடந்த 10 வருடங்களில் கொழும்பில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதற்கும், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டதற்கும் மேலாக வடக்கு, கிழக்கிலும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால், இந்த அரசு அவற்றில் ஒன்று குறித்துக்கூட இதுவரையில் விசாரணை நடத்தியதில்லை. ஏன்? தமிழ் ஊடகங்கள் அல்லது தமிழ் ஊடகவியலாளர்கள் என்ற பாரபட்சமா? இந்தப் பாரபட்சம்தான் கடந்த 60 ஆண்டுகளாக இந்த நாட்டைச் சீரழித்தது என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டின் ஏனைய சேவைத் துறையினரைப் போலவே ஊடகவியலாளர்களும் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பணிபுரிகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தமது உயிர்களைப் பணயம் வைத்துப் பணிபுரிகிறார்கள். ஏதோ செய்திகளை எடுத்துப் பிரசுரித்துவிட்டு அல்லது வெளிப்படுத்திவிட்டு அவர்கள் சொகுசாக வாழ்க்கை நடத்துவதாக எவரும் நினைப்பார்களானால், அது மிகவும் தவறான விடயமாகும். அன்றாட வாழ்வில் அவர்களும் மற்றவர்களைப் போலவே கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. பிள்ளைகள் இருக்கின்றார்கள். குடும்பப் பொறுப்புக்கள் இருக்கின்றன. வீட்டுப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை என்று நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்கள் வெளியிடும் செய்திகள், கட்டுரைகள், படங்கள் போன்றவற்றுக்கு எத்தனையோ விதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். ஆபத்துக்களைச் சந்திக்கின்றார்கள்.

இரவு, பகல் பார்க்காமல் உழைக்கின்றார்கள். பல வேளைகளில் சரியான நேரத்தில் சரியாக சாப்பிடாமல் ஒரு பணிஸ், ஒரு வடையைச் சாப்பிட்டுவிட்டு, தேநீர் கோப்பியை அருந்திவிட்டு கடமை புரிகின்றார்கள். சில வேளைகளில் அதிகாரிகளின் கோபம், படையினரின் தாக்குதல், பொலிஸாருடன் முறுகல் என தம் வாழ்க்கையை எப்போதும் ஆபத்துக்குள்ளாக்குகின்றார்கள். இவைகளைக் கவனித்து அவர்களுக்கும் உதவிகளை அளிக்க வேண்டும்.

சகல வசதிகளையும் செய்துகொடுத்து நிறைவான சம்பளமும் கொடுக்கும் அரச அதிகாரிகளுக்கு அரசு வாகன இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கொடுக்கின்றது. ஆனால், உயிரைப் பணயம் வைத்து மக்களுக்காகப் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு அத்தகைய ஒன்றைக் கொடுப்பதற்கு அரசு ஏன் சிந்திக்கவில்லை?

அவர்களுக்கும் அத்தகைய வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது பற்றி நிதியமைச்சர் பரிசீலிக்க வேண்டும். இந்த நாட்டின் ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் நான்காவது தூணகளும் இந்த ஆட்சி மாற்றத்தைச் சாதகமாக்கிய பங்காளிகளுமான ஊடகவியலாளர்களையும் இந்த அரசு தனது அங்கமாகக் கருத வேண்டும். ஆனால், இதுவரையில் அப்படிச்செய்யப்படவில்லை. இனியாவது அப்படிச் செய்ய வேண்டும். தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் ஊடகவியலாளர்களுக்குக் கிடைக்குமானால் அவர்களில் பெரும்பாலானவர்கள் வாகனங்களைக் கொள்வனவு செய்ய முடியும். ஆபத்து நேரங்களில் குறைந்தபட்சம் ஓடித் தப்பவாவது இது அவர்களுக்கு உதவியாக இருக்கும். (வ்)

# தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 30.08.2015 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 30.09.2015 வரை மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 19.12.2015ம் திகதி காலை 9.30 மணி முதல் இல.56/22/B, ஸ்டெனிலி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலக வளாகத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**இத் தங்க நகை ஆபரணங்கள் இலகு கொடுப்பனவுத் திட்டத்தின் கீழும் பெற்றுக்கொள்ளலாம்.**

தங்க ஆபரணங்கள் :
சங்கிலி / வளையல் / மோதிரம் / பிரேஸ்லட்

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2016**

காலம் - 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை
இடம் - கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
தலைமை - திரு.செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 24.01.2016 அன்று நடத்த தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 28.12.2015 திங்கட் கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பி வைக்கவும். அத்துடன் அங்கத்தவர்கள் பிள்ளைகள் 2015 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை, பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப்பின் அவற்றின் விவரங்களையும் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

செயலாளர்,
க.செல்வச்சந்திரன்.

(F/20776)(11,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த வலி. வடக்கு மக்கள் அனைவருக்கும் உதவிகள் தேவை

## மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் வேண்டுகோள்

வலி.வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 41 முகாம்களில் வாழும் மக்களில் ஒரு சிலருக்கே உதவிப் பொருள்கள் கிடைத்து வருகின்றன. ஏனை யோரையும் கவனத்தில் கொண்டு உதவிகள் வழங்க வேண்டும் - இவ்வாறு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர். இவர்களுக்குத் தொழிலில்லை. அத்துடன் கடும் மழையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த மக்களில் ஆயிரத்து 350 குடும்பங்கள் முகாம் களில் வாழ்கின்றனர். மீதி 8 ஆயிரம் பேர் முகாம்களுக்கு வெளியில் வசிக்கின்றனர். முகாம்களில் வசிப்பவர் களுக்கு அடிக்கடி உதவிகள் கிடைக்கின்றன. முகாம்களுக்கு வெளியே வசிப்பவர்களுக்கு எந்த உதவியும் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் துன்பப்படுகின்றனர்.

குறிப்பாக விளம்பரப்படுத்தப்பட்ட முகாம்களுக்கே உதவிகள் கிடைக்கின்றன. ஏனையோர்கள் உதவிகள் எப்போது கிடைக்கும் என்ற ஏக்கத்தோடே வாழ்கின்றனர். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இடம்பெயர்ந்தோருக்கு முன்னர் வழங்கி வந்த உலர் உணவு நிவாரணத்தை மீள வழங்க வேண்டும். உதவிகள் வழங்க விரும் புபவர்கள் வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்க அமைப்பிடம் விவரங்களை அறிந்து உதவிகளை வழங்க வேண்டும் - என்றார். (ற-ஐ-10)

### போர்...

இவ்வாறு இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட 47 வயதான யோகநாதன் புஸ்பதேவியின் மகள் ஜனாதிபதி ஆணைக்குழு முன் கண்ணீருடன் சாட்சியமளித்தார்.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் மூன்றாம் நாள் அமர்வு நேற்றுப் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்தயோகநாதன் புஸ்பதேவியின் தாயாரும் மகளும் சாட்சியமளித்தனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று எமது வீட்டிற்கு வெள்ளை வானில் வந்த சிலர் அம்மாவின் பெயரைக் கூறிஅழைத்தனர். வந்தவர்கள் அரைகுறையாகத் தமிழ் பேசியதுடன் சிங்களத்தில் அதிகமாகக் கதைதத்தார்கள். 2 பேர் முஸ்லிம்கள் அணியும் தொப்பி போட்டிருந்தனர். சிலர் முழுக்காற் சட்டையும் சிலர் அரைக் காற்சட்டையும் அணிந்திருந்தனர்.

வந்தவர்களில் இருவர் எனது வீட்டின் வேலியோரமாக நின்றிருந்தனர். இரவு என்பதால் அவர் களை எங்களால் இனங்காண முடியவில்லை. அப்பா இறந்து விட்டதால் அம்மாதான் சிறுகடை வைத்து எங்களை வளர்த்தவா. வானில் வந்தவர்கள் அம்மாவின் பெயரைக் கூறி அழைத்த போது யார் என்று பார்க்கச் சென்ற போதுஅவர்கள் அம்மாவைப் பிடித்தது கதறக்கதற இழுத்துச் சென்று வானில் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றுவிட்டனர்.

அன்றுஅம்மாவைக் கடத்திக் கொண்டு போனவங்கள்தான். இன்று வரை அம்மாவை நாம் காணவில்லை.நாங்கள் அம்மாவைத் தேடாத இடமில்லை.செய்யாத முறைப்பாடு இல்லை.எதிலும் பயனில்லை என கண்ணீருடன் மகள் சாட்சியமளித்தார். (வ-108)

### சிறப்பு...

பின் இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக, சிறப்புத் தூதுவர் ஒருவரை கொழும்புக்கு அனுப்பி வைக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாகிஸ்தானிடம் இருந்து ஜேஎவ்- 17 ரகத்தைச் சேர்ந்த 10 போர் விமானங்களை வாங்கும் இலங்கை அரசின் திட்டத்துக்கு இந்தியா எதிர்ப்பைத் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக, இந்தியாவின் கரிசனையை, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு தனிப்பட்ட முறையில் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், கொழும்புக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, இலங்கை வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து, இந்த விமானக் கொள்வனவு தொடர்பான இந்தியாவின் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடுத்த மாதம் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் போது, இந்தப் போர்விமானக்கொள்வனவுஉடன்பாட்டை அறிவிக்க பாகிஸ்தான் திட் டமிட்டுள்ளது.

இந்தநிலையில்,இந்த விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்த சிறப்புத் தூதுவர் ஒருவரை கொழும்புக்கு அனுப்ப புதுடெல்லி திட்டமிட்டுள்ளது. வரும், அடுத்த மாத முதல் வாரத்தில் புதுடில்லியின் சிறப்புத் தூதுவர் இலங்கைப் பயணத்தை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னர் முக்கியமான விவகாரங்கள் குறித்துப் பேசுவதற்காக, சிறப்புத் தூதுவர்களை இலங்கைக்கு இந்தியா அனுப்பி வைத்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனை நியமித்திருந்தார் அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங். அவர், போருக்குப் பிந்திய மீள்குடியமர்வு, புனர்வாழ்வு தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### வடக்கில்...

இவ்வாறு வடக்கு மாகாண புள்ளிவிவரக் கையேட்டின் விவரங்கள் தெரிவிக்கின்றன. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

2009 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 373 இந்து ஆலயங்கள் காணப்பட்ட நிலையில் 2014 ஆம் ஆண்டு அது 2 ஆயிரத்து 541 ஆக அதிகரித் துள்ளன. 221தேவாலயங்கள் காணப்பட்ட நிலையில் 2014 ஆம் ஆண்டு அது 260 ஆக அதிகரித்துள்ளன. மசூதிகள் 11 ஆக 2009 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலையில் தற்போது 18 ஆக அதிகரித்துள்ளன. விகாரைகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையில் 4 ஆகவே யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு 300 இந்து ஆலயங்கள் காணப்பட்ட நிலையில் 2014 ஆம் ஆண்டு அது 411 ஆக அதிகரித்துள்ளன. தேவாலயங்கள் 2009 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டு வரை 41 ஆகவே காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு 18 மசூதிகள் காணப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு அது 20 ஆக அதிகரித்துள்ளன. விகாரைகள் 2009 ஆம் ஆண்டு 22 ஆகக் காணப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு 23 ஆக அதிகரித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 309 இந்து ஆலயங்கள் 2009 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலையில் 2014 ஆம் ஆண்டு 488 ஆக அதிகரித்துள்ளன. 2009 ஆம் ஆண்டு 81 தேவாலயங்கள் காணப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு 129 ஆக அதிகரித் துள்ளன. 2009 ஆம் ஆண்டு மசூதிகள் எவையும் காணப்படாத நிலையில் கடந்த ஆண்டு 9 மசூதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதே போன்று விகாரைகள் எவையும் 2009 ஆம் ஆண்டு காணப்படாத நிலையில் கடந்த ஆண்டு ஓர் விகாரை அமைக்கப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு 133 இந்து ஆலயங்கள் காணப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு 229 ஆக அதிகரித்துள்ளன. 142 தேவாலயங் கள் காணப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு அது 224 ஆக அதிகரித்துள்ளன. 56 மசூதிகள் 2009 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலையில் அது தற்போது 80 ஆக அதிகரித்துள்ளன. 3 விகாரைகள் 2009 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலையில் அது தற்போது 8 ஆக அதிகரித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு 163 இந்து ஆலயங்கள் இருந்துள்ள நிலையில் தற்போது 399 ஆக அது அதிகரித்துள்ளன. தேவாலயங்கள் 37 ஆக 2009 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலையில் 66 ஆக அதிகரித்துள்ளன. மசூதிகள் 4 காணப்பட்ட நிலையில் அது கடந்த ஆண்டு 5 ஆக அதிகரித்துள்ளன. 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் விகாரைகள் எதுவும் காணப்படாத நிலையில் 2014 ஆம் ஆண்டு அது 11 ஆக அதிகரித்துள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-5)

### சோதிடத்தை...

புதுக்குடியிருப்பு முத்தையன் கட்டுப்பகுதியினைச் சேர்ந்த தாயொருவர் தனது மகன் காணாமற்போனமை தொடர்பில் சாட்சியமளித்திருந்தார். கடந்த 2008 ஆம் ஆண்டு, 17 வயதில் எனது மகன் கிருஸ்ணன் காணமற் போயிருந்தார்.

இது தொடர்பில் எல்லா இடங்களிலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. எப்படியாவது எனது மகனை கண்டுபிடித்துத் தாருங்கள் என்று அந்த தாய் உருக்கமாக ஆணைக்குழுவின் தலைவரிடத்தில் கேட்டு கொண்டார்.

இவ்வாறுகேட்டதாயிடம்ஆணைக் குழுவின் தலைவர் மைக்ஸ்வெல் பரணகம, உங்களுடைய மகன் உயிருடன் இருக்கின்றார் என்று நம்புகின்றீர்களா? எனக் கேட்டார்.

இதன் போது அந்த தாய் மகன் காணாமற்போகும் போது 17 வயது தான். அவனைத் தேடி களைத்து போய் கடைசியாக சோதிடர் ஒருவரிடம் கேட்ட போது, அவன் உயிருடன் தான் இருக்கின்றான் என்று சொல்லியிருந்தார்.

இதனால் எனது மகன் இப் போதும் உயிருடன் தான் இருப்பான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று கூறினார்.

இதன்போது, தாயையும் அங்கு இருந்த ஊடகவியலாளர்களையும் பார்த்து ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம,

சோதிடத்தை நம்புகின்றீர்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலின் போது சோதிடத்தை நம்பியிருந்தே தோற்றுப்போனார். சோதி டத்தை நம்பாதீர்கள். கடவுளை மட்டுமே நம்புங்கள் எனக் குறிப்பிட்டார்.

காணமற்போனவர்களுடைய உறவுகள் சோதிடங்களை நம்பி தமது பிள்ளைகள் உயிருடன் தான் இருக்கின்றார்கள் என்று எண்ணக் கூடாது. யதார்த்தங்களை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப் பிட்டார். (த-வ-21)

### பாப்பரசரை...

நாளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பார்வையிடத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (வ-சி)

**விற்பனைக்கு** தொடர்பு: 071 834 3033

ஆவரங்காலில் மூன்று பெரிய மாமரங்கள் விற்பனைக்கு உண்டு.

**வாடகைக்கு** தொடர்பு: 072 777 2222, 076 671 6793

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வியாபாரக் கட்டடத் தொகுதியில் முதலாம் மாடியில் 426 சதுரஅடி பரப்பளவு கொண்ட (நீளம் - 44" X அகலம் - 12") முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட உள்ளக மலசலகூடம், குளியலறை மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகள் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

30B கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு** தொடர்பு: 072 922 9424

சாவகச்சேரி மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசாகடை முன் வீதி) A9 வீதிக்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள 3பரப்புக் காணியில் குளாய்க்கிணற்றுடன் கட்டிமுடிக்கப்படாத வீடு விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

**தோட்டக்காணி விற்பனைக்கு** தொடர்பு: 072 670 9015

தொண்டமானாறு, கெருடாவிலில் உள்ள 10 பரப்பளவு கொண்ட நல்ல செழுமையான மண்வளம் கொண்ட தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

**தவறிவிட்டது** தொடர்பு: 077 662 4593, 077 198 3051

சுப்பிரமணியம் - கிரிதரன் ஆகிய எனது அடையாளஅட்டை (710821488V ) சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் வாகனம்(Tax, Insurance) என்பன நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வீதியில் தவறி விட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**சட்டமாணி அனுமதிப் பரீட்சை**
**(திறந்த பல்கலைக்கழகம்)**

பரீட்சையில் உயர் புள்ளி பெறுவதற்கான வகுப்பு
ஆரம்பம்:- 16.12.2015
புதன் - 8.30 AM

D.C.M சென்ரர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
யாழ்ப்பாணம்.
(66349)
(11.15)

**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**

**க.கை.விக்னேஸ்வரன்**
(யாழ். இந்து பழைய மாணவன்,
இலங்கை வங்கி அதிகாரி, சமூக திலகம்)

நாளை (15.12.2015) செவ்வாய்க்கிழமை பிறந்த தினத்தைக் கொண்டாடும் மணிவிழா நாயகனை நீண்டகாலம் வங்கிதனில் நிறைவாய் சேவை செய்து கடமையில் நிறைவு காணும் கண்ணியமான எங்கள் விக்கியண்ணாவை சிறந்த வாழ்வு நிறைந்து வாழ்க என வாழ்த்துவதோடு 19.12.2015 இல் யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் மணிவிழா பொலிவுற நடைபெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
1. தே.நகுலேஸ்வரன்
2. எஸ். குகதாசன் (ஒப்பந்தகாரர்)
3. [illegible] கச்சேரி
4. ரஜனிகாந் - ரஜனிதரன் (அம்பாள் மரக்காலை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி முத்துலட்சுமி நவரத்தினம்

தோற்றம்
04.06.1951

மறைவு
15.12.2012

மூன்றாண்டுகள் ஆனாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம் அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கலந்துவிட்டு சென்றதேனோ ?
அழியாத நினைவுகளால் என்றும் நீங்கள் எம்
நெஞ்சினில் வாழ்ந்திடுவீர்

குடும்பத்தினர்.

நவம் பந்தல் சேவை
நுணாவில் மத்தி , கல்வயல் றோட் , சாவகச்சேரி.



# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
மயில்வாகனம் சுந்தரலிங்கம்
(கிராம சேவையாளர் J/66/ J/67)



நல்லவராய் வாழ்ந்திட்ட காலங்களை
நாம் மறவோம் - என்றும்
உங்கள் திருமுகம் காணவே
வருந்துகின்ற சோகமென்ன
துக்கக் கதவுகளைத் திறந்துவிட்டு
தூக்கக் கதவுகளைத் தாழிட்டு
நிரந்தரமாய் துங்கி விட்டீரோ!
ஆண்டுகள் பல ஆயினும் - உம்
நினைவுகளுடன் என்றும் வாழ்ந்திருப்போம்

(66982)(12.15.18)

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

பிறப்பு
1953.03.15

இறப்பு
2010.12.14



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
03 . 10 . 1932

விண்ணில்
25 . 11 . 2014



(66982)(12.15.18)

அமரர்
கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்
(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்- வவுனியா, கச்சேரி, பொலிஸ்நிலையம்)

திதி: 14.12.2015

ஆண்டொன்று மறைந்து விட்டது ஐயா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய்
அநாதையாய் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை ஐயா
ஐயா என்று அழைக்க நீங்கள் இல்லையே
அடிமனதில் வலிதுடிக்க உயிரோடு வாழ்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலடி, காரைநகர்

குடும்பத்தினர்.


# ஆணைக்குழு ஊழியரின் கைபேசி மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன் தினம் காணாமற் போனதெனத் தெரிவிக் கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஊழி யரின் கைபேசி மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற காணாமற் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்குழுவில் அங்கம் வகிக்கும் பெண் ஊழியர் ஒருவ ரின் கைபேசி மதிய உணவுவேளையில் தவறவிடப்பட்டிருந்தது. இவ்வாறு தவற விடப்பட்ட கைபேசி அன்றைய தினம் மாலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக உரியவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கைபேசி, ஆணைக்குழுவில் பணி யாற்றும் இன்னொரு பெண்ணின் கைப் பையினுள் இருந்த நிலையிலேயே மீட்கப் பட்டுள்ளது. தவறுதலாக அந்தக் கைப் பையினுள் கைபேசி வைக்கப்பட்டதாக வும், அது நேற்று முன்தினம் மாலை யிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் கைபேசி காணாமற்போன தாகத் தெரிவிக்கப் பட்ட பகுதிக்குள் சி.சி.ரி.வி கமரா இல்லை என்றே மாவட்டச் செயலக வட்டாரங்களால் ஆணைக்குழுவுக் குத் தெரிவிக்கப் பட்டதாகவும், கண் காணிப்பு கமரா இயங்காமல் இருந் தது என்பது தவ றான தகவல் என் றும் குறிப்பிடப் பட்டுள்ளது.(வ-101)

## பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என தாக்குதல்

மட்டுவில் பகுதியில் இருந்து புத்தூர் பகுதிக்குக் கசிப்புக் கொண்டு வரப்படு கின்றது என்று அச் சுவேலிப் பொலி ஸாருக்குத் தகவல் வழங்கினாரென கசிப்புக் கொண்டு வந்தவர்கள், ஒரு நபரைத் தாக்கி விட் டுச் சென்றுள்ள னர்என்றுகூறப்படு கின்றது. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் வைத்தியலிங்கம் தயாளன் (வயது-34) என்ற நபரே தாக்குதலுக்கு உள் ளாகி அச்சுவேலிப் பிரதேச வைத்திய சாலையில் சேர்க் கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர் பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ற-ஜ-107)

## பொலிஸுக்கு சாராயம் விற்றவர் சிக்கினார்

வல்வெட்டித்து றைப் பகுதியில் பொலிஸாருக்கு சாராயம்விற்பனை செய்த ஒருவர் நேற்று முன்தினம் இரகசியப் பொலி ஸாரால் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் 180 மில்லிலீற்றர்கொள் ளளவு கொண்ட எட்டு அரச மதுபா னப் போத்தல்கள் விற்பனை செய்த போதே அவர் கைது செய்யப்பட் டார் என்று பொலி ஸார் தெரிவித்த னர். (ற-ஜ-107)


# 31 ஆம் நினைவு நாள்

சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட



அமரர்
கயிலாயபிள்ளை
அருள்மிகு மீனாட்சி அம்மன்
தேவஸ்தான தர்மகர்த்தா
நாகமணி அன்னம்மாவின்
செல்வப் புதல்வன்
அமரர்
கயிலாயபிள்ளை
அவர்களின்
31 ஆம் நாள் நினைவு நாள்

(66898)(11.15)

நாகமணி குடும்பம்.



# ஈரவிழிகளுடன் 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
தம்பிஜயா பொன்னம்பலம்



திதி: பூர்வபக்க திருதியை
எங்கள் குடும்பத்தின் குலவிளக் காய் வாழ்ந்து எங்களை அன்புடன் அரவணைத்து வாழ நன்நெறி காட்டி மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி
அருமைப் பிள்ளைகள். மருமக்கள் .
பேரப்பிள்ளைகள்

மண்ணில்
22.11.1932

உதிர்வு
26.11.2003

இல 14. கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு .



# 2ஆம் ஆண்டு நினைவு

அமரர்
குனேஸ்வரி
கனகசபாபதி
திதி: 14.12.2015



பிறப்பு
12.08.1944

இறப்பு
14.12.2013

ஆண்டுகள் இரண்டான போதும் மறக்க முடியவில்லை உமது இழப்பை அம்மா...
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றேன்...

திருமகள் வீதி,
அரியாலை.

கணவர்
கதிர்வேலு - கனகசபாபதி

(66848)(11.15)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 14.11.2015
சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள்
குலவிளக்கு
அமரர் மனோன்மணி
சின்னத்தம்பி



தோற்றம்
10.05.1940

மறைவு
14.11.2015

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (14.12.2015) திங்கட்கிழமை நண்பகல்
12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம்
தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

மஞ்சத்தடி,
இணுவில்.

(66847) (13.15)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு எதிராக அதிகளவு சாட்சியங்கள்

## காணாமற் போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில்

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணாமற் போனோர் குறித்து, விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்விலும் இராணுவத்துக்கு எதிராக அதிகளவான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் சாட்சியம் வழங்குவதற்கு 266 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 140 சாட்சியம் பதிவு செய்திருந்தனர். அத்துடன் புதிதாக 50 பேர் சாட்சியம் வழங்குவதற்கு பதிவு செய்திருந்தனர்.

பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களில் ஊரடங்கு வேளையில் இராணுவத்தினர் பலவந்தமாகத் தமது பிள்ளைகளை, கணவரை, உறவுகளைக் கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டுக்களே அதிகமாக இருந்தன. இராணுவத்தினருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை 92 பேர் சாட்சியம் பதிவு செய்திருந்த நிலை யில் நேற்றுமுன்தினம் 80க்கும் மேற் பட்ட சாட்சியங்கள் இராணுவத்தினருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக 10 முறைப்பாடுகளும், வெள்ளை வான் தொடர்பாக 7 முறைப்பாடுகளும், விடுதலைப் புலிகள் தொடர்பில் 5 முறைப்பாடுகளும், கடற்படையினருக்கு எதிராக 2 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, இனம்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டவை தொடர்பில் 50க்கும் மேற்பட்ட சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ற-ஜ-21)

---

## இராணுவம் கைது செய்த சகோதரன் நிலை என்ன?

### மீட்டுத் தாருங்கள் என சகோதரர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ.14

அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தங்கியிருந்த சுமார் 5 ஆயிரம் மக்களில் சுமார் 400 இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 6 பேர் தனியாகக் கொண்டு செல்லப்புட்டனர். அதில் எனது சகோதரனும் ஒருவர். இன்று வரை அவர் எங்கே என்பது எமக்குத் தெரியாது. எனது சகோதரனை எப்படியாவது மீட்டுத்தாருங்கள்.- இவ்வாறு ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தார் கடத்தப்பட்டவரின் சகோதரர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு அமர்வில் சாட்சியம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அல்லைப்பிட்டியில் 1990 ஆம் ஆண்டு அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தங்கியிருந்த வேளையில், ஊர்காவற்றுறையில் இருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் தேவாலயத்தில் தங்கியிருந்த சுமார் 5 ஆயிரம் மக்களில் சுமார் 400 இளைஞர்களைப் பிடித்து மண்டைதீவுக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து அவர்களில் 6 பேரைக் கைது செய்து ஹெலியில் பலாலிக்கு கொண்டு சென்றனர். அதனை விட சுமார் 65 பேரைத் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரை மட்டும் பின்னர் விடுதலை செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட எனது சகோதரன் உட்பட 6 பேர் தொடர்பிலும் எந்தத் தகவலும் தெரியாத நிலையில், குறித்த 6 பேரும் பலாலி மற்றும் வெலிஓயா இராணுவ முகாம்களில் உயிருடன் இருக்கின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா தெரிவித்திருந்தார்.

அவ்வாறாயின் அவர்கள் எங்கே? அவர்களை ஆணைக்குழு மீட்டுத்தர வேண்டும்- என்று அவர் சாட்சியமளித்தார். (ற-ஜ-101)

---

## கணவர் மீது துப்பாக்கி வைத்து மகனைக் கடத்தியது இராணுவம்

### மகனை மீட்டுத் தாருங்கள் என ஆணைக்குழு முன் தாய் கண்ணீர்

யாழ்ப்பாணம்,டிசெ.14

16 வயதுடைய எனது மகனை இராணுவத்தினர் துப்பாக்கி முனையில் கடத்திக் கொண்டு போனார்கள். இப்போது கூட அந்தச் சம்பவத்தை என்னால் மறக்க முடியாது. எனது மகனை மீட்டுத்தாருங்கள். - இவ்வாறு ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணாமற் போனோரை விசாரணை செய்யும் ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையிலேயே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

கொய்யாத்தோட்டம் பகுதியில் 2007 ஆம் ஆண்டு நாங்கள் வீட்டிலே இருக்கும் போது, வீட்டுக்குள் வந்த இராணுவத்தினர் தாங்கள் கொண்டு வந்த போக்கஸ் லைற்றை எங்களது முகத்தில் அடித்துத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர். நாங்கள் பெரிதாக சத்தம் போட்டோம். எவருமே வரவில்லை. அப்போது ஊரடங்குச் சட்டம் இருந்ததால் எங்களுக்காக எவரும் உதவ வர வில்லை.

இராணுவத்தினர் துப்பாக்கியை எனது கணவருடைய தலையில் வைத்து மகனை வருமாறு கூறினர். அப்போது எனது மகன் எனக்கு ஒன்றும் ஆகாது அம்மா என்று கூறிவிட்டு இராணுவத்தினரிடம் சென்றான். மகனை வெளியே இழுத்த இராணுவத்தினர் அவனை துப்பாக்கி முனையில் வீட்டுக்கு வெளியே கொண்டுசென்று வெள்ளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு போனார்கள். இன்றுவரை அவன் எங்கு இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது.

அம்மா அம்மா என்று கதறி அழுது கூப்பிடும்போதுகூட எனது மகனை காப்பாற்ற முடியாமல் போனது. 16 வயதுடைய எனது- மகனுக்கு என்ன தெரியும் என்று இராணுவம் அவனை இழுத்துச் சென்றது. நித்திரையாக இருந்த பிள்ளையை திடீர் என்று இழுத்துக் கொண்டு போனால் நாங்கள் என்ன செய்ய முடியும். நாங்களும் எல்லா இடமும் போய் போய்வாறம். எந்தத் தகவலும் இல்லை தயவு செய்து கண்டு பிடித்துத் தாருங்கள் - என்று அவர் கண் ணீருடன் சாட்சியமளித்தார்.

(ற-ஜ-21)

---

## சாவதற்குள் பிள்ளையை கண்டுபிடிச்சுத் தாங்கோ

### புற்றுநோயாளியான தாய் கதறல்

நெல்லியடி, டிசெ.14

நான் சாவதற்குள் எனது பிள்ளையையும், பேரப்பிள்ளையையும் கண்டு பிடிச்சுத் தாங்கோ. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.- இவ்வாறு காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு அமர்வில் கதறி அழுதார் புற்று நோயாளியான வயோதிபத் தாய்.



ஆணைக்குழுவின்அமர்வு நேற்றுமுன் தினம்பருத்தித்துறைபிரதேசசெயலகத்தில் நடைபெற்றது. புற்றுநோய்த் தாக்கத்தால் நடக்கமுடியாத நிலையிலும் குறித்த தாய் ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளித்தார்.

எனது மகனான புஸ்பநாதன் சுரேஸ் அவருடைய மனைவி சுகந்தி எனது பேரப்பிள்ளைகளான அபிசன், அபிராமி ஆகியோருடன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது காணாமற்போய் விட்டார்கள். அவர்கள் காணாமற் போன நாள் முதல் நான் தேட இடமில்லை. பிள்ளையைக் காட்டுங்கோ. நான் புற்று நோயாளி. நான் சாவதற்குள் எனது இரண்டு பேரப்பிள்ளைகளையும் மகனையும் காண வேண்டும். எனது பிள்ளையின் குடும்பத்தை தேடித்தேடி எனது கால்களும் ஓய்ந்து விட்டன. ஐயா உங்களுக்கும் புண்ணியம் கிடைக்கும். எனது பிள்ளை இருக்கும் இடத்தைக் கண்டறிந்து சொல்லுங்கோ- என்று அந்தத் தாய் கதறி அழுதார்.(ற-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## முகத்தில் மயக்கமருந்து விசிறி மகனைக் கடத்தியது ஈ.பி.டி.பி.

### ஆணைக்குழு முன்பாக தாய் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.14

தலையில் பலமாக அடித்து முகத்தில் மயக்க மருந்து விசிறி இராணுவ முகாம் முன்பாகவைத்து ஈ.பி.டி.பியினரால் எனது மகன் கடத்தப்பட்டார்.-இவ்வாறுகாணாமற் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம் அளித்தார் தாய் ஒருவர்.

ஆணைக்குழுவின்அமர்வு இரண்டாம் நாளாக நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் சாட்சியமளிக்கும் போதே தாய் ஒருவர் இவ்வாறு சாட்சியளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது-

2005 ஆம் ஆண்டு எனது மகள், மகன் ஆகிய இருவரும் காணாமற் போனார்கள். எனது மகள் கொழும்புத்துறையில் இருந்து எனது அண்ணா வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். அதன் பினனர் அவர் வீடு திரும்பவில்லை. மகள் காணாமற் போனது யாரால் என எவருக்கும் தெரியாது. நாங்கள் தேடினோம். ஆனால் இன்று வரை எனது மகள் இல்லை.

19 வயதுடைய எனது மகன் கொழும்புத்துறையில் உள்ள எங்களது வீட்டுக்குச் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும்போது, கொழும்புத்துறை இராணுவ முகாமில் உள்ள இராணுவம் மறித்து வாழைப் பழம் வேண்டிக் கொண்டு வரச்சொன்னார். அவனும் வாழைப்பழம் வேண்ட வெளிக்கிடும் போதுஅங்கே மோட்டார்சைக்கிளில் வந்த ஈ.பி.டி.பியினர், மகனின் தலையில் பலமாக அடித்துள்ளனர். அவன் மயங்காததால் முகத்திலே மயக்க மருந்து தடவி அவனை மயங்கச் செய்து கடத்தி கொண்டு போனார்கள். ஈ.பி.டி.பியைச் சேர்ந்த தாடி வைத்திருந்த ஒருவரே கடத்தினார்.

இராணுவமுகாமுக்குமுன்னாள் ஆள்களைக் கடத்துவது ஈ.பி.டி.பி தான். எனவே ஈ.பி.டி.பியிடம் உள்ள எனது மகனை மீட்டுத்தாருங்கள் கட்டாயமாக அவர்கள் தான் எனது மகனை கடத்தினார்கள் - என்றார் அவர். (ற-ஜ- 21)

---

## ஆயுததாரிகளின் மிரட்டலின் பின் இதுவரை மகனைக் காணவில்லை

### மகனைத் தொலைத்த தாய் கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

ஆயுதங்களுடன் கறுத்த உடையும் முகத்தில் துணி கட்டிக் கொண்டு வந்த 15 பேர் கொண்ட குழு எனது மகன் எங்கே என்று கேட்டு மிரட்டியது. அதன் பின்னரே எனது மகன் காணாமற் போனார். அப்போது ஈ.பி.டி.பியினர் மற்றும் இராணுவத்தினருடைய கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்தது.- இவ்வாறு தாய் ஒருவர் ஆணைக் குழு முன்பாக சாட்சியமளித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணாமற் போனவர்களுக்கான விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

நகை செய்து கொண்டிருந்த 33 வயதான எனது மகன் சோ.ஜனார்த்தனன் 2006 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் வீட்டில் இருந்து கடைக்குச் சென்ற போதே காணாமற் போனார். அவர் காணாமற் போன தினமன்று நள்ளிரவு ஒரு மணியளவில் வீட்டுக்கு முன்பாக வெள்ளை வான் வந்து நின்றது. அதில் இருந்து கறுத்த உடையணிந்தவாறு முகத்துக்குத் துணிகளைக் கட்டிக் கொண்டு, துப்பாக்கிகளைத் துக்கிக் கொண்டு வந்த 15 பேர் பூட்டியிருந்த எங்களது வீட்டுக் கதவை உடைத்து வீட்டுக்குள் வந்தார்கள். இவ்வாறு வந்தவர்கள் எங்கே ஜனார்த்தனன் என்று கேட்டு எங்களை பயமுறுத்தினர். எனது மகன் திரும்பி வரும் வரையில் எங்களை விட மாட்டோம்என்றும் சொன்னார்கள். சிங்களம் கலந்த கொச்சைத் தமிழிலேயே அவர்கள் கதைத்தார்கள். பின்னர் எனது மகன் வராததால் சிறிது நேரத்தில் வீட்டை விட்டு தாங்களுக்குள் கதைத்தவாறு சென்றுவிட்டார்கள். அவர்கள் போனதன் பின்பிலிருந்து எனது மகனைக் காணவில்லை. இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் இது தொடர்பாக முறைப்பாடுகளைப் பதிவு செய்தோம். ஆனால் இது வரையும் எந்தப் பதிலும் கிடைக்க வில்லை. காணாமற் போன மகன் எனக்கு வேண்டும். கண்டுபிடித்துத் தாருங்கள்- என்று தெரிவித்தார். (ற-ஜ-21)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சித்தி வீடு சென்ற தம்பியை சுட்டுக் கொன்றது இராணுவம்

## ஆணைக்குழு முன்பாக சகோதரி சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.14

நெல்லியடியில் உள்ள சித்தி வீட்டுக்குத் தனது நண்பனுடன் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது கிளானை சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவம் எனது தம்பியை சுட்டுக் கொன்றுவிட்டது. தம்பியின் நண்பனுக்கும் என்ன நடந்ததென்று தெரியவில்லை. - இவ்வாறு ஆணைக்குழு முன்பாக சகோதரி ஒருவர் சாட்சியமளித்தார்.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற ஆணைக்குழு அமர்வில் சாட்சியம் வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி தனது நண்பனுடன் சித்தி வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றவர்கள் வீடு திரும்பவில்லை. அன்று இரவு 10 மணியளவில் கிளானைச் சந்தியிலிருந்த ஆமி காம்ப் பக்கமாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

இராணுவ முகாமுக்கு அருகில் ஒரு சாறமும், ஒரு ஆளும் குருதி வெள்ளத்தில் இருப்பதாக பார்த்தவர்கள் வந்து சொன்னார்கள். உடனடியாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு அந்த இடத்துக்கு எனது சித்தப்பாவும் நானும் போய்ப் பார்த்தோம். அங்கிருந்த சாறம் என்னுடைய தம்பியுடையது. அவரது உடலை அந்த இடத்தில் காணவில்லை.

யாராவது வைத்தியசாலையில் ஒப்படைத்திருப்பார்கள் என எண்ணி மந்திகை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை போன்றவற்றுக்குப் போய் பார்த்தோம். அங்கும் அவரது உடல் கிடைக்கவில்லை. பின்னர் யாக்கரையில் இருந்த இராணுவ முகாமுக்குச் சென்றும் விசாரித்தோம். அவர்கள் தங்களுக்கு அப்படியொரு சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என மறுத்துவிட்டனர். எனது தம்பியோடு போன அவனது சிநேகிதனும் அன்றைய தினமே காணாமல் போய்விட்டார்.

இது தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு போன்றவற்றிலும் எழுத்து மூலமும், வாய் மூலமும் முறைப்பாடு செய்தோம். எந்தத் தகவலும் இதுவரை இல்லை. எல்லா இடங்களுக்கு சென்றும் சாட்சியமளிக்கிறோம். எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கவில்லை. தம்பி இறந்துவிட்டார் என்பதை மனம் எற்றுக் கொள்ளவில்லை.- என்று சாட்சியமளித்தார்.

(ற-ஜ-ரி2)

# கணவர் எங்கே எனக் கேட்டதால் சிறையில் அடைக்கப்பட்டேன்

## ஆணைக்குழு முன்பாக மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

எனது கணவரைக் காணவில்லை என ஈ.பி.டி.பி, இராணுவத்தினருடன் சண்டையிட்ட காரணத்தால் என்னையும் இயக்கம் எனக் கூறி 4 வருடங்களாக என்னைச் வெலிக் கடைச்சிறையில் அடைத்து வைத்திருந்தனர். நான் குழந்தையுடன் தான் சிறையில் துன்பப்பட்டேன்.- இவ்வாறு காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் பெண் ஒருவர் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது -

எனது கணவர் வேலணை, புளியங்கூடல் சிவன் கோவிலடியில் வைத்து 2007 ஆம் ஆண்டு சிவராத்திரி தினத்தன்று, புகையிலைக்குத் தண்ணி இறைத்து விட்டு வந்தபோது கடத்தப்பட்டுள்ளார். சிவன் கோவில் முதலாளி நேரில் கண்டதாக மறுநாள் என்னிடம் தெரிவித்தார்.

கணவர் இயக்கத்தில் இருந்த காரணத்தால் தான் பிடித்தார்கள். அவரைத் தேடி நான்கு தடவைகளுக்கு மேல் புலனாய்வுப் பிரிவினர் வீடு தேடி வந்தனர்.

6 மாதத்துக்கு முன்னர் பெரிய மாதா கோவில் அருட் தந்தையிடமிருந்து கணவர் மட்டக்களப்பில் முகாம் ஒன்றில் இருக்கின்றார் என்று கடிதம் வந்தது.

கணவரைத் தேடி நான் பட்ட கஸ்டத்தினால் திரும்பவும் அலைந்து தேட முடியாதளவு மன வேதனை. திரும்ப ஏதாவது பிரச்சினை வரும் என்ற பயம் வசதி இல்லாத காரணத்தால் தேடவில்லை. தயவு செய்து எனது கணவரைத் தேடிக் கண்டு பிடித்துத் தாருங்கள். – என்றார். (ற-ஜ-ரி6)

> முகாமில் வைத்து எனக்கு முன்னால் வெளிச் சுவரில் வைத்து பிள்ளை 'அம்மா..அம்மா' என்று கதறக் கதற அடித்தார்கள்.

# பிஸ்கட் வாங்கச் சென்றவனை கண்முன் இழுத்து சென்றனர்

## ஆணைக்குழு முன்பாக தாய் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.14

தங்கைக்கு பிஸ்கட் வாங்கச் சென்றபோது யாழ். கச்சேரி வீதியில் வைத்து எனது பிள்ளையை என் முன்பாக இழுத்துச் சென்றனர். தயவு செய்து எனது பிள்ளையைக் கண்டுபிடித்துத்தாருங்கள். - இவ்வாறு கண்ணீர் விட்டுக் கதறி அழுதார் தாய் ஒருவர்.

நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு நடைபெற்றது. அதில் சாட்சியமளிக்கும்போதே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது –

எனது மகன் லோகநாதன் பிரதீபன் 2008 ஆம் ஆண்டு, தங்கைக்கு பிஸ்கற் வாங்கக் கடைக்கு போன போது இராணுவம் பிடித்துச் சென்றது.

எனது பிள்ளையை ஊரெழு இராணுவ முகாமில் தான் முதலில் வைத்திருந்தார்கள். அந்த முகாமில் வைத்து எனக்கு முன்னால் வெளிச் சுவரில் வைத்து பிள்ளை 'அம்மா..அம்மா' என்று கதறக் கதற அடித்தார்கள்.

என்னுடைய பிள்ளையைத் தேடி பூசா இராணுவ முகாமுக்கும் நான் தேடிச் சென்றேன். அங்கு என்னுடைய பிள்ளை என்று வேறொருவரைக் காட்டினர். நான் அது என்னுடைய பிள்ளை இல்லை என்று சொன்னேன். என்னுடைய பிள்ளை அங்கு தான் இருக்கின்றான் என்று கூறினேன். தொடர்ந்து கதைக்க விடாமல் சிறைச்சாலை அதிகாரி அடித்து இழுத்துச் சென்றார்.

எனது பிள்ளை ஏதாவது சிறையில் கைதியாக அல்லது இராணுவ முகாமில் இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன். எனக்கு பிள்ளையைக் கண்டு பிடித்துத் தாருங்கள். உங்களுடைய எந்த வாழ்வாதார உதவியும் தேவையில்லை. பிள்ளையைத் தேட எனக்கு எந்த விதமான வசதியும் இல்லை. - என்று கண்ணீருடன் சாட்சியமளித்தார். (ற-ஜ-ரி6)



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஆணைக்குழு அமர்வில் சாட்சியம் அளித்த ஒருவர்.

# திருமண வீட்டுக்குச் சென்றவர் இராணுவத்தால் கடத்தப்பட்டார்

## மீட்டுத் தருமாறு தாய் கதறல்

கரணவாய், டிசெ.14

திருமண வீட்டுக்குச் சென்ற எனது 16 வயது மகனை உடுவிலில் பஸ் ஏற நின்ற போது இராணுவத்தினரே பிடித்துச் சென்றனர். எனது பிள்ளையை மீட்டுத் தாருங்கள்.- இவ்வாறு விசாரணை ஆணைக்குழுவிடம் மன்றாடினார் தாயொருவர்.

காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு அமர்வுகள் நேற்று பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

அதில் சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது–

2007 ஜனவரி மாதம் முதலாம் திகதி எனது மகன் மதனசீலன் வீட்டிலிருந்து உடுவிலிலுள்ள உறவினர் வீட்டின் திருமண வீட்டுக்குச் சென்றவர் இன்று வரை வீடு திரும்பவில்லை.

எனது பிள்ளை வீடு திரும்பாததை அடுத்து உடுவிலுக்குச் சென்று விசாரித்த போது மகன் உடுவிலில் பஸ்ஸுக்கு நின்ற போது இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக் உடுவில் உள்ள ஆமிக் காம்பில் சென்று விசாரித்த போது தாம் அவரைக் கைதுசெய்யவில்லை என்று தெரிவித்தனர். இதனை அடுத்து மனித உரிமைகள் ஆணைக் குழு, ஐ.சி.ஆர்.சி எனப் பல இடங்களில் முறையிட்டும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

16 வயதில் காணாமல் போன எனது பிள்ளைக்கு தற்போது 24 வயதாகிறது. தயவு செய்து நீங்களாவது எனது பிள்ளை எங்கிருக்கிறான் என்று கண்டுபிடித்துச் சொல்லுங்கோ. – என்று அந்தத் தாய் கண்ணீருடன் தெரிவித்தார். (ற-ஜ-108)

# இராணுவத்தினரால் கடத்தப்பட்ட மைத்துனர் பற்றித் தகவலில்லை

## மீட்டுத் தருமாறு பெண் கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிசெ.14

எனது கணவரின் தம்பி தொலைக்காட்சி வாடகைக்கு விட்டுத் திரும்பி வரும் வழியில் இராணுவத்தால் கடத்தப்பட்டார். பல இடங்களுக்கு அலைந்தும் அவர் பற்றிய தகவல் இல்லை. - இவ்வாறு ஆணைக்குழு முன்பாக சாட்சியம் வழங்கினார் பெண்ணொருவர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆணைக்குழு அமர்விலேயே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது–

எனது கணவரின் தம்பி 24 வயதுடையவர். அவர் கடத்தப்பட்டதை ஒருவர் நேரில் கண்டதாக மறுநாள் காலையில் தான் எமக்குத் தெரிய வந்தது.

நானும் கணவரும் சின்னக் கடை இராணுவ முகாமுக்குச் சென்று கேட்ட போது 3 நாள்களால் விசாரித்து விட்டு திரும்ப விடுவதாக கூறி கடத்தியவரின் அடையாள அட்டையை அங்கு நின்ற பிரிகேடியர் எங்களிடம் இருந்து வாங்கினார்.

நாம திரும்ப 3 நாள்களால் போன போது 512 ஆவது இராணுவப் பிரிவுக்குப் போகுமாறும், தாம் கடத்தவில்லை அடையாள அட்டை எம்மிடம் தரவும் இல்லை என கடும் தொனியில் தெரிவித்தனர்.

அதனால் நாம் 512 ஆவது பிரிவுக்குச் சென்றோம். அங்கு பிடித்த இடத்தில் உள்ள இராணுவ முகாமில் தான் வைத்திருப்பார்கள் சின்னக்கடை இராணுவ முகாமுக்குப் போகுமாறு தெரிவித்தனர். கடத்தியதாக சாட்சி சொன்னவரை இராணுவம் வீடு தேடிச்சென்று மிரட்டியதால் அவர் தொடர்ந்து தேட எமக்கு உதவவில்லை.

இது தொடர்பாக அனைத்து இடங்களிலும் முறைப்பாடு செய்தோம். தொடர்ந்து தேடி அலைந்தோம் கண்டுபிடிக்கவில்லை. மனித உரிமை ஆணைக்குழு மூலமாக வழக்கு நடந்தது. இடையில் அது தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக குறித்த இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும். தொடர்ந்து மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டும்.- என்று சாட்சியமளித்தார். (ற-ஜ-ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிணற்றை புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.14
சுனாமி தாக்கத்தின்போது முற்றாக அழிவடைந்த சுழிபுரம் மேற்கு புளியந்துறை சுடலைக் கிணறு பல வருடங்களாக அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.
இதனை மீள்புனரமைத்துத் தருமாறு சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் அமைப்பு வலி.மேற்கு பிரதேச செயலரை கேட்டுள்ளனர்.
புளியந்துறை சுடலைக் கிணறு மீள்புனரமைப்புச் செய்வதுடன், அந்தக் கிணற்றுடன் சம்பந்தப்பட்ட ஏனைய உட்கட்டுமானங்களையும் மீள்புனரமைப்புச் செய்து தரவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ஐ-50)

# சாதாரண தரப் பரீட்சைக் காலத்தில் சீரான பஸ் சேவையை வழங்குங்கள்

## போக்குவரத்து அமைச்சர் பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14
தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக் காலத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் வடக்கு மாகாணத்தின் சகல அரச மற்றும் தனியார் பஸ்கள் தமது சேவையை வழங்கவேண்டும் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் அறிவித் துள்ளார்.
அரச மற்றும் தனியார் பஸ் தாமதமாகப் புறப்படுவதால் குறித்த நேரத்துக்குப் பரீட்சைக்குச் செல்வதற்கு முடியாமல் உள்ளது என்று மாணவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் போக்குவரத்து அமைச்சு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.
தற்போதைய பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் போக்குவரத்துச் சீரின்மையால் பரீட்சை நிலையங்களுக்கு தாமதமாக வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்தப் பொதுப் பரீட்சை மாணவர்களுக்கு முக்கியமான ஒரு பரீட்சையாக உள்ளது.

> “அரச மற்றும் தனியார் பஸ் தாமதமாகப் புறப்படுவதால் குறித்த நேரத்துக்குப் பரீட்சைக்குச் செல்வதற்கு முடியாமல் உள்ளது.”

எனவே இந்த விடயத்தில் அசட்டையில்லாது சகல பயணிகள், நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சகல அரச மற்றும் தனியார் போக்குவரத்துச்சேவைக்குப் பொறுப்பான அதிகாரிகளும் இதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்– என்று அமைச்சர் கூறியுள்ளார். (த-ஐ-21)

# வலி. கிழக்கில் 754 குடும்பங்களுக்கு கடனடிப்படையில் மின் இணைப்பு

அச்சுவேலி, டிசெ. 14
வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 754 குடும்பங்களின் வீடுகளுக்குக் கடன் அடிப்படையில் மின் இணைப்பை வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
இதற்கமைவாகக் கடன் அடிப்படையில் மின்சார இணைப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
இலங்கை மின்சார சபை அதிகாரிகள் கடன் அடிப்படையில் மின்னிணைப்பு வழங்கும் செயற்பாடு தொடர்பாக வீட்டு உரிமையாளர்களுக்கு விளக்கிக் கூறியதோடு, வீட்டுக்கு மின்னிணைப்புப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் ஒப்பந்தப் படிவங்களை வழங்கியுள்ளனர்.
இந்த மின்சார இணைப்பு வழங்கிய செலவுத் தொகையை எதிர்காலத்தில் தவணை அடிப்படையில், மாதாந்த மின்சாரக் கட்டணத்துடன் சேர்த்து வீட்டின் உரிமையாளர்கள் செலுத்த வேண்டும்.
வலி.கிழக்கில் இருந்து கடன் அடிப்படையில் மின்னிணைப்பு பெறுவதற்கு 850 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்த போதிலும், வருமான நிலை குடும்பநிலை என்பனவற்றின் அடிப்படையில் 754 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (த-ஐ-11)



யாழ். பொது நூலகத்தில் இந்திய முனையம் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கான இந்தியாவின் உயர்ஸ்தானிகர் வை.கே.சின்காவால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாணத்தின் ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பளியக்காரா, யாழ்.மாவட்டத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா, யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன், யாழ். நூலகத்தின் முகாமையாளர், ஊழியர்கள் பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-ரி5)

### வைத்தியசாலை அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.14
தென்மராட்சிப் பிரதேச வைத்தியசாலைகளின் கட்டுப்பாட்டுக் குரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் தென்மராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.
வரணி பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளன.
இந்தக் கலந்துரையாடலில் வைத்தியசாலைகளின் நோயாளர் நலன்புரிசங்க நிர்வாகிகள் கலந்து கொண்டதுடன், வைத்தியர்கள் தமது கோரிக்கைகளையும் முன்வைத்தனர். (ற-ஐ-10,122)

# ஒலிபெருக்கி வசதியுடன் கழிவகற்றும் வாகனம்

## சாவகச்சேரி நகர சபை நடவடிக்கை

சாவகச்சேரி, டிசெ.14
சாவகச்சேரி நகரசபையின் ‘தூய்மையான நகரம்’ எனும் செயற்றிட்டத்தின் கீழ் கழிவகற்றும் வாகனங்கள் விசேட ஒலி பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் வட்டார ரீதியாக கழிவகற்றலுக்கு வரும்சமயம் விசேட ஒலி எழுப்பும் என்றும் அந்த வேளையில் வரியிறுப்பாளர்கள் தமது வீடுகளில் சேகரித்து வைத்துள்ள திண்மக் கழிவுப் பொருள்களைக் கையளிக்க முடியும் என்றும் சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.
தற்போது வீதிகளில் பைகளில் கட்டப்பட்டு வைக்கப்படும் கழிவுப் பொருள்களை நாய்களும், பறவைகளும் கொட்டிச் சிந்துவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது.
அதனால் வரியிறுப்பாளர்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருள் களை வளவுக்குள் வைத்திருக்குமாறும் சபையின் கழிவு அகற்றும் வாகனங்கள் வரும் வேளையில் வாகனத்தில் வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
விசேட ஒலி எழுப்பாமல் வாகனம் வருவதை அவதானித்தால் உடனடியாக 021 227 0806 என்னும் தொலைபேசி எண்ணுக்கு அழைப்பெடுத்து அறிவிக்குமாறும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-9)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வவுனியாவில் முன்னெடுப்பு

வவுனியா, டிசெ.14
வவுனியா மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வவுனியா மாவட்டப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.
இதன்போது பொதுச் சுகாதாரப் பிரிசோதகர்கள் பொது மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், எதிர்வரும் புதன்கிழமையிலிருந்து வீடுகள், வியாபார நிலையம், அரச திணைக்களம் ஆகிய இடங்களுக்குச் சென்று தரிசிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.
தற்போது காணப்படும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பொது மக்கள் தமது இருப்பிடங்களைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும், நுளம்புகள் உற்பத்தியாவதற்கு சாதகமற்ற சூழலைப் பேணுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.
இதேவேளை –நுளம்பு பெருக்கெடுக்கும் இடங்கள் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ)



### யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தால் சமூக சேவைகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14
உலக பார்வை தினத்தை முன்னிட்டு ஜெய்ப்பூர் நிறுவனத்தின் ஏற்பாட்டில், யாழ். போதனா வைத்தியசாலையினரின் ஒத்துழைப்புடன் கண்பார்வை குன்றிய 31 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மூக்குக் கண்ணாடிகளை வழங்க நல்லூர் அரிமாக் கழகத்தினர் அனுசரணை வழங்கியுள்ளனர்.
இதேவேளை– சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு ஜெய்ப்பூர் நிறுவனத்தினரால், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட 141 பயனாளிகளுக்கு புதிய செயற்கை அவயவங்களுக்கான அளவு எடுத்தல், செயற்கை அவயவத்தின் திருத்த வேலைகள், நடமாட உதவும் உபகரணங்களும், வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. (ற-ஐ-ரி5)

# வெள்ளத்துக்கு இட மண் ஏற்றிய டிராக்டரைப் பிடித்த பொலிஸார்

## விடுவிக்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்றம்

சாவகச்சேரி,டிசெ.13
வெள்ளம் தேங்கி நின்ற வீதிகளுக்கு போடுவதற்காக வளவொன்றில் இருந்து கிரவல் மணலை ஏற்றிச் சென்ற வேளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மூன்று டிராக்டர்கள் கிராம அலுவலரின் வேண்டுகோளின் பிரகாரம் சாவகச்சேரி நீதிமன்றால் விடுவிக்கப்பட்டன.
எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதி வீதி புனரமைப்பின் போது காணியொன்றில் பறிக்கப்பட்ட கற்கள் மற்றும் கிரவல் மணல் புனரமைப்புக்குப் பயன்படுத்திய பின்னர் மிகுதி ஏற்றிச் செல்லப்பட்டது. எனினும் அங்கு சிறு அளவில் கற்களும் கிரவலும் இருந்துள்ளன.
இந்த நிலையில் அண்மையில் பெய்த மழையால் அங்குள்ள ஏனைய வீதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. அந்தப் பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பிரிவு கிராம அலுவலர் காணி உரிமையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, காணியில் விட்டுச் சென்ற கழிவுப் பொருட்களான சிறு கற்கள் மற்றும் கிரவல் ஆகியவற்றை உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிப் பறிக்க ஏற்பாடுகள் மேற்கொண்டனர்.
உழவு இயந்திரங்கள் கிரவலைப் பறித்துக் கொண்டிருந்த வேளையில் கொடிகாமம் பொலிஸார் கழிவுகளை ஏற்றிய 3 உழவு இயந்திரங்களையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.
அனுமதிப் பத்திரமின்றி மண் ஏற்றினர் என்று மூன்று உழவு இயந்திர சாரதிகள் மீதும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது காணி உரிமையாளர், பிரிவு கிராம அலுவலர், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் நீதிமன்றுக்குச் சமுகமளித்து நிலைமைகளை நீதிமன்றில் தெரிவித்தனர்.
இதனையடுத்து மணலுடன் கைப்பற்றப்பட்ட மூன்று உழவு இயந்திரங்களையும் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டிருந்த கிரவல் வெள்ளம் காணப்பட்ட பகுதிகளில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நீதிவானின் அனுமதியுடன் பறிக்கப்பட்டது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிச் சபைகளில் 25 சதவீதமான பெண்கள்

கொழும்பு, டிசெ. 14
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வேட்பாளர்களில் 25 சதவீதம் பெண்கள் உள் வாங்கப்பட வேண்டும் என்ற சட்டவரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால, பெண்களே பெண்களுக்கு வாக்களிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
எல்லை நிர்ணயம் தொடர்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த நிலையில் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் காத்திரமான

> “உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது பெண்கள் 25 சத வீதம் உள்வாங்கப்பட வேண்டும் என்ற சட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.”

முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். எனவே, இதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம்.
எல்லை நிர்ணயத்தின் போது அரசியல் கட்சிகளின் வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறாமல், மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் எண்ணங்கள் வெற்றி பெறும் வகையில் அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.
இதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் போது பெண்கள் 25 சத வீதம் உள்வாங்கப்பட வேண்டும் என்ற சட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனினும், பெண்களுக்கு பெண்களே வாக்களிப்பதில்லை. பெண்கள் பெண்களுக்கு வாக்களிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.
இதேவேளை, உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேசியப் பட்டியல் மூலமாக பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான யோசனையொன்றை எதிர்காலத்தில் கொண்டுவரத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

## நல்லாட்சி அரசில் மேலும் மூன்று பிரதியமைச்சர்கள்

கொழும்பு, டிசெ.14
ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்துஉருவாக்கியுள்ள இந்த நல்லாட்சி அரசில் பிரதியமைச்சர்களாகமேலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.
ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பாலித தேவரப்பெருமவுக்கும், ஏனைய பிரதியமைச்சர் பதவிகள் இரண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொதுசன ஊடகப் பிரதியமைச்சராக கரு பரணவிதாரண சத்தியப்பிரமாணம் செய்து கொண்டிருந்ததையடுத்து வெற்றிடமாகியுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதியமைச்சர் பதவிக்கு சுதந்திரக் கட்சியின் இரு இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.
எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறும் வரவு–செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு அல்லது குழுநிலை விவா தத்தில் அந்த இருவரும் வரவு–செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-22)

## மாணவர்கள் மீதான தாக்குதல்; பொலிஸ் அதிகாரி பணி நீக்கம்

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி (எச்.என்.டி.ஏ) மாணவர்களது போராட்டத்தில், அவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துக்குப் பொறுப்பாக இருந்ததாகக் கூறப்படும் பொலிஸ் பொறுப்பதிகாரி இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ்பேச்சாளர் தெரிவித்தார்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக இந்தப் போராட்டம் கடந்த மாதம் நடத்தப்பட்டது. அது எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக இருந்ததால் மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதனால் பல மாணவர்கள் படுகாயமடைந்தனர்.
அது தொடர்பில் மாணவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்திருந்தனர். அந்த விவகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு வரை சென்று சிக்கலை ஏற்படுத்தியிருந்த நிலையிலேயே, கிருலப்பனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவரே சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.
குறிப்பிட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரை அண்மையில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.
இதுதவிர, 25 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரிக்குக் கொழும்பு பிரதான நீதிமன்று பிணை வழங்கியுள்ளது.
கடந்த நான்காம் திகதி இலஞ்ச ஊழல் குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.
அவரைப் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றில் கோரப்பட்டது. அதன்படி அவர் 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார். (த-4)

# பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட வேண்டும்

### கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முகமட் நசீர் தெரிவிப்பு

அம்பாறை,டிசெ.14
பயங்கரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கான அனைத்து சேவைகளும் இன, மத, மொழி வேறுபாடின்றி செய்யப்பட வேண்டும். எமது மாகாணத்துக்கான அனைத்து அதிகாரங்களும் கிடைக்கும் பட்சத்தில், அனைத்து மக்களுக்கும் சகல வசதிகளையும் பெற்றுக் கொடுக்க முடியும்.– இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முகமட் நசீர்.
சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நாவிதன்வெளி அன்னமலை கிராமத்தில் உள்ள ஆரம்பப் பராமரிப்பு வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கும் போது:
தற்போது நல்லாட்சியில் மூவினத்தையும் சார்ந்தவர்கள் பங்கெடுத்திருப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். தற்போது மாகாண ஆட்சியிலும், மத்திய அரசிலும் மூவினங்களையும் சேர்ந்த பெரும்பாலான கட்சிகள் ஒன்றிணைந்து நல்லாட்சியை நடத்தி வருகின்றன.
கட்டடங்களைத் திறந்து வைப்பதன் மூலம் சுகாதாரத் துறையை வளர்ச்சியடைய வைக்க முடியாது. அதற்கான வைத்திய உபகரணங்களையும், வைத்தியர்களையும், உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் நியமித்து பொதுமக்களுக்குத் தேவையான மருந்து வகைகளையும்வழங்கினால்தான் சிறந்த சுகாதார சேவைகளை வழங்க முடியும்.

> “சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நாவிதன்வெளி அன்னமலை கிராமத்தில் உள்ள ஆரம்பப் பராமரிப்பு வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது.”

அத்துடன் கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களுக்குச் சிறந்த சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்கான வைத்திய சாலைகளையும், அதற்குத் தேவையான வைத்திய உபகரணங்கள், தட்டுப்பாடற்ற மருந்து வகைகளையும், வைத்தியர்களையும் நியமிப்பதற்கான சகல முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.– என்றார். (ற-ஐ-30)

## 61 ஆயிரம் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும்

கொழும்பு, டிசெ.14
கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 61 ஆயிரம் சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துப் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
இந்த மாதத்தில் இதுவரை 15 ஆயிரம் பேர் போக்குவரத்து விதிமுறைகளை மீறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் தற்போது போக்குவரத்து விதிமுறைகளை மீறிப் பயணிக்கும் சம்பவங்களே அதிகரித்துள்ளதாகப் பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர்.
தற்போது நீதிமன்றங்களில் அதிகளவு வழக்குகள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிரானதாகவே உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (த-ஐ-4)

## திருப்பதி ஆலயக் காணிக்கையை கதிர்காமத்துக்கு வழங்க ஏற்பாடு

கொழும்பு,டிசெ.14
உலகிலேயே அதிகளவு வருவாயைப் பெறும் இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் உள்ள திருப்பதி ஆலயத்தின் காணிக்கை உண்டியல்களில், இலங்கைப் பக்தர்களால் காணிக்கைகளாகச் சுமார் 20 லட்சம் ரூபா வரை இடப் பட்டுள்ளது.
இந்தப் பணத்தைக் கதிர்காம ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்குவதற்கு திருப்பதி ஆலய தர்மகர்த்தா சபை இணக்கம் தெரிவித்திருப்பதாகக் கதிர்காமப் பெருங்கோயிலின் பஸ்நாயக்க நிலமேயான டீ.பீ.குமாரகே தெரிவித்துள்ளார்.
இந்தக் காணிக்கைகளில் இடப்பட்டுள்ள நாணயக் குற்றிகளின் நிறை அதிகமாக இருப்பதால், அவற்றைச்சென்னையிலிருந்து கப்பல் மார்க்கமாக எடுத்து வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-22)

# உரமானியம் இல்லையேல் நாடாளுமன்றம் முற்றுகை

### விவசாயிகள் சம்மேளனம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.14
விவசாயிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த உரமானிய உதவிகளை அரசு வழங்கத் தவறின் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகளுடன் நாடாளுமன்றம் மற்றும் அலரிமாளிகையை எதிர்வரும் 19 ஆம் திகதி முற்றுகையிடப் போவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் அபாய அறிவிப்பு விடுத்துள்ளது.
விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உர மானியங்களை இடைநிறுத்தியுள்ளமைக்கு எதிராகக் கடந்த வாரம் தொடர்ச்சியான சத்தியாக்கிரகங்கள், நடைபவனிகள் தம்புள்ளை மற்றும் எம்பிலிப்பிட்டியாவில் நடத்தப்பட்டன.
இந்த நிலையில் அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மஹியங்கனை, அம்பாறை, பொலனறுவை, கந்தளாய், பதுளை உள்ளிட்ட விவசாயப் பிரதேசங்களில் நாடு தழுவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சத்தியாக்கிரகப் போராட்டங்களை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்துடன் இந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெறும் வரவு–செலவுத் திட்ட வாக்கெடுப்புக்கு முன்னர், உரமானியம் தொடர்பான உறுதிமொழியை அரசு விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.
தவறும் பட்சத்தில் லட்சக்கணக்காக விவசாயிகள் மண்வெட்டி, கத்தி, கோடரி, அரிவாள் உள்ளிட்ட விவசாய உபகரணங்களுடன் கொழும்புக்கு வந்து தொடர் எதிர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது. (த-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜுதீன் விவகாரத்தினால் சபையில் பெரும் களேபரம்

## முஜிபுர் ரஹ்மானைத் தாக்க முயற்சி

கொழும்பு, டிசெ. 14

வசீம் தாஜுதீன் படுகொலை விவகாரத்தினால் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பெரும் களேபரம் ஏற்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மீது, சண்டிக்கட்டு கட்டிக் கொண்டு தாக்குதல் நடத்தவும் மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைந்ததால், சபையில் பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீன் திட்டமிட்டே படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உரையாற்றிக் கொண்டிருக்கையில், மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் அவர் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முயற்சித்தனர். முஜிபுரைச் சுற்றிவளைத்து கூச்சலிட்ட மகிந்த ஆதரவு அணியினர், அவருக்குக் கடும்தொனியில் மிரட்டல் விடுத்தனர். இதையடுத்து, முஜிபுரை பாதுகாப்பதற்காக படைக்கள சேவிதர்களும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர் பக்கம் ஓடினர். இதனாலேயே சபையில் களேபரம் மூண்டு, சபை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமானது. ஆளுங்கட்சி, எதிரணி உறுப்பினர்கள் விவாதத்தில் உரையாற்றினர்.

இந்த விவாதத்தில், உரையாற்றுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. உரையாற்று வதற்கு எழுந்த அவர், ஐ.நா. மனித உரி மைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை கடுமையாக விமர்சித்தார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையில் திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது நாமலுக்கும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்குமிடையில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. பிரதியமைச்சர் சுஜீவ சேரசிங்க, முஜிபுர் ரஹ் மான் ஆகியோரும் நாமலுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். எனினும், அவர்களது ஒலி வாங்கி நிறுத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமலின் உரையைத் தொடர்ந்து அடுத்த பேச்சாளராக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் பெயர் அழைக்கப்பட்டது. உரையைத் தொடர்ந்த முஜிபுர், தாஜுதீன் காரில் வைத்து கொலை செய்யப்பட்டார். தகவல்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. தற்போது திட்டமிட்ட குற்றம் பற்றி பேசுகின்றனர். ஆம். தாஜுதீனின் மரணமும் திட்டமிட்ட கொலைதான் – என்றார்.

முஜிபுர் இவ்வாறு ஆவேசமாக உரையாற்றிக் கொண்டிருக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார். சபைக்குத் தலைமைத் தாங்கும் உறுப்பினரே, நீதிமன்றத்தில் விசாரணை இடம்பெறும் விடயமொன்று பற்றி இவர் கதைக்கிறார். இதற்கு இடமளிக்கக் கூடாது–என்றார்.

அவ்வேளையில், துள்ளி எழுந்த சுஜீவ சேரசிங்க, நீதிமன்ற வழக்கு தீர்ப்பு பற்றித்தான் விமர்சிக்க முடியாது. ஆனால், சம்பவம் பற்றி கதைக்க முடியும் என்று பதிலடி கொடுத்தார். இதையடுத்து, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்துக்கு உட்பட்ட வகையில்உரையாற்றுமாறுசபாபீடத்துக்குதலைமை தாங்கிக்கொண்டிருந்த உறுப்பினர் எட்வட், முஜிபுருக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய முஜிபுர் உரையைத் தொடர்ந்து கொண்டிருக்கையில், முன்னாள் அமைச்சரும் மகிந்த ஆதரவு அணி உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முஸ்டியை முறுக்கிக்கொண்டு முஜ்புரை நோக்கி வந்தார். மகிந்த ஆதரவு அணியின் இந்திக அநுரத்த, சனத் ரிசாத் உட்பட புதுமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஜோன்ஸ்டன் சகிதம் முஜிபுரை நோக்கி வந்தனர். கெஹலிய ரம்புக்வெல உட்பட மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் முஜிபுரை சூழ்ந்து கொண்டனர். இவ்வாறு சூழ்ந்துகொண்டு வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டு முஜிபுரை தாக்கும் வகையில் கைகளை முறுக்கிக் கொண்டு சென்றனர்.

பிரதி அமைச்சர்களான ஹர் டி சில்வா, அஜித் பீ. பெரேரா ஆகியோரும்–முஜிபுர் ரஹ்மான் பக்கம் சென்று சமரச முயற்சிகளில் ஈடுபட்டனர். நிலைமை கட்டுக்குள் வராததால், சபை 10 நிமிடங் களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சபை ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் சபைக்கு நடுவே வந்த ஆளும், எதிரணி உறுப்பினர்கள் சிரித்தபடியே பேசிக் கொண்டிருந்தனர். மீண்டும் சபை கூடியது. சபை கூடிய பின்னரும் சர்ச்சை நீடித்தது.

உறுப்பினர்கள் அனைவரையும் அமைதியாக இருக்குமாறு கோரிக்கை விடுத்த சபாநாயகர், இது பிரதேச சபை அல்ல என்றும் கடும்தொனியில் உத்தரவிட்டார். அதன் பின்னர் மங்கள சமரவீர கருத்து வெளியிட்டார். இந்த நாடாளுமன்றத்தில் நான் நீண்டகாலம் இருக்கிறேன். இப்படியொரு சம்பவம் இதற்கு முன்னர் நடக்கவில்லை. உறுப்பினரொருவர் உரையாற்றிக் கொண்டிருக்கையில் அவரைத் தாக்க முற்படுவது கீழ்த்தரமான செயல். ராஜபக்ச படையணியின் அட்டூழியம் நாடாளுமன்றத்திலும் தொடர்ந்தது – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் தவிசாளர் குழாமில் இருக்கிறார். ஆனால், சபாபீடத்தின் உத்தரவையும் மீறும் வகையில் பேசியுள்ளார். எனவே, தான் வெளியிட்ட கருத்தை அவர் திரும்பப்பெறவேண்டும் என்று தினேஸ் குணவர்த்தன வலியுறுத்தினார்.

நான் வீடியோவைப் பார்த்து ஆராய்ந்த பின் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சபாநாயகர் பதிலளித்தார். ஆனால், தினேஸ் குணவர்த்தன ஓயவில்லை. கட்டாயம் திரும்பப்பெற வேண்டும், வேண்டும் என்றும் கத்தினார். எனினும், முன்னர் வழங்கிய பதிலையே சபாநாயகர் மீண்டும் வழங்கினார். குழந்தை போல் தனக்கு தீர்ப்பு வழங்கமுடியாது என்றும் கடுந்தொனியில் கருத்து வெளியிட்டார். சபாநாயகரின் உத்தரவுக்கு மகிந்த ஆதரவு அணி கட்டுப்படவில்லை.

> சபை ஒத்தி வைக்கப் பட்ட பின்னர் சபைக்கு நடுவே வந்த ஆளும், எதிரணி உறுப்பினர்கள் சிரித்தபடியே பேசிக் கொண் டிருந்தனர். மீண்டும் சபை கூடியது. சபை கூடிய பின் னரும் சர்ச்சை நீடித்தது.

எழுந்துநின்ற உறுப்பினர்கள் அனைவரும் சபாபீடத்தை நோக்கி வந்தனர். படைக்கல சேவிதர் செங்கோலைத் தூக்கவிடாது பாதுகாத்துக் கொண்டார். கூற்றை திரும்பப் பெறுவதற்கு உத்தரவிடுமாறு சபாநாயகரை வலியுறுத்தினர். இதனால் கொதிப்படைந்த அமைச்சர் நவீன் திஸாநாயக்க, ஜோனுடன் சொற்போரில் ஈடுபட்டார். அமைச்சர் தலதாவும் பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேராவும் மோதவிடாது தடுத்தனர்.

சபையில் பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டதால் 4.45 மணிக்கு மீண்டும் சபை ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் சபை நடவடிக்கை 6.05 மணிக்கு ஆரம்பமானது. இதன்போது தீர்ப்பை வழங்கிய சபாநாயகர், சம்பவம் தொடர்பான வீடியோவையும் ஹன்சாட்டையும் நான் ஆராய்ந்தேன். எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன், தாஜுதீன் கொலையுடன் தொடர்புபட்டது என்ற வசனத்தை ஹன்சாட்டிலிருந்து நீக்குகிறேன் – என்றார். (த-5-சி)

ஒளிப் படச் செய்தி



## யார் மீது தவறு?



கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் வீதியில் பாலம் ஒன்றின் ஊடாக டிராக்டர் பயணித்தபோது பாலம் உடைந்து விழுந்துள்ளது. அதனால் டிராக்டர் சேதங்களுக்கு உள்ளாகியது. தற்போது பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பாலம் உடைந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. கட்டுமானங்களின்போது அவை உரிய தரத்துடன் உள்ளனவா என்பது குறித்து அதிகாரிகள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





# பழுதடைந்த கறியுடன் உணவுப்பொதி விற்பனை

## உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா அபராதம்

சாவகச்சேரி,டிசெ.14

பழுதடைந்த கறியுடன் உணவுப்பொதி வழங்கிய உணவு நிலைய உரிமையாளருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள உணவுப் பொதிகள் விநியோகிக்கும் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பெறப்பட்ட மதிய உணவுப் பொதியில் காணப்பட்ட கறி பழுதடைந்திருந்ததால் அதனை வாங்கியவர் கடைக்குச் சென்று கறி பழுதடைந்துள்ளது எனக் கூறி மாற்றி வேறு உணவுப் பொதி வழங்குமாறு கேட்டுள்ளார்.

அதற்கு உணவு விநியோகத்தர் மறுத்துவிடவே, உணவுப் பொதியை வாங்கியவர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகர்ப் பிரிவுப் பொது சுகாதாரப் பரிசோதகர் உணவு விநியோக நிலைய உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

மறுநாள் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் எச்சரிக்கை செய்யப்பட்டு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கருத்து மோதல்களுக்கு மட்டுமே நாடாளுமன்றம் களமாக வேண்டும்

அண்மையில் இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள சம்பவம்ஒன்று பொதுமக்கள் மத்தியில் பெரும் விசனத்தைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் டி.எஸ்.சேனநாயக்க காலத்தில் இருந்து மிகச்சிறந்த அறிவாளிகளும் சட்டவல்லுநர்களும் அரசியல் மேதைகளும் அனுபவசாலிகளுமே உறுப்பினர்களாக இருந்துள்ளார்கள். அவர்களைப் பட்டியல் இடுவதாயின் டட்லி சேனநாயக்க, எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, டாக்டர் என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தன, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்தன, விவியன் குணவர்தன, றொபேட் குணவர்தன, ஒலிவர் குணதிலக்க, டாக்டர் எம்.எம்.கலீல், ஏ.ஈ.கன்னங்கரா, ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், வி.நவரத்தினம், பீற்றர் கெனமன், எஸ்.நவரட்ணம், வன்னியசிங்கம், வி.சுந்தரலிங்கம், இராஜவரோதயம், அ.அமிர்தலிங்கம், எஸ்.எம்.சுப்பையா போன்றோர் நினைவுக்கு வருகிறார்கள்.

அந்தக் காலத்தில் நாடாளுமன்றத்தில் காரசாரமான விவாதங்களும், உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்பட்டு எதிர்த்தரப்பினரை நோக்கி முஷ்டிகளை உயர்த்திக் காட்டுவது போன்ற சம்பவங்கள் இடம்பெறவே செய்துள்ளன. ஆயினும் பெரும்பாலும் தரக்குறைவான சொற்பிரயோகங்கள் அல்லது எதிர்த்தரப்பு உறுப்பினரை சூழ்ந்துகொண்டு தாக்குதல் நடத்தும் அல்லது தாக்குதல் நடத்த எத்தனிக்கும் விதத்திலான சம்பவங்கள் இடம்பெற்றிருந்தனவா என்றால் பெரும்பாலும் இல்லை எனலாம்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உறுப்பினர் நாமல் ராஜபக்சபேசியதன் பின்னர், கொழும்பு மாவட்ட உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உரையாற்றியபோது வெளியிட்ட சில கருத்துக்களைச் சகிக்க முடியாத ராஜபக்ச ஆதரவுத்தரப்பினரான உறுப்பினர்கள் பலர் அவரை சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடத்த முற்பட்டதாகவும் அரசு தரப்பு உறுப்பினர்களும் சபை படைக்கல சேவிதர் தரப்பினரும் அவ்விதம் நடக்காமல் தவிர்த்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அதனால் சபை நடவடிக்கைகள் இரண்டொரு தடவைகள் ஒத்தி வைக்கவும் நேர்ந்துள்ளன:

நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்து அனுப்புவது, நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றவும் தேவையற்றவைகளை நிராகரிக்கவும் மட்டுமன்றி, தங்கள் தரப்பிலான கருத்துக்களை வெளியிடவும் இவையோடு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடவுமே. இவ்வாறு செய்கையில் கருத்து மோதல்கள், முரண்பாடுகள் ஏற்படுவது ஒன்றும் ஆச்சரியமில்லை. சிலபல வேளைகளில் உறுப்பினர்கள் ஆழமான உரைகளை நிகழ்த்துவதும், துடிப்பான வாதப்பிரதிவாதங்களில் இறங்குவதும், அங்கதச் சுவை மிகுந்தும் இலக்கிய நயம் மிளிரவும்கூட சொற்பொழிவுகளை நிகழ்த்தியதும் உண்டு. அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்கள் அவற்றை வரவேற்பார்கள்; மெச்சிப்புகழ்வார்கள்.

இவ்வாறு சபையில் நடைபெறும் நிகழ்வுகள் பத்திரிகைகளில் வெளிவருவது மட்டுமல்ல, இப்போதெல்லாம் வானொலியிலும், தொலைக்காட்சியிலும்கூட கேட்கவும் பார்க்கவும் முடிகின்றது. சபை நடவடிக்கைகளை பொது மக்களுக்குரிய பகுதியிலிருந்து பொதுமக்கள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் நேரடியாகப் பார்க்கிறார்கள். அவ்வாறிருக்க, சபை உறுப்பினர்கள் சண்டியர்கள் போன்று சபையில் நடந்து கொள்ளக்கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சரியாகவே குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தவர்களில் தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன போன்றவர்களும் பிரதமரைப் போலவே பழுத்த அனுபவசாலிகள். அனுபவமும் முதிர்ச்சியுமுள்ள இவர்கள் புதியவர்களுக்கு மட்டுமல்ல வருங்காலச் சந்ததியினருக்கும் எடுத்துக்காட்டாக நடந்து கொள்வதையே மக்கள் விரும்புகிறார்கள்.

அண்மையில் உக்ரேன் நாட்டு நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒலெக் பார்னர் என்பவர் அந்த நாட்டு பிரதமர் ஆர்செனியாட் செனியிக்கை அலாக்காகத் தூக்கி எறிந்தார் என்ற செய்தியை அறியும்போது எம் நாட்டில் நடந்திருப்பது மிகச் சாதாரண விடயம் என்று கருதப்படக் கூடும். ஆனால், நிலைமைகள் அவ்வாறான ஒரு உச்சத்துக்கு போய் விடலாகாது.

எனவே, விரைவில் நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கும் புதிய அரசமைப்பில், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கட்சி மாறுவதைத் தடுப்பது மட்டுமன்றி, சபையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ளும் வகையில் விதிகள் கொண்டுவரப்பட வேண்டும். நாடாளுமன்றம் கருத்து மோதல்களுக்கு மட்டுமே களமாக அமைய வேண்டும். கைகளால் மோதிக் கொள்ளும் இடம் அதுவன்று.





# இலங்கை அமெரிக்க உறவுகளின் எதிர்காலம்

தமிழில்: ரஜீவன்

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைவில் தனது ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் முதலாவது வருடத்தைப் பூர்த்திசெய்வார், எனினும் பல வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளன. இலங்கையில் இடம்பெற்ற போர்க்கால மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேடநீதிமன்றங்களை ஏற்படுத்தப்போவதாகவும் புதிய அரசமைப்பை ஏற்படுத்தப்போவதாகவும் மிகச் சமீபத்தில் எம்மால் அறிய முடிந்தது.

மேலே குறிப்பிட்டஇரண்டு விடயங்களிலும் நேர்மையான முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது யதார்த்தபூர்வமான விடயமா? சிறிசேன நிர்வாகத்தில் இன்னமும் தீர்வைக் காணாத குறைந் தளவு சவாலைக் கொண்டுள்ள சீர்திருத்தங்களும் உள்ளன, உதாரணத்துக்கு தமிழ் அரசியல் கைதிகள் விவகாரங்கள் போன்றவை.

### தீர்வைக் காண்பதற்குத் தயாரில்லை

நேரடியாகத் தீர்வைக்காணக் கூடிய விடயங்களுக்குதீர்வுகாண கொழும்பு தயாராகவில்லாததைக் கருத்தில்கொள்ளும் போது,அவற்றைவிட இன்னமும் கடினமான சவால்களுக்கு தற்போதைக்கு தீர்வு காணப்படும் என எதிர்பார்ப்பது நியாயமானதா? இதேவேளை அமெரிக்கா, கவலையளிக்கக் கூடியவிதத்தில் இலங்கையில் மேலும் சீர்திருத்தங்கள்,பொறுப்புக்கூறல்,மற்றும்நல்லிணக்கம்குறித்துவெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றது.

வோசிங்டன் வெளியிட்டு வரும் கருத்துக்கள் குறித்து வேறு விதத்தில் சிந்திக்கவேண்டிய தருணம் இது, சிறிசேன அரசின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் தொடர்ந்தும் தட்டுத்தடுமாறினால் ஒபாமா நிர்வாகம் குறிப்பிடத்தக்கவிதத்தில் ஏதாவது செய்யத் தயாராகவுள்ளதா? சிறிசேன அரசு இதுவரை வெளிப்படுத்தியுள்ள முன்னேற்றம் போதுமானது என வோசிங்டன் ஏற்கனவே தீர்மானித்துவிட்டதா? அவ்வாறு அமெரிக்கா முடிவுசெய்யவில்லை என்றால் அடுத்த 12 மாதங்களுக்கு இலங்கை மீது தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுப்பதற்கு ஒபாமா நிர்வாகம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது?

நாங்கள் உண்மை என்னவென்பதை உணர்வோம், ஒபாமாவின் கண்காணிப்பின் கீழ் அமெரிக்கா இலங்கை மனித கௌரவத்தை மதிக்குமாறும், கடந்த காலங்களைக் கையாளுமாறும் செய்வதில் முக்கியபங்காற்றியுள்ளது. முன்னைய ஜனாதிபதி சர்வதேசஅழுத்தங்களுக்குப் பதில் அளித்தபோதிலும் அவரது அரசு சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக ஆகக்குறைந்தளவிலான நடவடிக்கையையே முன்னெடுத்து வந்தது.

> “முன்னைய ஜனாதிபதி சர்வதேச அழுத்தங்களுக்கு பதில் அளித்தபோதிலும் அவரது அரசு சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக ஆகக்குறைந்தளவிலான நடவடிக்கையையே முன்னெடுத்து வந்தது.”

தற்போது இலங்கையில் சிறிசேன பதவியில் உள்ளார், இருமுக்கிய கட்சிகளினதும் கூட்டணி காணப்படுகின் றது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யும் ஐக்கிய தேசிய கட்சியும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

### ஒபாமா அணியின் பாராட்டு

வாசிங்டனின் அதிகாரத் தாழ்வாரங்களில் தற்போது சில வகையான எண்ணங்கள் காணப்படுகின்றன,ஒபாமா அணி இலங்கையின்புதிய அரசைஊக்குவித்து வரும் அதேவேளை தன்னுடைய பணிகுறித்தும் சுய பாராட்டுதல்களுடனான மதிப் பீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனைப் பார்க்கும்போது சில வருடங்களுக்கு முன்னர் மியன்மாரின் ஜனநாய ஆரம்பங்கள் குறித்துச் செய்த தவறை ஒபாமா நிர்வாகம் மீண்டும் செய்வது போலத் தோன்றுகின்றது, இது மியன்மார் மூலம் கற்றுக்கொண்டிருக்க வேண்டிய பாடங்களை கற்கத் தவறியுள்ளது போலவும் தோன்றுகின்றது - முக்கியமாக ஆழமான நிரந்தரமான சீர்திருத்தங்கள் பார்வைக்குத் தோற்றமளிப்பதை விடவும் எப்போதும் கடினமானவை,சவால் மிகுந்தவை என்ற பாடத்தை அது மறந்துள்ளது.

இன்னமும் ஒரு வருட காலப்பகுதியில் ஒபாமா நிர்வாகம் அதிகாரத்திலிருந்து அகற்றப்படும், அடுத்த 12 மாதங்களில் சிறிசேன அரசு குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களை முன்னெடுத்தாலும் கூட 2017 ஜனவரிக்கு முன்னர் அவை முழுமையாக பூர்த்தியடைவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

இதேவேளை அமெரிக்காவின் அடுத்தஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசு - அது எந்தக் கட்சியைச் சேர்ந்ததாக இருந்தாலும் சரி- ஒபாமா நிர்வா கம் போன்று இலங்கையின் மனித உரிமை விடயங்களுக்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கும் என்பதற்கான உத்தரவாதங்கள் எதுவும் இல்லை.

ஆங்கிலமூலம்
டெய்லர் டிப்பேர்ட்- த டிப்ளோமட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# இனவாதிகளையும் சந்தர்ப்பவாதிகளையும் இனியும் விட்டு வைப்பதா?

திட்டமிட்டபடி சுமுகமாக இடம் பெறவேண்டிய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் தடுத்து நிறுத்துவதில் சில இனவாத சக்திகள் முனைப்புடன் செயலாற்றி வருவதைக் காண முடிகின்றது. இந்த அரசியல் கைதிகள் நீண்ட காலமாகவே விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்களும் அடங்குவர். நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் தற்போதைய அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல்வேறு அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுடன் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டனர். இதையடுத்து கடந்த நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பதாக கைதிகளை விடுதலை செய்வதாக ஜனாதிபதி கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு உறுதிமொழி ஒன்றை வழங்கியிருந்தார். இதனால் கைதிகளின் விடுதலை தொடர்பான நம்பிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால் குறித்த திகதியில் ஜனாதிபதியின் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. நீண்ட இழுபறிக்குப்பின்னர் கைதிகளில் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

**கைதிகளின் விடுதலையில் இழுபறி**

ஆனால் கைதிகள் அனைவரையும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்பதே கைதிகளின் கோரிக்கை மட்டுமல்ல ஒட்டுமொத் தமிழர்களின் விருப்பமாகும்.

ஆரம்பத்தில் தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு சாதகமானதொரு நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. வெளிநாடுகளின் அழுத்தமும் இதற்கொரு காரணமாகும். ஆனால் கைதிகள் விடுதலை செய்யப்பட்டால் நாட்டில் எதிர்விளைவுகள் ஏற்படுமென தென்பகுதியில் உள்ள இனவாதிகள் கூக்கிரலிட்டனர்.

மீண்டுமொரு போருக்கு இது வழியேற்படுத்தி விடுமெனவும் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் பரப்புரை செய்யப்பட்டது. இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் அவரது சகோதரரான கோத்தபாயவும் பிரதான பங்கு வகிக்கத் தவறில்லை. தமிழ்க் கைதிகளை விடுதலை செய்தால் தமது பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறிவிடுமென மகிந்த நீலிக்கண்ணீர் வடித்தார். கோத்தபாயவும் கைதிகள் விடுதலை செய்யப்படுவதால் நாட்டுக்குப் பெரும் தீங்கு ஏற்பட்டு விடுமென அபாய எச்சரிக்கை விடுத்தார். இறுதிப்போரின்போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட பல ஆயிரக் கணக்கான விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ததை இவர்கள் மறந்து விட்டவர்களைப்போன்று தற்போது செயற்படுகின்றனர்.



**விடுதலை செய்யப்பட்டவர்களால் பாதிப்பு இல்லை**

மேலும் விடுதலை செய்யப்பட்ட அந்த விடுதலைப் புலி அங்கத்தவர்களால் இதுவரை நாட்டுக்கு எந்தவிதமான பாதிப்பும் இருக்கவில்லை என்பதையும் இவர்கள் இருவரும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனச்சாட்சி இருந்திருந்தால் இவர்கள் தவறான தகவல்களைக் கூறவே மாட்டார்கள். விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் சிலரைத் தம்முடன் வைத்துப் பேணியவர்கள்தான் இவர்கள். அப்போதெல்லாம் ஏற்படாத பயம் இப்போது மட்டும் ஏற்பட்டதற்கான காரணமும் புரியவில்லை. பொதுபல சேனா வேறு தனது பங்குக்கு தெற்கில் இனவாதத்தைப் பரப்பி வருகின்றது. இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே என்பது அதன் பிரதான வாதமாகும். இவ்வாறான இனவாத சக்திகளை வேரோடு களையாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது நல்லாட்சி அரசுக்கு அழகல்ல. இந்த நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இனவாதத் தீயில் பல தடவைகள் எரிந்ததை அரசினர் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

> கைதிகள் அனைவரையும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்பதே கைதிகளின் கோரிக்கை மட்டுமல்ல ஒட்டுமொத் தமிழர்களின் விருப்பமாகும்.

கடந்த காலங்களி லும் இனவாதிகளின் கீழ்த்தரமான செயல்களால் இந்த நாடு எதிர்கொண்ட இனங் களுக்கு இடையேயான ஐக்கியமின்மை நாட்டின் வளர்ச்சிக்குப் பெரிய தடையாக இருந்துள்ளது. இந்த நிலையில் தற்போது கூட பெரிய மாற்றம் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையில் இனவாதிகளைத் தலையெடுக்க விடுவது நல்லதல்ல.

**சங்கடங்களை ஏற்படுத்தும் மகிந்தவும், சகோதரரும்**

இதேவேளை – குற்றச்சாட்டுக்களின் பேரில் விசாரணைகளுக்கு முகம்கொடுத்து வரும் மகிந்தவும், அவரது சகோதரரும் அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவதற்கும் இடமளித்தல் தவறானது. அவர்கள் எப்போதுமே அரசுக்கு எதிரான கொள்கைகளையே கொண்டிருப்பவர்கள்.

அது மட்டுமல்லாது தாம் குற்ற விசாரணைகளிலிருந்து தப்பிக்க வேண்டுமாயின் இந்த அரசைக் கவிழ்த்து விடுவதே சிறந்ததெனக் கங்கணம் கட்டிக்கொண்டு அலைந்து திரிபவர்கள். இவர்களால் நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பதும் உண்மை.

ஆகவே நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் மைத்திரி – ரணில் அரசு தயவு தாட்சணியம் பார்க்காது இனவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் ஒடுக்கி விடுவதில் தீவிரமாகச் செயற்பட வேண்டும். இந்த நாடு இன்னுமொரு இனரீதியான போரை எதிர்கொளளக் கூடிய நிலையில் இல்லை. மேலும் உலக நாடுகளும் இதை அனுமதிக்கப் போவதில்லை என்பதை இந்த நல்லாட்சி அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

## நிறுத்தி வைக்கப்பட்ட பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

காலை 7.45 மணிக்கு காரை நகரிலிருந்து புறப்படும் 782 ஆம் இலக்க வழித்தட பஸ் கடந்த சில நாள்களாக சேவையில் ஈடுபடாததால் பல்வேறு தரப்பினரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பஸ் சேவை காரைநகரில் ஆரம்பித்து சங்கானை ஊடாக யாழ்ப்பாணத்தைச்சென்றடையுமாறு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இதனால் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் எனப் பலரும் பயன்பெற்று வந்தனர். மேலும் இவர்கள் உரிய நேரத்துக்கு தமது பணியிடங்களுக்குச் செல்லவும் முடிந்தது. ஆனால் இந்த பஸ் சேவை தற்போது இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் இதைப் பயன்படுத்தியவர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆகவே இந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளாக உள்ளது.

எஸ். தயாபரன், சுழிபுரம்

## அரச அதிபர் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

இன்னும் இந்த ஆண்டு முடிவுக்குவருவதற்கு 19 நாள்களே உண்டு. ஆனால், மாவட்ட மட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவிலும் கிராம சேவகர்களுக்கு இடமாற்றம் என்ற பட்டியல் இன்னும் வெளியாகவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் கிராம சேவகர்களுக்கு விரைவில் மாற்றல் என்ற தலைப்பில் செய்தி வெளியாகி யிருந்ததை எவரும் அறிவர்.

இந்தச் செய்தியை மாவட்ட அரச அதிபரான நாகலிங்கம் வேதநாயகன் வெளியிட்டு இருந்தார். ஒரு பிரதேச செயலர் பிரிவில் நீண்ட காலமாக இடமாற்றம் இன்றி கடமையாற்றுபவர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் வழங்கப்படும். இதுவும் 15 பிரதேச செயலாளர் பிரிவிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

இதனைவிட சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு கிராம சேவகர் பிரிவில் 10 முதல் 15 வருடங்களுக்கு மேல் கடமையாற்றுகின்றனர். ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் நீண்டகாலம் கடமையாற்றுவது என்பதை விட ஒரு கிராம சேவகர் பிரிவில் 10, 15 வருடங்கள் கடமையாற்றுவது அபத்தமானது.

எனவே, அரச அதிபர் முதலில் ஒரு கிராம அலுவலர் பிரிவில் நீண்ட பல வருடங்கள் கடமையாற்றுபவர் பட்டியலை திரட்டி பின்னர் முழுமையாக தொகுத்து இடமாற்றம் வழங்க முன்வரவேண்டும்.

இதன் ஒரு கிராம அலுவலர் பிரிவில் ஒருவர் 10 முதல்15 வருடங்கள் இடமாற்றமின்றி இருந்தால் தொடர்ந்து அந்தக் கிராமத்தில் 95 வீதமான வளர்ச்சி முற்றாகப் பாதிக்கப்படும்.

எனவே நீண்டகாலம் ஒரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தவர் பட்டியல், நீண்ட காலம் ஒரு கிராம அலுவலர் பிரிவில் இருந்தவர் என்ற இரண்டு பட்டியலை தயார் செய்து பக்கச் சார்பின்றி இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். இதுவே நீடித்த கிராம அபிவிருத்திக்கு உதவும். பொறுத்திருந்து பார்ப்பதே நல்லது. நல்லாட்சிக்கு இடமாற்றமும் மிக அவசியம்.

க. தாமோதரம்பிள்ளை
வலிகாமம் தெற்கு

## நல்லாட்சியும் தமிழ்க் கைதிகளும்

எமது நாட்டில் எத்தனையோ குற்றவாளிகள் சுதந்திரமாகவும் சுகபோக வாழ்க்கையும் வாழ்ந்து வருகிறார்கள். எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கு மட்டும் விசாரணையும் இல்லை, விடுதலையும் இல்லை. இவர்கள் தமிழர்கள் என்பதால் கடந்த ஆட்சிக் காலத்தில் தான் இப்படி நடந்ததென்றால் நல்லாட்சியிலும் இதுவரை மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இனியும் ஏற்படுமா என்பது விடைகாண முடியாத வினாவாகவே உள்ளது. சிலர் இருபது வருடங்களுக்கும் மேலாக சிறையில் வாடி வருவதுடன் அடி, உதை சித்திரவதைகளுக்கும் குறைவில்லை. இதை எல்லாம் எவரும் விசாரிப்பதும் இல்லை. இந்தக் கொடுமைகளைச் செய்தவர்களுக்குத் தண்டனையும் இல்லை. குற்றக் கும்பல்களையும் அதைப் பின்னின்று நடத்தியவர்களையும் பாதுகாப்பதிலேயே நல்லாட்சியினரும் நடந்து கொள்கிறார்கள். இவர்களை நம்பி எமது உயிரிலும் மேலான வாக்குகளை அளித்த நம்மினம் செய்வதறியாது திகைத்து நிற்கின்றது. சுருக்கமாகக் கூறினால் மொந்தை மட்டுமே மாறியுள்ளது. உள்ளே இருப்பது பழையதுதான், ஜெனிவா தீர்மான மும் கூட ஆக்கபூர்வமானதாகத் தெரியவில்லை. அதுவும் இன்றைய ஆட்சியாளர்களைப் பாதுகாக்கும் ஒன்றாகவே தோன்றுகிறது. ஜனநாயகம் மனித உரிமை என்பதெல்லாம் வெறும் பம்மாத்து பகவான் புத்தருக்குக்கூட இந்த அவலங்கள் (அக்கிரமங்கள்) தெரியவில்லை.

ப. யேசுபாதம், வட்டக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புருண்டி தலைநகரில் வன்முறை ஒரே இரவில் 34 சடலங்கள் மீட்பு



புஜும்புரா, டிசெ . 14,
புருண்டியில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வன்முறைகளாக மாறியிருப்பதால் நாட்டில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தலைநகர் புஜும்புராவில் இடம்பெற்ற வன்முறைகளில் ஒரே இரவில் 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பிரதான வீதிகளில் சடலங்கள் சிதறியிருந்தன.

புருண்டி ஜனாதிபதியின் ஆட்சியை எதிர்த்து கடந்த மே மாதத்திலிருந்து பல ஆர்பாட்டங்களை மக்கள் நடத்தி வருகின்றனர். இதையடுத்து கடந்த ஜுலையில் ஆட்சியைத் திடீரெனக் கலைத்த ஜனாதிபதி அவசரமாகத் தேர்தலை நடத்தி வெற்றியீட்டினார். இந்தத் தேர்தல் முடிவை ஏற்பதற்கு எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர்.

இதனால் தொடரும் பதற்ற நிலை காரணமாக ஒவ்வொரு நாளும் இரவில் வீதியில் சடலங்கள் இருப்பது வழமையாகி விட்டது என சர்வதேச நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் ஒரே நாளில் 34 சடலங்கள் வீதியில் கிடந்தது இதுவே முதல் முறை ஆகும்.

ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து 240 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனவும், 2 லட்சம் பேர் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆதரவாளர்களும், எதிரானவர்களும் மாறிமாறிக் கொல்லப்படுவது வழக்கமாகியுள்ளது. உலகின் வறிய நாடுகளில் இரண்டாவதாக உள்ள நாடான புருண்டி, தொடர்ச்சியான அரசியல் பிரச்சினைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. (உ-ரி4)

# அமெ. தாக்குதலில் இறந்தது 42 ஆப்கான். அப்பாவி மக்கள்

## குண்டூஸ் மருத்துவ நிலையம் மீதான தாக்குதலில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு





குண்டூஸ், டிசெ. 14
ஆப்கானிஸ்தானில் குண்டூஸ் நகரில் இயங்கிவந்த அரச மருத்துவ நிலையம் மீது கடந்த ஒக்ரோபர் மாதம் அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை முன்னர் கணக்கிடப்பட்டதைவிட அதிகம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்திருந்தனர் என்று எம்.எஸ்.எவ். என்னும் மருத்துவ தொண்டு நிறுவனம் அறிவித்திருந்தது. ஆனால் ஒட்டுமொத்தமாக

> இந்தத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்திருந்தனர் என்று எம்.எஸ்.எவ். என்னும் மருத்துவ தொண்டு நிறுவனம் அறிவித்திருந்தது. ஆனால் ஒட்டுமொத்தமாக 42 பேர் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்று தற்போது அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

42 பேர் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்று தற்போது அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

குண்டூஸ் நகரில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. மனிதத் தவறு காரணமாக இடம்பெற்ற தாக்குதல் இது என அது தெரிவித்துள்ளது. ஆனால் மருத்து நிலையம் மீது தாக்குதல் நடத்துவது போர்க் குற்றம் என்று ஆப்கான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

14 ஊழியர்களுடன், 24 நோயாளிகள், பார்வையாளர்கள் உட்பட 42 பேர் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் என்று எம்.எஸ்.எவ். தெரிவிக்கின்றது. கடுமையான சேதங்கள் ஏற்பட்டிருந்ததால் உடனடியாக இறப்பு எண்ணிக்கையைத் துல்லியமாகக் கணக்கிட முடிந்திருக்க வில்லை என்றும் ஆழமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் புதிய எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது. மருத்துவமனையின் ஆதாரங்கள் பல தாக்குதலில் தொலைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒக்ரோபரில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் தலிபான்களின் பயன் பாட்டில் இருந்த அரச கட்டடத்துக்குக் குறிவைத்த போது தவறுதலாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலில் 25 நிமிடங்களில் 211 ஷெல்கள் மருத்துவமனை வளாகத்தினுள் வீழ்ந்து வெடித்தன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானில் இதுவரை இடம்பெற்ற தாக்குதலில் இராணுவத் தரப்பிலும், தலிபான்களின் தரப்பிலும் பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன தான். எனினும் உலகெங்கும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்குத் தான் அர்ப்பணிப்புடன் உள்ளதாக அமெரிக்கா தொடர்ந்து கூறிவரு கின்றது. (உ-ரி4)

## சவுதியி...
## பெண்கள்...

ரியாத்,டிசெ.14
சவுதி அரேபிய...
நகராட்சித் தே...
வாக்களித்துள்...
இறங்கியுள்ள...
மன்னர் ஆட்சி...
பெண்களுக்...
வாக்களிக்க...
வாகனம் செலு...
இதற்கு அந்த...
சர்வதேச சமுதா...
போராடி வருகி...
எதிரான இத்...
அந்த நாட்டு...
தற்காலிக நட...
போட்டியிடவும்...
பட்டுள்ளது.
இந்த நிலையி...
மன்றங்களி...
நடைபெற்றது...
பெண்களும்...
னர். அத்துடன்...
களும் தனித்...
யப்பட்டிருந்த...
இதேவேளை...
பெண்களும்...
தடை விதிக்கப்...
ஆ... வாக்க...
எனப் பெண்...
தனர். மேலும்...
பதிவு செய்வத...
தாகக் குற்றம்...
இதனால் 10...
பெண் என்ற நி...
வேட்பாளர்கள்...
எனக் கூறப்பட...
யிடவும், வாக்...
தங்களுக்குச்...
தெரிவித்துள்ள...



## சென்னையில் இன்று பாடசாலைகள் திறப்பு

சென்னை,டிசெ.14
சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் இன்று திறக்கப்படவுள்ளன.

தமிழகத்தில் பரவலாக வடகிழக்கு பருவமழை பெய்து வந்த நிலையில், கடந்த மாதம் 8 ஆம் திகதி முதல் விடுமுறை அறிவிக்கப்பட்டது. மழை தொடர்ந்ததால், ஒவ்வொரு நாளாக விடுமுறை நீடிக்கப்பட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கடந்த மாதம் 26 ஆம் திகதி சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பாடசாலைகள், கல்லூரிகள் திறக்கப்பட்டன.

ஆனால், மீண்டும் கனமழை பெய்யத் தொடங்கியதால் கடந்த மாதம் 29 ஆம் திகதியில் இருந்து ஒவ்வொரு நாளாக விடுமுறை விடப்பட்டு வந்தது.

இவ்வாறு 2 ஆவது கட்ட விடுமுறையும் 15 நாள்கள் தொடர்ந்தது. மொத்தமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 33 நாள்கள் விடுமுறை விடப்பட்டுள்ளன.

கல்வி நிறுவன வளாகங்களில் தேங்கிய மழைநீர் முற்றிலும் அகற்றப்பட்டதுடன், வகுப்பறைகளும் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களுக்குத் தொற்று நோய் பாதிக்காத வகையில் சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை பாடசாலைகள் திறக்கப்படும் நாளன்று மாணவர்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்றும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (ஐ)

## காபூல் ஸ்பெயின் தூதரகம் மீது தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல்



காபூல்,டிசெ.14
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஸ்பெயின் தூதரகம் மீது தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு காரில் சென்ற தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர், ஸ்பெயின் தூதரக வாயிலில் மோதி வெடித்துச் சிதறினார்.

அதேநேரத்தில் அந்தப்பகுதியில் மறைந்திருந்த 3 தீவிரவாதிகள் ஸ்பெயின் தூதரகத்தைக் குறிவைத்துச் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டதுடன், கையெறி குண்டுகளையும் வீசினர்.

சம்பவ இடத்துக்கு ஆப்கானிஸ் தான் பொலிஸார், அமெரிக்கக் கூட்டுப் படையினர் விரைந்து வந்து தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்கும் இடையே தொடங்கிய சண்டை அதிகாலை வரை நீடித்தது. இறுதியில் 3 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் ஸ்பெயின் தூதரக பாதுகாவலர்கள் இருவர், ஆப்கானிஸ்தான் பொலிஸார் 5 பேர், பாதசாரி ஒருவர் என 8 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 10 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளனர். தலிபான் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளனர். (ஐ)

> நேற்று முன்தினம் இரவு காரில் சென்ற தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர், ஸ்பெயின் தூதரக வாயிலில் மோதி வெடித்துச் சிதறினார்.

## நே...

காத்மண்டு,டிசெ.14
நேபாளத்தில் அ...
லையில் நிலவும்...
வேண்டும் என்று...
இது தொடர்பாக...
இயக்குநர் டேவிட்...
நேபாளத்தில் புதி...
கடந்த 3 மாதங்க...
ஏற்பட்டுள்ளது.
இந்தியாவில் இரு...
சமையல் எண்ணெ...
வரவு குறைந்துள்...
இதனால் விலைவ...
போராட வேண்டிய...
நிலையில் மற்றொ...
கள் நலப் பிரச்சி...
எனவே சம்பந்தப்...
வேண்டும். நேபா...
அனுமதிக்க வேண்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியில் முதன் முதலாக
## கள் தேர்தலில் போட்டி

செ.14
ரேபியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற
த் தேர்தலில் முதல் முறையாக பெண்கள்
ித்துள்ளதுடன், வேட்பாளராகவும் களம்
ுள்ளனர்.
ஆட்சி நடைபெறும் சவுதி அரேபியாவில்,
ளுக்குத் தேர்தலில் போட்டியிடவோ,
ிக்கவோ உரிமை இல்லை. இது தவிர
செலுத்தவும் அனுமதி இல்லை.
அந்த நாட்டுப் பெண்கள் மட்டுமல்லாமல்,
சமுதாயங்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப்
வருகின்றன. இந்த நிலையில் பெண்களுக்கு
இத்தகைய கட்டுப்பாடுகளைத் தளர்த்த
ாட்டு அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி
க நடவடிக்கையாக, பெண்கள் தேர்தலில்
ிடவும்,வாக்களிக்கவும் அனுமதி அளிக்கப்
து.
லையில் சவுதி அரேபியாவில் 284 நகராட்சி
களில் நேற்று முன்தினம் தேர்தல்
ற்றது. இதில் 6 ஆயிரம் ஆண்களும், 900
ளும் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள
துடன் வாக்குப்பதிவில், ஆண்களும், பெண்
னித்தனியாக வாக்களிக்க ஏற்பாடு செய்
ந்தன.
ளை பொது இடங்களில் ஆண்களும்,
ளும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள
திக்கப்பட்டிருப்பதால், பரப்புரையின் போது
ாக்க...களைச் சந்திக்க முடியவில்லை
ண் வேட்பாளர்கள் முறைப்பாடு தெரிவித்
லும், பெண்கள் தங்களை வாக்காளர்களாகப்
ய்வதற்கும் அதிகாரிகள் தடையாக இருந்த
ற்றம் சாட்டியுள்ளனர்.
10 வாக்காளர்களில் ஒருவர் மட்டுமே
ன்ற நிலையில் வாக்களித்துள்ளதால் பெண்
ார்கள் வெற்றி பெறுவது மிகவும் கடினம்
றப்படுகிறது. ஆனாலும் தேர்தலில் போட்டி
வாக்களிக்கவும் வாய்ப்புக் கிடைத்ததே
க்குக் கிடைத்த வெற்றி என சவுதிப் பெண்கள்
துள்ளனர். (ஐ)



### காபன் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதன் மூலம்

# உலக வெப்ப நிலையை 2 பாகை குறைக்க இணக்கம்

### பாரிஸில் கூடிய 200 நாடுகளும் ஒன்றிணைந்து அறிவிப்பு




பாரிஸ், டிசெ .14
உலக காலநிலை தொடர்பாக பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற உச்சி மாநாடு, உலக வெப்ப நிலையை 2 பாகை செல்சியஸ் என்ற அளவால் குறைப்பது என்கிற உடன்பாட்டுடன் நிறைவுக்கு வந்துள்ளது. மாநாட்டில் பங்கெடுத்த 200 நாடுகளும் இதற்காகத் தங்கள் பங்களிப்பை வழங்குவதற்கு இணங்கியுள்ளன.

பெரும் கரவொலிக்கு மத்தியில் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் லாரன்ட பேப்பியஸ், காலநிலை தொடர்பான. பிரான்ஸ் அறிவித்தலை வாசித்தார்.

எமக்காகவுள்ள ஒரே ஒரு கிரகத்தைப் பாதுகாப்பதற்கான சிறந்த சந்தர்ப்பம் இது என அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார். வருங்காலத்தில் உலகம் குறைந்த காபன் பாவனைக்கு முகம் கொடுக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

உலகை அதிகளவில் மாசுபடுத்தி வரும் நாடுகளில் முதன்மையானதான சீனாவும் எட்டப்பட்டுள்ள இணக்கத்தை வரவேற்றுள்ளது. வரும் ஆண்டுகளில் காபன் பாவனையைக் குறைப்பதே அனைத்து நாடுகளினதும் முக்கிய நோக்கமாகும். ஆனால் இது ஒன்றும் மிகச் சிறப்பான அடைவு அல்ல என்று சுற்றுச்சூழலியலாளர்கள் கவலைப்படுகின்றனர்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தச் சவாலை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டும் என்று மாநாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஒபாமா, காபன் தொடர்பான முதலீடுகளைக்குறைத்து, மாற்றீட்டுச் சக்திப் பிறப்பாக்கிகளை உருவாக்க வேண்டும். இதன் மூலம் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும்எனவும் தெரிவித்தார். சீனாவின் ஆலோசகர், இது காபனுக்கு எதிரான வரலாற்று முயற்சி எனத் தெரிவித்தார். அத்துடன் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பண உதவி செய்ய வேண்டும் எனவும் தெரி வித்தார்.

ஏழை நாடுகளின் சார்பான குழுவின் தலைவர் கிசா கஸ்பர்,இந்த முயற்சியைப் பாராட்டுகிறேன், ஏழை நாடுகளின் சார்பாக மட்டும் அல்ல உலக நாட்டு மக்களின் சார்பாகவும் இதனை நான் வரவேற்கிறேன் என்றார்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு 2020ஆம் ஆண்டு வரைக்கும் மாற்றுச் சக்தி மூலங்களுக்கு திரும்புவதற்காக 100 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸில்நடைபெற்றகாலநிலை மாநாட்டில் ஒபாமாவின் பங்களிப்பு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என அவதானிகள் குற்றம்சாட்டியுள்ளனர். அத்துடன் இந்த மாநாடு காலநிலைப் பிறழ்வைக் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கவில்லை என சீனா தெரிவித்துள்ளது. (உ-ரி4)

# நபாளத்தில் உணவுக்குத் தட்டுப்பாடு

டிசெ.14
் அத்தியாவசிப் பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் எல்
லவும் தடைகளை நீக்க சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் முன்வர
ன்று ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.
பாக ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய
டவிட் காட்ருத் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக நடைபெறும் எல்லைப் போராட்டத்தால்
தங்களாக உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு
து.
இருந்து வரும் பொருள்களையே அந்த நாடு சார்ந்துள்ளது. இந்த நிலையில்
ண்ணெய், அரிசி, பருப்பு வகைகள், சர்க்கரை, உப்பு உள்ளிட்ட பொருள்களின்
ந்துள்ளது.
லைவாசி கடுமையாக உயர்ந்துள்ளதால் மக்கள் தங்களது உணவுத் தேவைக்குப்
ண்டியுள்ளது. நேபாள மக்கள் ஏற்கெனவே நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள
ற்றொரு பாதிப்பில் இருந்து அவர்கள் மீள்வது கடினம். மேலும் மிகப்பெரிய மக்
ரச்சினையை உருவாக்கும்.
ந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர
நேபாள எல்லைக்குள் அத்தியாவசியப் பொருளகள் தடையின்றி செல்ல
வேண்டும். - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தொரு நாள்கள் அனுஷ்டிக்கப்படும் விநாயக சஷ்டி விரதம்

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

கார்த்திகை மாதத்துத் தேய்பிறை முதலாம் நாள் தொடக்கம் மார்கழி மாதத்து வளர்பிறை ஆறாம் நாள் வரை இருபத்தொரு நாள்களில் அனுஷ்டிக்கப்படும் விரதம் விநாயகசஷ்டியாகும். விநாயக சஷ்டி விரத நாள்களில் பிள்ளையார் பெரும்கதையை ஆலயங்கள் தோறும் படித்து விழா எடுப்பார்கள்.

மகா விஷ்ணு பொய்ச்சாட்சி சொன்னமையால் தனக்கேற்பட்ட சாபத்தை விநாயகரை வணங்கி நீங்கப் பெற்றார். இந்தச் சாபம் நீங்கப் பெற்ற தினம் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி நாளாகும்.

விநாயகர் எப்போதும் பிரம்மச்சாரியாக விளங்குபவர். தம்மை வழிபடுவோருக்கு காரிய சித்தியும் அதற்குரிய புத்தியும் அருள்பவர். ஆதலில் சித்தி,புத்தி என இரு பண்புகளையும் இரு மனைவியராக உடையவர். அவர் விநாயக அடியார்களின் இடையூறுகளை அகற்றுவதற்கு வல்லபம் என்ற ஆற்றல் உடையவராக விளங்குகிறார்.

### தேவதை விநாயகர்

இவ்வாறு விநாயகர் அடியார்கள் பொருட்டு முப்பத்திரெண்டு பேதங்கள் உடையவர். யோக நூல்களில் மூலாதாரத்துக்குரிய தேவதை விநாயகர் என்று கூறப்பட்டுள்ளது. விநாயகரை ஆறு சமயங்களும் வழிபடும். விநாயகரை வெள்ளிக்கிழமை, சதுர்த்தி, மார்கழி மாதம் வளர் பிறை சஷ்டி ஆகிய நாள்களில் நன்கு உபவாசம் இருந்து வழிபட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக விநாயகரை வேண்டி கணபதி ஹோமம் நிறைவேற்றுவார்கள். பொதுவாக யாகங்களில் பல வகையான ஹோமங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு ஹோமத்துக்கும் ஒவ்வொரு விதமான பலாபயன்கள் ஏற்படுகின்றன.

அந்த வகையில் எல்லா விதமான காரியங்களிலும் இடையூறுகள், விக்கினங்கள் ஏற்படாதிருக்க கணபதி ஹோமம் முதலில் செய்யப்படும். அடுத்து செல்வம், பொருள் சேர்வதற்கும் வியாபார விருத்திக்கும் லட்சுமி, குபேர ஹோமம் நடத்தப்படுகின்றது.



### ஆயுள் விருத்திக்காக ஹோமம்

ஆயுள் விருத்திக்காக ம்ருத்தியுஞ்சய ஹோமம், எதிரிகளால் துன்பம் ஏற்படாதிருக்க சுதர்ஸன ஹோமம், பில்லிசூனியம் பகை விலக சண்டிகா ஹோமம், புத்திர பாக்கியத்துக்கு சந்தான ஹோமம் (புத்திர காமேஷ்டி யாகம்) என்பன நடத்தப்படுகின்றன.

இவ்வாறாக பல வகையான ஹோமங்கள் இருப்பினும் மிகவும் சிறந்ததாக கணபதி ஹோமம் விளங்குகின்றது.

இறைவனிடத்தில் நமது தேவைகளை எடுத்துக்கூறி ஒவ்வொரு விதமான வரங்களைக் கோரும்போது ஹோமத்திலே எம் மாலீ அக்கினியில் சேர்க்கப்படும் ஒவ்வொரு திரவியங்களையும், அக்கினி பகவான் என்பவர் அதை வாங்கி வைத்திருந்து எம் தேவைக்கேற்ப அதற்குரிய பொருள்களை அந்தந்த தேவதைகளிடம் சேர்ப்பிப்பதன் மூலம், நாம் கோரும் விரும்பிய வரங்களை அந்தந்த தெய்வங்கள் அக்கினி பகவானிடமிருந்து அதற்குரிய பொருள்களை தாம் பெற்று, நமக்குத் தேவையான வரங்களை வழங்குகின்றனர்.

### விநாயகருக்கு இரண்டு சக்திகள்

விநாயகருக்கு இரண்டு சக்திகள் உள்ளன. ஒன்று சித்தி, மற்றொன்று புத்தி. ஒரே நேரத்தில் விநாயகப் பெருமானை வழிபடுவதன் மூலமாக இரண்டு சக்திகளையும் ஒருசேரப் பெறமுடியும்.

ஒரு செயலைச் செய்வதற்கு அந்தச் செயலைப் பற்றிய விவரத்தை அறிய தெளிவான சிந்தனை, நல்லறிவு வேண் டும். அதை செயலாக்குவதற்கு துணிவு, விவேகம் ஆகியன தேவைப்படுகின்றன. இவற்றைப் பெறுவதற்கு தேனினாலும், தேங்காய் கொழுக்கட்டையினாலும் ஹோமம் செய்ய வேண்டும்.

பரிபூரண திருவருளைப் பெற மோதகத்தால் ஹோமம் செய்ய வேண்டும்.

நல்ல கல்வியறிவு பெறவும், பரீட்சையில் சித்தி பெறவும் கரும்பு, அருகம் புல்லால் ஹோமம் செய்யப்படுகின்றது.

தீராத வியாதிகள் நீங்கவும் பில்லிசூனிய பாதிப்புக்கள் விலகவும் வெள்ளெருக்கால் ஹோமம் செய்யப்படுகின்றது.

முன்செய்த பாவங்கள்,கர்மவினைகள் நீங்குவதற்கு நெய்யினாலும், எள்ளினாலும், அருகம் புல்லாலும்ஹோமம்செய்யப்படுகின்றன.

பயம் நீங்கவும் பிதிர்தோசம் நீங்கவும் எள்ளினாலும், எள்ளுக் கொழுக்கட்டையாலும் தர்ப்பைப் புல்லாலும், அருகம்புல்லாலும் ஹோமம் செய்யப்படுகின்றது: பிரயாணங்களின்போது விபத்துக்களால் சாவுகள் ஏற்படாதிருக்க

> **பொதுவாக யாகங்களில் பல வகையான ஹோமங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வொரு ஹோமத்துக்கும் ஒவ்வொரு விதமான பலாபயன்கள் ஏற்படுகின்றன.**

பலாப்பழம், விளாம்பழத்தால் ஹோமம் செய்யப்படுகின்றன.

நவக்கிரக தேவர்களால் துன்பம் ஏற்படாதிருக்க நவ (ஒன்பது) தானியங்களினால் ஹோமம் செய்ய வேண்டும்.

செல்வம், பொருள் சேர்வதற்கு லட் சுமி கணபதி ஹோமம் செய்யப்படுகின்றன.

நல்ல ஞானம் ஏற்படவும், புத்தி மாறாட் டம் ஏற்படாதிருக்கவும் சர்க்கரை, பஞ்சாமிர்தம் என்பவற்றால் ஹோமம் செய்யப்படுகின்றது.

உடல் வலிமை பெறுவதற்கு கடலை, அவல், விளாம்பழம் ஆகியவற்றால் வீர கணபதி ஹோமம் செய்ய வேண்டும்.

---

# கடுகதி ரயில்களும் கலைந்திடும் எம் உயிர்களும்

மிருசுவில் தமிழ்தாசன்

ஒரு காலத்தில் ரயில் சேவையானது எமது வட பகுதியில் மிக முக்கிய பங்கை வகித்து வந்தது. நகர்ப்புறத்துப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், அலுவலக உத்தி யோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அனைவரும் தமது பிரயாணத்துக்குப் ரயில் வண்டியையே பயன்படுத்தி வந்தனர். குறைந்த கட்டணம், விரைவானபிரயாணம்போன்ற இன்னோரன்ன சௌகரியங்களைக் கொண்டிருந்த புகைவண்டிப் பிரயாணம் மக்களிடத்தில் மிகவும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

### ரயில் சேவை ஆரம்பம்

இவ்வாறான காலத்தில் எமது நாட்டில் துர்அதிர்ஷ்டவசமாக போர் மேகம் சூழ்ந்து அன்றாட இயல்பு வாழ்க்கை எம்மையெல்லாம் விட்டுத்தூர ஓடியது. கூடவே வடபகுதியில் ரயில் சேவையும் ஸ்தம்பிதமடைந்தது.

மீண்டும் இருபத்தைந்து ஆண்டுகளின் பின்பு இந்திய அரசின் அனுசரணையில் ரயில் சேவையை அனுபவிக்கும் வாய்ப்பு எம் மக்களுக்கு கிட்டியுள்ளது. இந்தச் சேவை ஆரம்பமான நாள்களில் மக்களிடத்திலிருந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏனோ இப்போது அவர்களிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த மீள்வருகையானது ஒரு சில பாதகமான விளைவுகளையும் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது. கொழும்பு போன்ற நெடுந்தூரப் பயணங்களில் ஏற்படும் அசௌகரியங்கள் ஒரு புறம், அன்றாடம் ஆங்காங்கே ஏற்படும் விபத்துக்கள், சாவுகள் மறுபுறமாக பொதுமக்களின் மனங்களில் ஒரு வித சலிப்பையும் உண்டாக்கி வருகின்றதென்பதை யாருமே மறுதலித்து விட முடியாது.

> **அன்றாடம் ஆங்காங்கே ஏற்படும் விபத்துக்கள், மரணங்கள் மறுபுறமாக பொதுமக்களின் மனங்களில் ஒரு வித சலிப்பையும் உண்டாக்கி வருகின்றதென்பதை யாருமே மறுதலித்து விட முடியாது.**

### ரயில் விபத்துக்கள்

சமீப காலமாக எமது பகுதியில் இடம்பெறும் ரயில் விபத்துக்களின் எண்ணிக்கை ஆரம்பகாலத்தை விடவும் பல மடங்காக அதிகரித்துக்கொண்டு வருவதை யாவருமறிவர். இதில் வேண்டுமென்றே தம்முயிரை மாய்த்துக் கொள்ளும் தற்கொலைப் பிரியர்களை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு அநியாயமாகப் பரிதாபமாகப் பலியாகிக் கொண்டிருக்கும் பொதுமக்களின் நிலைமைகளைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன. ரயில் வண்டியை ஓட்டும் சாரதிகளின் தவறுகளினால் அல்லது ரயில் கடவையைப் பயன்படுத்தும் பொதுமக்களின் அசிரத்தை காரணமாகத்தான் மேற்படி விபத்துக்கள் இடம்பெறச் சந்தர்ப்பங்களுண்டு. யாரோ ஒரு தரப்பினர் இந்த ரயில் விபத்துக்குப் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும்.

அவ்வாறானால், ரயில் சாரதியின் பக்கம் எமது பார்வை யைச் செலுத்திப் பார்ப்போமானால், ரயில் வண்டியானது ஏனைய மோட்டார் வாகனங்களுடன் இணைந்தோ, சமாந்தரமாகவோ ஓடும் வாகனமல்ல. இதற்கென்று தண்ட வாளம் அமைத்துத் தனியான மார்க்கத்தில் ஓடுவதே இந்த ரயில் வண்டி. வீதியில் ஓடும் மோட்டார் வாகனங்கள் அதிவேகம், ஒன்றையொன்று அவசரமாக முந்திச் செல்லல், சாரதியின் கவனவீனம், மதுபோதை, சாரத்திய தேர்ச்சிக்குறைவு போன்ற காரணிகளால் விபத்துக்களில் சிக்கிக் கொள்கின்றன. ஆனால் ரயிலுக்கு இவ்வாறான வாய்ப்புக்கள் எதுவுமேயிருப்பதில்லை. ரயில் எங்களை நோக்கி வருவதில்லை. நாங்களே அதனை நோக்கிச் சென்று நாங்களாகவே அழிவுகளைத் தேடிக்கொள் கின்றோம் என்பதே யதார்த்தம். வேகமாக ஓடிவரும் ரயில் வண்டியின் சாரதி ஆபத்து வேளையை உணர்ந்து கொண்டாலும் ஒரு மனித உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய வாகனத்தை உடனடியாக நிறுத்த முடிவதில்லை. ஒரு வேளை அப்படி முயற்சித்தாலும்கூட அதுவே மிகப்பெரிய விபத்தாக மாறி ரயிலில் பிரயாணம் செய்யும் அப்பாவி உயிர்களைக் காவு கொள்ளவும் நேரிடும். குறைந்த பட்சம் காயங்களையாவது உண்டு பண்ணலாம்.

### பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

எனவே ரயில் கடவையைப் பயன்படுத்தும் பொதுமக்களே அவதானமாகக் கடக்க வேண்டியபொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்கின்றனர் என்பதை யாவரும் உணர்தல் வேண்டும்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னைய காலங்களிலும்கூட வடபகுதியில் ரயில்சேவை தாராளமாக நடந்திருக்கின்றது. உத்தரதேவி, கொழும்பு ரயில், யாழ்தேவி, இன்ரசிற்றி, மெயில் என அழைக்கப்படும் தபால்வண்டி என்பன சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தன. இவைகளை விட காங்கேசன்துறைக்கும் பளைக்குமிடையேயான குறுஞ்சேவைகளை அன்றைய கரிக்கோச்சி என அழைக்கப்பட்ட நீராவி ரயில்வண்டிகள் செய்து கொண்டிருந்தன. எனவே இன்றைய காலம் போன்றே அன்றும் ரயில்சேவைகள் முழுமையாக நடந்து கொண்டுதானிருந்தன. இருந்தும் தற்காலத்தைப் போன்று மோசமான விபத்துக்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

அன்று வாழ்ந்த எம் மக்கள் இன்றைய காலத்தவர்கள் போன்று அதிகம் படித்தவர்களல்லர் அது மட்டுமல்ல ஏனைய பொது அறிவுகளிலும் சற்றுப் பின் தங்கியேயிருந்தனர். எனினும் பாதுகாப்பாக அவதானமாகவே வாழ்ந்து கொண்டனர்.

அந்தக் காலத்து ரயில்கடவைகளுக்குப் பாதுகாப்பான திறந்து பூட்டக்கூடிய கேற்றுக்களோ அல்லது காவலாளிகளோ இருந்தது கிடையாது. அத்துடன் இன்றைய ஒலி ஒளிச் சமிக்ஞைகளோ அபாய எச்சரிக்கை ஒலிகளோ இருந்ததில்லை. ரயில்வேக் கடவையின் ஒரு புறத்தில் வீதியையண்டி கோச்சி வரும் கவனம் என்னும் ஒரு மிகச்சிறிய எச்சரிக்கை அறிவித்தலே பொறிக்கப்பட்டிருக்கும். இதைமட்டும் கருத்தில் கொண்டு வாகனச்சாரதிகளும் நடைபயணிகளும் கடவைகளைப் பயன்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று 'றிச்சாகத்' திரிந்த றிக்சா இன்று மழலைகளை ஏற்றி வருகிறது

செ.உமாசுதன்

இலங்கையில் தமிழ் மக்கள் அதிகம் வாழ்ந்துவருகின்ற மாகாணங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரதானமாவை. இங்கே தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவருகின்றனர். இவற்றில் வடக்கே யாழ்ப்பாணமும் கிழக்கே திருகோணமலையும் தமிழர் தாயகத்தின் தலைநகரங்களாக விளங்குகின்றன. கடந்து சென்ற முப்பது வருடங்களுக்கு மேலான உரிமைப்போராட்டமும் அதற்கான ஓட்டங்களும் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பல இடர்பாடுகளை தந்திருந்தது.

**பெரிய மனித அவலம்**

மிகப் பெரிய மனித அவலம் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலே இடம்பெற்றது சொத்துக்கள் அழிந்தன. துடிப்போடிருந்த மக்களின் ஒற்றுமை என்ற ஊடாட்டமும் சிதைந்து போனது. அரை குறையுமாய் அல்லாடிக் கொண்டிருந்த உட்கட்டுமானங்களும் அடியோடு தூர்ந்து போயின. தமிழர் தாயகத்தின் வாழ்வாதார மூலங்களும் இன்னும் நிழல் தந்த வீடுகளும் அதன் முற்றங்களும். அதில் சுற்றியிருந்து அன்பாகக் கதையாட வந்து நெளிக்கும் பூரித்துப் புன்முறுவல் பூத்த நிலவொளியும் மாய்ந்து போனது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற நெருப்பு வளையம் இப்போதும் கொழுந்துவிட்டு எரிகிறது. இதனை தணித்து வாழ்வின் இயல்பை தொலைத்தவர்களுக்கு விடுதலை தர தற்போதைய அரசும் முன்வரவில்லை.

இந்த நிலையிலே மக்கள் முகாம்களிலும் ஏனையோர் சொந்த நிலத்தில் இருக்கிறோம் என்ற பெயரளவான பொருமலோடும் இயைபாக்கமடைந்துவிட்டனர். இயற்கையின் சீற்றங்களுக்கும் மக் களிடையே இருந்த இயல்பானவற்றை பெயர்த்தெடுத்துவிட்ட திட்டமிடல்களுக்கும் குடிகொண்டுவிட்ட புதிய மாற்றங்களுக்கும் மண்டியிட்டுப்போயினர். தற்போது தொடர்கதையாய் இருக்கின்ற தீர்வு என்பதன் நீட்சியை முடிவுறுத்தி அதனை முழுமையாய் பெற்றுவிட காத்திருக்கின்றனர். சுயத்தை இழக்க முடியாது என்ற உணர்வோடு இருக்கின்றனர்.

**அபிவிருத்தி என்ற நாமங்கள்**

தற்போது அபிவிருத்தி என்ற நாமங்கள் எங்கும் அலைமோதுகின்றன. பிரதான வீதிகள் அனைத்தும் காப்பெற்றின் 12 அடி கருமைகளால் கலகலக்கின்றன. ரயில் சுக்கு புக்கு சுக்கு என்று சுழன்றடிக்கிறது. வாகனங்களை வலுக்கட்டாயமாக வரவழைத்து. வலம் வர வைக்கின்றது. வீதி விபத்துக்களை வலிந்து திணித்து பலரை சுக்குநூறு ஆக்கு கிறது. வீதியின் இருமருங்கும் பச்சையப் பதுமைகளாய் பயிர் விளைந்த பூமிகளில் கட்டடங்கள் படையெடுக்கின்றன, பார்த்திருக்கிறோம். அபிவிருத்தி என்பதை ஏற்றுக் கொண்டதான தோற்றம் எங்கும் வலுப் பெறுகின்றது. அபிவிருத்தி என்பது தேவையான ஒன்றுதான். இருந்தபோதும் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட மக்களிடையேயான அபிவிருத்தியின் நிலைத்திருப்பு என்பது இதுவல்ல மாறாக வடுக்களில் இருந்தும் மன ரீதியான பாதிப்புக்களில் இருந்தும் உடல் உள ரீதியாக விடுபட்டு ஆரோக்கியமான ஓர் சமூகமாக கட்டியெழுப்பப்படும் போதுதான் அபிவிருத்தி என்பதன் உண்மையான அர்த்தமுள்ள தாகவும் ஆரோக்கியமானதாகவும் அமையும்.


இந்தச் சந்தர்ப்பத்திலே, அபிவிருத்தி என்று சொல்லுகின்ற விடயங்களிடையே, காப்பெற் வீதிகளிடையே எந்த நேரமும் நெரிசலோடு ஓடித்திரியும் புதிய ரக வாகன இறக்குமதிகளின் மேலாதிக்கங்களிடையே 25 வருடங்களுக்கு முன்னதாக எமது தயாரிப்பாக யாழ்ப்பாணத்தின் குண்டும் குழியுமான ஆறடித் தார் வீதிகளிடையே மனித வலுவின் உந்துதலோடு ஓடித்திரிந்த றிக்சா வண்டி தனித்துவமானது. 1990 ஆண்டுகளின் பின்னர் ஆரம்பத்தில் அரிதாக தோற்றம் பெற்றன இவ்வகை மூச்சக்கர வாகனங்கள். யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டிகளின் மூன்று சக்கரங்களை கொண்டு சமநிலையைப் பேணி தற்போது நாங்கள் பார்க்கின்ற ஓட்டோவின் வடிவமைப்பை ஒத்து உருவாக்கம் பெற்ற வடிவமைப்புத் தான் றிக்சா. ஆரம்பத்தில் வலிகாமம் பகுதியில் வில்லியம்ஸ் என் பவரின் முயற்சியுடன் தோற்றம் பெற்ற இந்த றிக்சா 20 அங்குல ரீவியை வேறு இடத்துக்குக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து 1992 ஆம் ஆண்டுகளில் வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையோடு நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு ஏற்றி யிறக்கும் பணியிலே ஈடுபட தொடங்கின. ஏனெனில் பெற்றோல் டீசலின்

> யாழ். நகர மையத்திலிலே நல்லூர் முருகன் ஆலயப் பகுதியை சூழவுள்ள 20 கிலோ மீற்றர் வரையான தூரத்தை ஒவ்வொரு நாளும் றிக்சாவில் உலாவருகின்றார்.

விலை அதிகரிப்பும் ஓட்டோக்களுக்கான வாடகை அதிகரிப்பும் தான் இதற்கான காரணம்.

**250 வரையான றிக்சாக்கள்**

இதனைத் தொடர்ந்து 95 ஆம் 96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சுமார் 250 வரையான றிக்சாக்கள் வீதியுலா வந்தன. அதன் பிற்பட்ட காலப்பகுதியிலே அவற்றின் நடமாட்டம் குறைந்து போனது. ஆனால் சிங்கப்பூர், மலேசியா பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தற்போதும் இதை ஒத்த ரிச்சாக்கள் பாவனையில் இருந்துவருகின்றன. யாழ்ப்பாணத்தில் அடுப்பாக இருந்த டோர்ஸ் நிறுவனமும் றிக்சாக்களை உற்பத்தி செய்து கொடுத்தது. ஆனால் தற்போது 25 வருடங்கள் கழிந்த நிலையில் யாழ்ப்பாண வாசி ஒருவர் மாத்திரம் றிக்சா வண்டியை வைத்திருப்பதுடன். நகர மத்தியிலே அமைந்துள்ள பிரபல பாடசாலைக்கு சிறார்களை ஏற்றி இறக்கும் பணியை இந்த வண்டி மூலம் மேற்கொண்டும் வருகின் றார். அவர் வேறு யாருமல்ல தற்போது கல்வியங்காட்டில் வசித்து வரும் 68 வயதான இரத்தினம் ஐயம்பிள்ளை தான்.



வலிகாமம் பகுதியில் வில்லியம்ஸால் உருவாக்கப்பட்ட 11 றிக்சா வண்டிகளில் இறுதியாக தயாரிக்கப்பட்ட வண்டியே தற்போது இவரிடம் உள்ளது. ஆரம்பத்திலே 8,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்தார். போர்க் காலத்திலே சைக்கிள் உதிரிப்பாகங்களின் வருகை என்பதும் அவற்றின் விலை என்பதும் அதிகமாகக் காணப்பட்டன.

குறிப்பாக ரயர் ரியூப் இன் விலை ஆயிரம் ரூபாவாக இருந்தது. இக்காலப்பகுதியில் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி மல்லாகத்தில் இருந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குச் செல்வதற்கு 500 ரூபா கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் றிக்சாவுக்கு 100 ரூபா தொடக்கம் 150 ரூபா ஆக இருந்தது. யாழ்ப்பாணத்துக்கு 250 ரூபா வேண்டும். தற்போது ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்துவதாக இருந்தால் அதிக பணம் செலுத்த வேண்டியிருக்கிறது.

யாழ். நகர மையத்திலிலே நல்லூர் முருகன் ஆலயப்பகுதியை சூழவுள்ள 20 கிலோ மீற்றர் வரையான தூரத்தை ஒவ்வொரு நாளும் றிக்சாவில் உலாவருகின்றார். காலை எழு மணிக்கு வீட்டிலிருந்து புறப்படும் ஐயம்பிள்ளை தன்னுடைய வாகனத்திலே 5 தொடக்கம் 6 வரையான சிறார்களை ஏற்றிகொண்டு வந்து ஜோன் பொஸ்கோ பாடசாலையிலே அவர்களை இறக்கிவிடுகின்றார். அதன் பின்னர் மு.ப. 11 மணியளவில் மீண்டும் பாடசாலை சென்று அவர்களை ஏற்றி வீடுகளிலே பாதுகாப்பாக விட்டுவிடுகின்றார். ஆரம்ப காலங்களிலே வண்டியோடு இணைந்த சைக்கிளில் ஏறி இருந்து வாகனத்தை செலுத்துவதற்கான வலுவை பெற மிதிக்க வேண்டும். ஆனால் தற்போது எம் முன்னே ஓடித்திரிகின்ற பற்றறி சைக்கிள் இவருக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இதனை வண்டியுடன் இணைத்து பற்றியின் வலுவுடன் மித வேகத்திலே (15 கிலோ மீற்றர் வேகம்) பயணிக்கிறார். மொத்தமாக ஆறு மாணவர்களை இவர் ஏற்றி இறக்குகின்றார். ஒரு மாணவனிடம் இருந்து மாதத்துக்கான வாடகையாக 1,500 ரூபாவைப் பெற்றுக் கொள்கின்றார். ஆரம்ப காலத்திலே இந்த றிக்சா வண்டி சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம், மூளாய், நெல்லியடிஎனபலஇடங்கள்சென்றதுடன்சங்குப்பிட்டியூடாக கேரதீவு என போய் புதுக்குடியிருப்பு வரை போய் வந்திருக்கிறது.

போர்க்கால இடர்களின்போது நோயளர்களை ஏற்றிய படி வடுக்களை சுமந்திருந்த தார் வீதிகளின் வழியே பல தூரம் சிட்டாய் பறந்திருக்கிறது. ஆரம்பத்தில் பொன் வாத்து என அழைத்து தற் போது சக்தி ரவல்ஸ் என்ற நாமத்தோடு குழந்தைகளின் புன்சிரிப்பான குதூகலத்தோடும் அவர்களுக்கு முதுமையின் அனுபவப் பகிர்வோடும் தினம் வீதியில் ஆடிப்பாடி ஊர்ந்து செல்கிறது இந்தத் தேர்.



**மழலைகளின் பயணம்**

இந்த மழலைகளின் பெற்றோர் வைத்தியர்களாகவும் வங்கியாளர்களாகவும் இருக்கின்றபோதும் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த வண்டியிலே மன உவகையோடு பாடசாலைக்க அனுப்பி வைக்கின்றனர். குழந்தைகளும் ஆங்கிலத்தில் நிறை அறிவுடைய ஐயம்பிள்ளையை செல்லமாக றிக்சா மாமா என்றும் அதீத அன்போடு தாத்தா என் றும் உறவாடி தங்களின் திருவாய்களிலே பாடல்களை பாடி பய்ணிக்கின்றனர். ஓர் அன்பான தாத்தாவாக அவரின் அறிவுரைகள் கேட்டு நடை பயில்கின்றனர். பாடசாலை பயில செல்கின்றனர். நவீன உலகின் புத்தாக்கங்களிடையே இயந்திரமயமான வாழ்வின் ஓட்டங்களிடையே எந்தவித இரைச்சலுமின்றி இயல்பாக பயணிக்கும் ஒரு பழைமையின் ஆதாரமான றிக்சா வண்டியிலே ஆடிப்பாடி நண்பர்களோடு குதூகலித்து பாடசாலை செல்லும் சந்தோசம் இந்த மழலைகளை விட வேறு யாருக்குக் கிடைத்திருக்கிறது. இவர்களின் எதிர்கால மீள நினைத்தல் இதன் கதையை பலருக்கும் சொல்லும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# குதிரை மீதிருந்து விழுந்த குரு

மூர்க்கன் தன்னுடைய வீட்டுக்கு அழைத்து வந்திருந்த நபரைக் குருவுக்கு அறிமுகப்படுத்தி, குருதேவா! இவர் முக்காலமும் உணர்ந்த ஞானி. ஜோதிட சாஸ்திரத்தில் வல்லவர். மரத்தின் மீது அமர்ந்து கிளையை வெட்டிக் கொண்டிருந்த என்னை சற்றுநேரத்தில் நீ கீழே விழுவாய் என்று கூறினார். அவர் கூறியமாதிரியே நான் கீழே விழுந்தேன். இப்படிப்பட்ட ஒரு ஞானியை நாம் சந்திக்க நேர்ந்தது பெரிய அதிர்ஷ்டமாகும். தாங்கள் விரும்பினால் இவரிடம் ஏதாவது சந்தேகம்கேட்கலாம்என்று கூறினான்.

உண்மையில் வந்தவர் ஞானியோ, ஜோதிடரோ அல்லர். மூர்க்கன் தன்னைப்பற்றி மிகையாகக் கூறியது அந்த மனிதனுக்குத் தர்மசங்கடத்தை அளித்தது.

அந்த இடத்தைவிட்டு எப்படியாவது தப்பிச் சென்றால் போதுமென்றாகிவிட்டது, அந்த மனிதனுக்கு.

பரமார்த்த குருவோ மகிழ்ச்சியடைந்தவராக அவரைப் பலவாறு உபசரித்து சுவாமி, எனக்கு கொஞ்சக் காலமாகவே என் வாழ்க்கையைப் பற்றி ஒரே குழப்பமாக இருக்கிறது. எனக்கு வயதாகி முதுமைத் தளர்ச்சி அதிகமாகஇருக்கிறது. திடீரெனஒருநாள் இறந்துவிடுவேனோ என்ற ஒரு சந்தேகம் தொடர்ந்து ஏற்படுகிறது. நான் எப்பொழுது மரணம் அடைவேன், நான் மரணம் அடைவதற்கு முன் என்ன மாதிரியான அறிகுறிகள் ஏற்படும்? இதைப்பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன் என்று கூறினார்.

ஆசாமிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. வாய்க்கு வந்த எதையாவது சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுத் தப்பிச் சென்றால் போதுமென எண்ணி, ஆசன சீதம் நாசம் என்று வாய்க்கு வந்த ஏதோ ஒன்றைச் சொன்னான்.

பெரியவரே! தாங்கள் கூறியதன் அர்த்தம் என்ன? என்று சீடர்கள் கேட்டார்கள். உங்கள் குருதேவருடைய ஆசனப்பகுதி எப்பொழுது குளிர்ந்துவிடுகிறதோ, அப்பொழுது அவருக்கு மரணம் சம்பவிக்கும் என்று விளக்கம் கூறிவிட்டு அந்தப் மனிதன். அந்த இடத்தை விட்டு மெல்ல அகன்றுவிட்டார்.

பரமார்த்த குருவுக்கு ஒரே கலக்கமாகிவிட்டது.

இனிமேல்என்உடம்பின்மீதுதண்ணீரேபடவிடக்கூடாது. ஒருபோதும் கை, கால்களைக்கூட கழுவக்கூடாது, குளிக்கக்கூடாது என்று பரமார்த்த குரு தனக்குத்தானே கூறிக்கொண்டார்.



நீண்டகாலமாக வெளியே பயணம் செய்யாத காரணத்தால் பரமார்த்த குருவும், சீடர்களும் கையில் செலவுக்குக் கூட பணமில்லாது திண்டாடினார்கள்.

ஊர்சுற்றிக்கொண்டிருந்தால் மக்கள் ஏதாவது தர்மம் செய்யாமலிருக்கமாட்டார்கள். ஒரு தடவை வெளியே சென்று வரலாம் என்று பரமார்த்தகுரு தீர்மானித்தார்.

இப்போது குதிரை யும் கொஞ்சம் உடல் பலம் பெற்றிருந்தது. அதனால் அதில் பயணம் செய்து சிரமத்தைக்குறைத்துக் கொள்ளலாம் என்று பரமார்த்த குரு நினைத்தார்.

ஒரு நாள் பரமார்த்த குருவும் சீடர்களும் யாத்திரைக்குப் புறப்பட்டனர். பரமார்த்த குரு குதிரை மீது அமர்ந்து சவாரி செய்ய, சீடர்கள் அவரைச் சூழ்ந்து நடந்து சென்று கொண்டிருந்தனர்.

மரங்கள் அடர்ந்த ஒரு சாலை வழியாக அவர்கள் சென்று கொண்டிருக்கும்போது தாழ்வாக இருந்த ஒரு மரக்கிளை பட்டு பரமார்த்தகுருவின் தலைப்பாகை கீழே விழுந்துவிட்டது.

அதைச் சீடர்கள் எடுத்து வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் பரமார்த்த குரு தொடர்ந்து பயணம் செய்துகொண்டிருந்தார்.

வெய்யில் அதிகமாகிவிடவே தலையில் சூரிய வெப்பம் பட்டுப் பரமார்த்த குருவுக்கு கஷ்டமாக இருந்தது.

சீடர்களில் ஒருவனை அழைத்து, தலைப்பாகை எங்கே? என்று கேட்டார். தலைப்பாகையா? நாங்கள் எடுக்கவில்லையே! என்றான் சீடன்.

ஏன் எடுக்கவில்லை? தலைப்பாகை கீழே விழுந்தால் எடுக்க வேண் டாமா? என்று கேட்டார். பரமார்த்தகுரு.

தலைப்பாகை கீழே விழுந்தால் எடுக்க வேண்டும் என்று தாங்கள் எங்களுக்கு உத்தரவிடவில்லையே என்று கேட்டான் மற்றொரு சீடன்.

முட்டாள்களா! ஒரு பொருள் கீழே விழுந்தால் எடுக்கவேண்டும்என்றுகூறவேண்டுமா? உங்களுக்கே தெரிய வேண்டாமா? இனி இந்தமாதிரித் தவறைச் செய்யாதீர்கள் என்று பரமார்த்தகுரு எச்சரிக்கை செய்தார்.

இனி என்ன கீழே விழுந்தாலும் எடுத்துப் பத்திரமாக வைத்துக்கொள்வோம் என்றனர் சீடர்கள்.

உடனே வந்த வழியே ஓடிச்சென்று தலைப்பாகையை எடுத்து வந்தனர். சிறிது நேரம் எல்லோரும் தொடர்ந்து பிரயாணம் செய்தனர்.

கொஞ்சத் தூரம் சென்றதும் மட்டி குருவினுடைய தலைப் பாகையில் எதையோ மூடையாகக் கட்டிப் பயபக்தியுடன் பரமார்த்த குருவின் கையில் கொண்டு வந்து கொடுத்தான்.

இது என்ன மூடை? என்று பரமார்த்த குரு கேட்டார்.

சற்றுமுன்எம்முடையகுதிரைலத்திபோட்டது.நான்மிகவும் சாமர்த்தியமாக கீழே விழாமல் தங்கள் தலைப் பாகையிலேயே பிடித்து மூடையாகக் கட்டிவிட்டேன் என்று பெருமிதத்துடன் கூறினான் மட்டி.

தொடரும்........

1656 - முதலாவது செயற்கை முத்து பரிஸில் எம்.ஐக்குயின் என்பவரால் உருவாக்கம்.

1798 - றோட் தீவு டேவிட் வில்கின்சன் இயந்திரத்தின் காப்புரிமை பெறல்

1901 - முதலாவது மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி லண்டன் றோயலில் நடைபெற்றது.

1915 - முதலாவது உக அதிபார குத்துச்சண்டை சம்பியனாக கறுப்பின வீரர் ஜக்ஜோன்சன்.

1927 - பிரிட்டனிடமிருந்து ஈராக் சுதந்திரம். ஆனாலும் பிரிட்டிஷ் துருப்புக்கள் தொடர்ந்து அங்கு இருக்கும்.

1941 - பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில், எம்.எம்.எஸ்.டியூக் கப்பலில் ஐக்கிய அமெரிக்காவுக்குப் பயணம்.

1946 - ஐ.நா.பொதுச்சபை, ஐ.நா. தலைமையகத்தை நியூயோர்க்கில் அமைப்பதற்கு வாக்களிப்பு.

1974 - இந்தியாவுக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட்போட்டியில், 20 பவுண்டரிகள், 6 சிக்ஸர் உட்பட 192 ஓட்டங்களை விவிஸன் றிச்சார்ட் குவித்தார்.

1977 - எகிப்து, இஸ்ரேலிய பிரதிநிதிகள் கெய்ரோவில் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபாடு.

1981 - 1967 சிரியப் போரில் கைப்பற்றிய கோலான் குன்றுப் பகுதியை இஸ்ரேல் இணைத்துக் கொண்டது.

1988 - 13ஆண்டுகளில் முதற்தடவையாக, பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சு நடத்த அமெரிக்கா இணக்கம்.

1990 - சாவதற்கான உரிமைஅல்லது கருணைக் கொலை. நான்ஸி குருவின் ஊட்டக் குழாய் அகற்றப்படுவதற்கு வழக்கில் அனுமதி. 12 நாள்களின் பின் இறந்தார்.

2003 - பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கொலை முயற்சியிலிருந்து, மயிரிழையில் உயிர் தப்பினார்.

2003 - சதாம்ஹுசைன் பிடிபட்டதாக ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அறிவிப்பு

2004 - உலகின் மிக உயரமான படலம் மில்லாவ் பிரான்ஸில் அதிகார பூர்வமாக திறந்து வைப்பு.

2005 - சிறையிலடைக்கப்பட்ட ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன், சட்டத்தரணிகள் ஊடாக, புதிய பாதணிகள், கதைப் புத்தகங்களுக்குக் கோரிக்கை.

2008 - ஜோர்ஜ் புஷ் ஜனாதிபதியாக தனது நான்காவதும், இறுதியுமான திட்டமிட்ட பயணத்தை ஈராக்குக்கு மேற்கொண்டார்.

2008 - புதுக்குடியிருப்பு, விசுவமடு பகுதிளிலிருந்து, முல்லைத்தீவு நோக்கி மக்கள் இடப்பெயர்வு.

ஈராக் ஊடகவியலாளர் முங்டார் அல்ஷெடியால் அவர்மீது செருப்பு வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

2010 - மகிந்தவுக்கு எதிரான லண்டன் ஆர்ப்பாட்டம், நடவடிக்கை எடுக்காது பிரிட்டிஷ் அரசு கைவிரிப்பு.

2010 - லண்டனில் விக்கிலீக்ஸ் நிறுவுனர் நீதிமன்றால் பிணை அனுமதி

2010 - வன்னியில் இறுதிப் போரின்போது பணியாற்றிய 2 மருத்துவர்கள் விடுதலை.

2010 - மூத்த பத்திரிகையாளர் டேவிட்ராஜ் கொழும்பில் நேற்றுக் காலமாகினார்.

2010 - இந்திய நாடாளுமன்றத்தின் 23 நாள்கள் கூட்டத் தொடர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமளியால் முடக்கப்பட்டு புதிய வரலாறு படைக்கப்பட்டது.

2012 - 20 சிறுவர் உட்பட 28 பேர் சன்டி ஹுக் தொடக்கப் பள்ளியில் சுட்டுக்கொலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் நீங்கள் திருந்தவேயில்லை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையும், இராணுவத்தின் தலைமையும் குற்றங்கள் எதுவும் புரியவில்லை. அந்த அமைப்பில் இருந்த ஒரு சிலரே குற்றங்களில் ஈடுபட்டனர். இரு தரப்பினரும் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்படவில்லை. இவ்வாறு அடுக்கடுக்காக பல பேச்சுக்களை அள்ளி விட்டிருக்கின்றார், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.

இவரின் இந்தப் பேச்சுக்களை வெளிப்படையாகப் பார்க்கும் போது இனிப்பாகத் தெரியும். விடுதலைப் புலிகளின் தலைமையைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கின்றார் என்று நாங்கள் புளங்காகிதம் அடையக்கூடும். அட சிங்களவர் ஒருவரே, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் ஒருவரே, தமிழீழ போராட்டத்தின் தலைமைக்கு அங்கீகாரம் கொடுத்திருக்கின்றார் என்று எண்ண முடியும்.

உண்மையில் ஆணைக்குழுவின் தலைவரின் இந்தப் பேச்சுக்களின் பின்னால் - வெளித் தெரியாத - நுண்ணரசியில் இழையோடி இருக்கின்றது. தங்களை தமிழர்களிடத்தில் நம்பிக்கையானவர்களாக்குவதும், இராணுவத் தலைமையைக் காப்பாற்றுவதும் அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்தவினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவும், அதன் தலைவரும், தம்மை நியமித்த அதிஉத்தமனாருக்கு விசுவாசமாகச் செயற்பட முனைகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை என்பது இப்போது இல்லை. தலைமையாக தங்களை அறிவித்துக் கொண்டவர்கள் இப்போது அரசு பக்கம்தான் இருக்கின்றனர். இராணுவத்தின் தலைமை என்பது இப்போதும் இருந்து கொண்டிருக்கின்றது. அந்தத் தலைமைக்கு கட்டளை பிறப்பித்தவர்களும் இப்போதும் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை-போரின்போது மருத்துவமனை மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது தனித்து ஒரு இராணுவ வீரரினால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. ஷெல் அடிக்கும் இராணுவ வீரனுக்கு, இந்த நிலையை இலக்கு வைத்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கும். அவ்வாறு அந்தக் கட்டளையைப் பிறப்பித்தது யார் ? இராணுவத்தின் தலைமையினால் பிறப் பிக்கப்பட்ட கட்டளையையே ஷெல் அடிக்கும் இராணுவ வீரன் மேற்கொண்டிருப்பான்.

அடுத்ததாக, மேஜர் ஜெனரல் சந்திரசிறி (முன்னாள் ஆளுநர்) யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்தவர். அவரின் காலத்தில், அவரினால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு நேரத்திலேயே பலர் கடத்தப்பட்டனர். இராணுவச் சீருடையுடன் வந்தவர்களாலும் - சிவில் உடையில் வந்தவர்களாலும் அவ்வாறு கடத்தப்பட்டனர். தனது இராணுவ ஊரடங்கு நேரத்தில் இவ்வாறான விடயம் நடக்கின்ற போது அது தொடர்பில் விசாரணை நடத்தியிருக்க வேண்டிய பொறுப்பு சந்திரசிறிக்கு




உரியது. அவர் அதனை அந்தக் காலத்தில் செய்யவில்லை. அதாவது இராணுவத் தளபதியாக யாழ்.மாவட்டத்தில் இருந்த போது இந்த விசாரணையை நடத்தி, ஊரடங்கு நேரத்தில் கடத்திய இராணுவ வீரனை தண்டித்திருக்கலாமே.

அப்படியாயின், இராணுவ ஊரடங்கு நேரத்தில் - இராணுவச் சீருடையுடன் வந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல், இராணுவத் தளபதிக்குத் தெரியாமலா நடந்தது? அவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத - இராணுவத் தளபதிக்கு எதிராக ஏன் இராணுவத் தலைமை நடவடிக்கை எடுக்கவில்லை?

வெள்ளைக் கொடி விவகாரத்திலும், பிரபாகரனின் மகன் பாலசந்திரன் விடயத்திலும் என்ன நடந்தது? சரணடைந்தவர்களை ஆற அமர இருத்தி விட்டு சுட்டுக்கொலை செய்திருக்கின்றார்கள். சரணடையும் நேரத்தில் சுட்டுக் கொலை செய்திருந்தால் கூட இராணுவ வீரன் தவறாக செய்திருக்கின்றான் என்று சொல்ல முடியும். ஆனால் ஆற அமர இருத்தி வைத்து விட்டுப் பின்னர் கட்டளை வந்ததும் சுட்டுக் கொன்றதாக இருந்தால், அந்தக் கட்டளையை யார் பிறப்பித்தார்கள்? இராணுவத் தலைமைக்கு தெரியாமலா இதுவும் நடந்தது?

இராணுவக் கட்டமைப்பில், கட்டளைக்கு அடிபணிந்து நடப்பவர்களே இராணுவ வீரர்கள். தனி ஒரு இராணுவ வீரன் நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்து முடித்திருந்தால், அந்த இராணுவ வீரனுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டியது இராணுவத் தலைமையின் பொறுப்பல்லவா! அந்தப் பொறுப்பை நிறைவேற்றாமல் இருப்பது ஏன் ?

ஆக இராணுவத் தலைமையின் கட்டளையை இராணுவ வீரன் செயற்படுத்தியதாலேயே, இராணுவத் தலைமை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில், அந்த இராணுவத் தலைமையைக் காப்பாற்றும் நோக்குடன் செயற்படுகின்றது ஜனாதிபதி ஆணைக்குழு.

இப்போது சொல்லுங்கள், ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் புலிகளின் தலைமையும் - இராணுவத் [illegible] குற்றம் இழைக்கவில்லை என்று சொல்லி யா[illegible] முனைந்திருக்கின்றார் என்பதை.



# பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி இடுவோமா?

உடுவிலூர் கலா

வன்முறைகள் நிறைந்துள்ள சமுதாயத்தில் நாம்வாழ்ந்துகொண்டிருக் கிறோம். பெண்களுக்கெதிரான வன்முறை என்பது எமது சமுதாயத்தில் சகஜமாகிவிட்டது. பெண்ணுரிமை, பெண் சமத்துவம் பற்றி பேசுகின்றனர். பத்திரிகைகளில் எழுதுகின்றனர். எவையுமே நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. வன்முறையாளர்கள் எவவரும் சட்டத்தின் பிடியில் சிக்குவதில்லை. சிக்கினாலும் சிறைக் கைதிகளாகி குறிப்பிட்ட சில நாள்களிலோ, மாதங்களிலோ விடு தலையாகி விடுகின்றனர். வீட்டுக்குவீடு தெரிந்தும் தெரியாமலும் பெண்கள் வன்முறைகளை அனுபவித்து வருகின்றனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து விட்ட இந்த வேளையில், பெண்களுக்கான பாதுகாப்பு, சம உரிமை என்பவற்றை அடுத்தவர் களிடம் எதிர்பார்ப்பது பெண்கள் செய்கின்ற பெரும் தவறு. பெண்கள் தமது பாதுகாப்பை தாமே உருவாக்க வேண்டும். சமஉரிமையை அன்றாட கருமங்கள் தொடங்கிஅலுவலகம் வரை பெற்றுக்கொள்ளத் துணிவோடு போராட வேண்டும். வன்முறைகளுக்கு தலையசைக்கும் பெண்களாக வாழ்வது வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களை மட்டுமல்ல, எதிர்கால பெண் சந்ததியையும் வன்முறை என்கிற புதைகுழிக்குள் புதைக்கும் கொடூரமான செயலாகும். எமக்கு முன்பின் அக்கம் பக்கம் எல்லாம் வன்முறை ஆட்சி செய்யாமல் எம்மைப் பாதுகாக்க வேண்டியது பெண்களாகிய எமது கடமையாகும்.

கல்வியறிவின் சுவாசம் தெரியாது அடுப்பின் புகையை சுவாசித்து பெண்கள் அடிமைகளாக வாழ்ந்ததை பொறுக்க முடியாமல் புரட்சிக்குரல்கொடுத்தவன் பாரதி. இன்று கல்வியறிவில்மூழ்கிஅறிவியல்அரங்கத்தில் அமர்ந்திருந்து, அண்டவெளியில் பறந்து சாதனை படைத்து விட்டனர். இனியும் ஆணாதிக்க அராஜகத்துக்கு செவி சாய்ப்பது நியாயமானதா? வன்முறை செய்யும் வல்லூறுகள் எம்மைக் கொத்திப் பார்க்க இடமளிப்பது தகுமா? அன்று வீட்டுக்குள் இருந்த பெண் கள் இன்று விண்வெளி வரை உள்ளனர். எனவே, எமக்குள் இருக்கும் திறமைகள், உயர்ந்த பண்புகள் என்பவற்றை வன்முறையாளர்களோடு உரசிப் பார்த்து வெற்றியடைய வேண்டும். வன்முறை களுக்கு இசைந்து போவது என்பது பெண்களின் உரிமைகளுக்கு சாவுமணி அடிப்பது போன்றது.

> கல்வியறிவின் சுவாசம் தெரியாது அடுப்பின் புகையை சுவாசித்து பெண்கள் அடிமைகளாக வாழ்ந்ததை பொறுக்க முடியாமல் புரட்சிக்குரல் கொடுத்தவன் பாரதி. இன்று கல்வியறிவில் மூழ்கி அறிவியல் அரங்கத்தில் அமர்ந்திருந்து, ஏன்? அண்டவெளியில் பறந்து அதனை படைத்துவிட்டனர்.

இருபாலாரும் சமமாகவே படைக்கப்பட்டவர்கள். உரிமைகளும் சமமாகவே உள்ளன. பெண்களை வேதனைக்குள்ளாக்குகின்ற சில தப்பான கோட்பாடுகள் அன்று தொட்டு இன்று வரை ஆழமாக வேரூன்றி விட்டன. சில மூடக் கொள்கைகள் காரணமின்றி விதைக்கப்பட்டு விட்டன. இவையெல்லாம் ஆண்களுக்கு சாதகமாகி விட்டன. ஆணாதிக்கம் என்பது எழுதப்படாத விதி. பெண்மையின் மென்மை, பொறுமையையும், பண்பாட்டின் சில விதிமுறைகளையும் மூடக் கொள்கைகளையும் தம்வசமாக்கி ஆணாதிக்கத்தை நெறியாள்கை செய்கின்றனர். இவைகளே பெண்ணடிமைக்கு சீரான பாதையை வகுத்துவிட்டன எனலாம். இன்று ஆணாதிக்கம் பெண்களை ஆட்சி செய்கின்றது. மனவிருப்பில்லாவிட்டாலும் இதற்கு ஒத்துப் போகிறவர் களாகவே பெண்கள் உள்ளனர்.

ஆண்களை விட பெண்களே பலமானவர்கள். ஆண்களால் பல வீனப் படுத்துகிறார்கள் என்பதே யதார்த்தம். பத்துமாதம் கருவைச் சுமந்து சிசுவின் அசைவுகள், உதைகளை தாங்கி, தொப்புள் கொடி மூலம் உணவு வழங்கி பிரசவ வலி என்னும் மறுஜென்மத்துக்குள் பிரவேசித்து, ஓர் உயிரை பிரசவித்து அம்மா என அக்கணமே அழைக்கப்படும் பிரமாதான் பெண். அப்பா என்னும் அந்தஸ்தையும் ஆணுக்கு வழங்குகிறாள் பெண். இந்த உன்னதமான, உணர்வுபூர்வமான செயலை எந்தஓர்ஆணாலும்செய்யமுடியுமா? இவற்றையெல்லாம் மறந்தே பெண்களை வன்முறை செய்கிறார்கள் ஆண்கள். தந்தை, கணவன், மகன் என உறவுகளை அன்புடன் பரிவுடன் பேணிப்பாது காக்கும் பெண், அந்த உறவுகளாலேயே வன்முறைக்கு ஆளாகின்றாள். எவராக இருந்தாலும் ஆண் ஆண்தான்.

வாழும் காலத்தில் ஒவ்வொரு பெண்ணும் தனது முன்னேற்றத்துக்காக குறைந்தது அரை மணி நேரமாவது செலவு செய்ய வேண்டும். இருக்கும் உணவுகளை உறவுகளுக்கு பகிர்ந்து கொடுத்து விட்டு வெற்று வயிறோடு துயில் கொள்ளும் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியிட வேண் டும். சமமாகப் பகிர்ந்துண்டு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். முடிந்தவரை சந்தோசத்தை தொலைத்து விடாமல், எமக்குள் சந்தோசம் ஏற்படுத்தும் சூழலை உருவாக்க வேண்டும். பெற்ற பிள்ளையாயினும், கட்டிய கணவனாலும் எல்லா வற்றையும் கொடுத்து வெறும் கையோடு வாழ் வதைத் தவிர்க்க வேண்டும். பிற்காலச் செலவுக் கென சிறுபகுதியையாவது சேமித்து வைக்க வேண்டும். மற்றவர்கள் கடைசிக் காலம் வரை பார்ப்பார்கள் என்கிற அடுத்தவர் மீதான நம்பிக்கையை விடுத்து எமது வாழ்வாதாரத்தை பலப்படுத்த வேண்டும். சொந்தக் காலில் நிற்கும் மன நிலையை உறுதியாக்க வேண்டும். வயதான காலத்திலும்கூட, பாதுகாப்பை பெண்கள் தமக்கே தாமே ஏற்படுத்த வேண்டும். உறவுகளால், உபத்திரவம் ஏற்படுமிடத்து, எங்காவது தனியே போய்க் குடியிருக்க நினைக்காது, வயோதிபர் இல்லங்களில் சென்று குடியேறிவிட வேண்டும். உறவுகளின் அன்பை, அரவணைப்பை எதிர்பார்த்து மரண பரியந்தம் அழுவதைவிட பொதுவான இடங்களில் புதிய உறவுகளோடு சந்தோசமாக வாழலாம். வயதானாலும் பெண் என்ற நிலையிலேயே பாலியல் வன்முறைகள் தொடர்கின்றன.

ஆக, எமது உரிமையை நிலைநாட்ட, பாதுகாப்பை உறுதிப்படுத்த நாமே எம்மைத் தயார்ப் படுத்த வேண்டும். நாம் எமது சொந்தக்காலில் நிற்கும்போது, எந்த ஆணாதிக்கமும் எதுவும் செய்ய முடியாது. ஒவ்வொரு பெண்ணும் தம்மை நிதானித்து தாமே தமக்குத் துணை யாக ஆறுதலாக வாழ்ந்தால் ஆணாதிக்கத்தின் தோல் உரிந்து விடும். எம்மை நாமே பாதுகாக்க வேண்டும். பெண்களுக்கெதிரான வன்முறையை அடியோடு இல்லாதொழிக்க நம்மை நாமே தயார்ப்படுத்துவோமா பெண்களே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 3 | 5 | | | |
| | 9 | | 6 | | | 8 | | |
| | 3 | | | 9 | | | | 7 |
| | | | | | | 3 | 9 | |
| | | 6 | 9 | | 2 | 1 | | |
| | 8 | 1 | | | | | | |
| 7 | | | | 8 | | | 4 | |
| | | 3 | | | 4 | | 2 | |
| | | | 2 | 7 | | | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## மஞ்சள் நீராட்டு விழாவுக்கு சர்வதேச விருது

"தி யெல்லோ பெஸ்டிவல்" (மஞ்சள் நீராட்டு விழா) என்ற குறும்படத்துக்கு ஐதராபாத்தில் நடைபெற்ற சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழாவில், தங்க யானை விருது கிடைத்துள்ளது.

தமிழகத்தில் உள்ள கிராமங்களில், மஞ்சள் நீராட்டு விழாவுக்குத் தனி மதிப்பு உண்டு. இந்த விழா பற்றி ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு அபிப்பிராயம் உண்டு. ஒரு பெண் குழந்தை சிறுமியாகி, பின்னர் பெண்ணாகப் பரிமாணம் அடையும் அற்புத தருணம் அது.

எமது கலாசாரப்படி பெண்ணைச் சீர்படுத்தி, பக்குவப்படுத்தி, அழகுபடுத்தி, உடலுக்கு வலுச் சேர்க்கும் உணவு வகைகளைக் கொடுத்து மரியாதை செலுத்துவதே இந்த விழா. அதுபற்றிய படம் இது.

இந்தப் படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு, உலகெங்குமிருந்து சுமார் 56 படங்கள் கலந்துகொண்ட சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழாவில், தங்க யானை விருது பெற்றுள்ளது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** செயல்களில் புதிய மாறுதல் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். குடும்பத்தில் புதிய வகையில் செலவு ஏற்படும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை உதவும்.

**இடபம்:** பிறர் நலனில் அக்கறை காட்டி வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது. இயந்திரப் பிரிவுப் பணியாளர்கள் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**மிதுனம்:** எதிரியும் விலகிச் செல்லும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் சுப விடயப்பேச்சு நடந்தேறும். புத்திரர் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** பணிகளை ஆர்வத்துடன் மேற்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், குடும்ப நலனில் கவனம் செலுத்துவர்.

**சிங்கம்:** பொது விவகாரத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு கூடும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**கன்னி:** கடந்த உழைப்புக்கான பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். குடும்பத் தேவை அதிகரிப்பதால் பணக்கடன் பெறுவீர்கள். விப்பிராணிகளிடம் விலகுவது நல்லது.

**துலாம்:** செயல்களை சிறப்பாக நிறைவேற்ற உறுதி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணிகளில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் தாய்வீட்டாரின் அன்பைப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**தனுசு:** சாதனை நிகழ்த்த புதிய வாய்ப்பு தேடிவரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பிள்ளைகளின் செயல்பாடு பெருமை தரும்.

**மகரம்:** நல்லோரின் ஆலோசனையை ஏற்று நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**கும்பம்:** மனதில் ஆன்மிகச் சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள். குடும்பத்தில் சுபவிடயப் பேச்சு நடக்கலாம்.

**மீனம்:** பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் கூடும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்

## WhatsApp படித்ததில் பிடித்தது

## குழந்தைகளிடம்...

- ❖குழந்தைகளிடம் நண்பனைப் போல் உரையாடுங்கள்.
- ❖அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளி ஆகிறது.
- ❖கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வளர்கிறது.
- ❖குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்கக் கற்றுக் கொள்கிறது.
- ❖அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கிறது.
- ❖பாதுகாக்கப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது.
- ❖ஊக்குவிக்கப்படும் குழந்தை மனத்திடம் பெறுகிறது.
- ❖புகழப்படும் குழந்தை பிறரை மதிக்கக் கற்றுக்கொள்கிறது.
- ❖நட்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்கக் கற்றுக் கொள்கிறது.
- ❖நேர்மையைக் கண்டு வளரும் குழந்தை நியாயத்தைக் கற்றுக்கொள்கிறது.
- ❖4,5வயதுகளில் குழந்தைக்கு நன்மை, தீமையைப் பற்றிச் சொல்லித் தரவேண்டும்.
- ❖தினமும் அரை மணி நேரமாவது குழந்தைகளிடம் நண்பனைப்போல் உரையாடுங்கள்..



வெள்ள நிவாரணதிற்கு மத்திய அரசு ஒதுக்கிய நிதியை தமிழகத்திற்கு வழங்க கூடாது------சு. சாமி

அப்போ, அந்த நிதியை என்ன பண்ணலாம்? உன் அப்பன் யாருன்னு கண்டுபிடிக்கிற ஆராய்ச்சிக்கு பயன்படுத்துவோமா?



மீனம்மா @meenammakayal · Nov 28

கோபத்தில் பேசிவிட்டேன் மன்னித்துவிடு எனச் சொல்லாதீர்கள் உன் பற்றிய என் உண்மையான அபிப்பிராயத்தை சொல்லிவிட்டேன் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது புதுசு



## புதிய கொலர் பஞ்சாபி

பெண்களுக்கான பஞ்சாபி வகைகளில் பல அறிமுகங்கள் சந்தையில் உள்ளன. தற்போது மிகவும் விசாலமான நீளமான பஞ்சாபிகள் புதிய வரவாக உள்ளன. இவற்றில் தற்போது கொலர் வைத்து வருவது புதிய அறிமுகம். நெட் துணியால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த வகைப் பஞ்சாபி ஆடம்பரமான நூல் வேலைப்பாடுகளைக் கொண்டதாகும். வைபவங்களுக்கு உகந்த ஆடையாகும். இதன் விலை ரூபாய் 7500 - 9000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

# வீட்டை அலங்கரிக்க



வீட்டை அலங்கரிப்பது சிறந்த கலை. சிறிய வீடோ, பெரிய வீடோ இருக்கும் இடத்துக்கு ஏற்ப சின்ன, சின்ன தாய் அலங்கரித்தால் மனத்துக்குப் பிடித்த மாதிரி வீடு அழகாகும்.

**சுத்தமான வீடு:**
வீட்டைச் சுத்தமாக வைத்திருந்தால் அழகு தான். சின்னக் குழந்தைகள் இருந்தால் கண்டதையும் எடுத்துக் கொட்டிக் கவிழ்த்து விடுவார்கள். அவ்வப்போது அதை ஒதுக்கி சுத்தம் செய்தால் போதும் வீடு பளிச்தான். அந் தந்த அறைக்கு உரிய பொருள்களை மட்டும் வைத்து கசகச என மற்ற பொருள்களைச் சேர்க்காமல் இருந் தாலும் வீடு அழகாய் இருக்கும்.

**இயற்கைக் காட்சிகள்:**
சுவற்றில் படம் வரைவது என்றால் குழந்தைகளுக்கு கொள்ளை இஷ்டம். அதை துடைத்தாலும் போகாது. மனதைக் கவரும் வர்ணங்களும், இயற்கை காட்சிகளும் நிறைந்த பேப்பர்களை ஒட்டலாம்.

**குரோட்டன்ஸ் செடிகள்:**
வீட்டை அழகுபடுத்தும் இன்னொரு பொருள் குரோட்டன்ஸ் செடி. என்ன தான் செடியில் பூ இருந்து அழகு கொடுத்தாலும், பூக்காத குரோட்டன்ஸ் வாங்கி வைத்தால் அது ஒரு அழகுதான். மீன் தொட்டி வாங்கி வைத்து அதில் பல வர்ணங்களில் மீன்களைப் பார்க்க அழகாய் இருக்கும். மண்பானை பெயிண் டிங்கை வீட்டின் மூலை மற்றும் அலுமாரியில் வைத்தாலும் அழகாய் இருக்கும்.

**அழகான தளபாடங்கள்:**
வரவேற்பறையில் எதிரெதிராய் பெரிய சோபாக்களைப் போட்டு வடகிழக்கு மூலையில் சின்ன தாய் பவுண்டென் வைத்தால் அழகு அள்ளிக் கொண்டு போகும். பாரம்பரியம்மிக்க கலைப்பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் ஆகியவற்றை அடுக்கும் விதத்தில் அடுக்கினால் பார்க்க நேர்த்தியாக இருக்கும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 120 | 120 | 100 | 140 | 100 |
| கத்தரி | 150 | 140 | 200 | 160 | 160 | 200 | 90 |
| கரட் | 200 | 180 | 320 | 180 | 300 | 400 | 260 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 40–50 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 180 | 240–300 | 100 | 280 | 280 | 200 |
| பாகல் | 300 | 240 | 300 | 160 | 300 | – | 250 |
| கருணைக்கிழங்கு | 700 | 100 | 80 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 100 | 120 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 70–120 | 140 | 120–130 | 200 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40–50 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 160 | 200 | 220–240 | 240 | 220 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50–60 | 80 | 40 |
| கீரை | 60 | 40 | 50 | 30 | 40–50 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 30 | 50 | 30 | 50 | 15 |
| பச்சை மிளகாய் | 600 | 500 | 600 | 500 | 700 | 1000 | 1000 |
| புடோல் | 120 | 100 | 120 | 120 | 140 | 180 | 120 |
| கோவா | 120 | 140 | 100 | 140 | 160 | 200 | 170 |
| வெண்டி | 160 | 100 | 160 | 120 | 100 | 160 | 80–100 |
| போஞ்சி | 300 | 280 | 260 | 180 | 240 | 240 | 220 |
| லீக்ஸ் | 180 | 160 | 160 | 180 | 160 | 240 | 170 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50 | 40 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 140 | 80 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 150 | 220 | 200 | 70 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 30 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 350 | 140 | 400 | 400 | 300 |
| இராசவள்ளி | 250 | – | 250 | 160 | – | – | 100 |

**நாளை**
கார்த்திகை -29
செவ்வாய்க்கிழமை 15.12.2015
திதி: சதுர்த்தி பி.ப. 02.42
நட்சத்திரம்: திருவோணம் பி.இ.02.01
ராகுகாலம்: 03.21-04.51 வரை
சுபநேரம்: 10.51- 12.21 வரை
சதுர்த்தி விரதம்

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 700 | 500 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 400 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 550 | - |
| பாரை | 450 | 500 | - | 450 | 700 | 450 |
| சுறா | 500 | 500 | - | 500 | 700 | - |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 300 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 350 | 250 | 300 | 300 | 300 | 200 |
| கிழாக்கன் | 450 | 800 | 300 | 400 | - | - |
| ஒரா | 300 | 300 | 300 | 400 | - | 400 |
| திரளி | 250 | 200 | 100 | 300 | 150 | 300 |
| நகரை | 200 | 200 | 100 | 300 | 150 | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 100 | 150 | 300 |
| ஒட்டி | 280 | 150 | 200 | 300 | - | 250 |
| திருக்கை | 150 | 250 | - | 250 | 200 | - |
| பாலை | 350 | 200 | - | 270 | 200 | - |
| வாளை | 400 | 150 | 200 | 300 | 200 | 200 |
| கொய் | 200 | 100 | 80 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | 300 | 300 |

# சமைப்போம் வாங்க



## தேங்காய் பால் பணியாரம்

**தேவையான பொருள்கள்**
பச்சரிசி அரை கப்
உளுந்து அரை கப்
தேங்காய் ஒன்று
பால் ஒரு ரம்ளர்
ஏலக்காய்
சர்க்கரை தேவையான அளவு

**செய்முறை**
உளுந்து மற்றும் அரிசியை ஒன்றாகச் சேர்த்து ஒரு மணி நேரம் ஊற வைத்து வடை மா பதத்துக்கு அரைக்கவும். (தண்ணீர் அதிகம் சேர்க்காமல்) தேங்காய் பால் எடுத்து வைத்து கொள்ளவும். அதனுடன் பால், ஏலக்காய் தூள், ருசிகேற்ப சீனி சேர்த்து வைக்கவும்.
அரைத்து வைத்திருக்கும் மாவில் ஒரு சிட்டிகை சமையல் சோடா கலந்து சிறு சிறு உருண்டைகளாக எண்ணெயில் போடவும்
நல்ல பொன்னிறமாக வறுத்து, தனியாக எடுத்து வைக்கவும்.
பரிமாறும் பொழுது தேவையான அளவு பணியாரத்தை எடுத்து, அதில் தேங்காய்ப் பால் சேர்த்துப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவாஜி படம் பார்த்த மகிந்த

## அதன் கதைப் படியே இலங்கையில் நடக்கிறதாம்



கொழும்பு, டிசெ. 14
நாட்டுக்கு நல்லது செய்தால் சிறைக்குத் தான் செல்ல நேரிடும் என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, "சிவாஜி" படத்தைப் பார்த்து இதை அறிந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தெஹிவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு நல்லது செய்பவர்கள் இறுதியில் சிறைக்கு செல்ல வேண்டி நேருகின்றது. அண்மையில் நான் ஒரு தமிழ்த் திரைப்படம் பார்த்தேன். அதில் கதாநாயகன் சிறையில் இருப்பார். அங்கு ஒரு உரையாடல் இடம்பெறும். அதில், கதாநாயகனைப் பார்த்து, நீ கொலை செய்து விட்டாயா ? அல்லது திருடி விட்டாயா ? ஏன் சிறைக்குள் வந்தாய் என்று கேட்பார். அப்போது கதாநாயகன் நான் நாட்டுக்கு நல்லது செய்தேன் என்று சொல்வார். அது தான் இப்போது நடக்கின்றது என்று மகிந்த குறிப்பிட்டார். (வ-5)

# முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளராக இராசதுரை

யாழ்ப்பாணம், டிசெ.14
வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளராக யாழ்.மாவட்டச் செயலக முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் இராசதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேகசெயலாளராகக்கடமையாற்றிய சுந்தரலிங்கம், முதலமைச்சரின் ஊடக இணைப்புச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ள நிலையிலேயே யாழ். மாவட்ட செயலகம் மற்றும் யு.என். கபிற்றட் ஆகியவற்றில் கடமையாற்றிய இராசதுரை அந்தப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (வ-101)

# பேரணிகளின் போது பொலிஸாருக்கு புதிய நடைமுறை

கொழும்பு, டிசெ. 14
போராட்டங்கள் மற்றும் பேரணிகளின் போது ஏற்படுகின்ற குழப்பநிலைகளுக்கு முகம் கொடுப்பதற்குப் பொலிஸாருக்குப் புதிய முறைமைகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் அதிக குழப்ப நிலையால் பொலிஸாரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்த நிலையிலேயே குறித்த புதிய நடைமுறைகள் அவசியப்படுவதாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே குறிப்பிட்டுள்ளார்.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, பொலிஸார் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனையடுத்தே இது குறித்து ஆலோசிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார். (வ-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இந்திராணி திருநீலகண்டன்



புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி விதானையார் வீதி, 2 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி திருநீல கண்டன் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரி யைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14,விதானையார் வீதி,
2 ஆம் ஒழுங்கை.
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (66861)(13.15)

தகவல்:
குடும்பத்தினர்.
077 978 9221,
021 222 1126.

### திருமதி சிவபாக்கியம் சின்னத்துரை



கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் (அயித்தாம்புலம்), 141/2. கோயில்வீதி, நல்லூரைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சின்னத்துரை 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கரம்பன் மேற்கு காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் இராசம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற நாராயணபிள்ளை - சின்னத்துரையின் அன்பு மனை வியும், செல்வதேவி, ஈஸ்வரி, சகுந்தலா தேவி, விஜயதேவி (கனடா), விஜயரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம், காலஞ் சென்றவர்களான சண்முகநாதன், தனபால சிங்கம் மற்றும் கனகராஜா (கீர்த்தி- கனடா), சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியும், அஞ்சலாதேவி, காலஞ்சென்ற இராசமதி மற்றும் ஜெயந்தி, கண்ணன், பேபி, Dr.அசோக்குமார், அமுதினி, அஜந்தா, அகல்யா, சதீஸ்குமார் (Union Assurence Ins.Co.Colombo), மாதவன் (கனடா), விமலலோஜினி, சுதர்சினி, கிருஸ்ணவேணி, கஜவதனன், தனவதனன், தாட்சாயினி, கஜேந்திரன், விஜிதரன், ஜனார்த்தனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

141/2, கோயில்வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
021 222 9145 (66863). (11,16,17)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிதம்பரம் கந்தசாமி



தோற்றம் 19.10.1930 மறைவு 13.12.2015

மாதகல் மேற்கைப் பிறப் பிடமாகவும் 21/2, இராம லிங்கம் வீதி,திருநெல்வேலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம் கந்தசாமி 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி கந்தசாமியின் பாசமிகு மனைவியும், கனகரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) நல்லையா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - வ/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்), குகநாதன் (நில அளவை மேற்பார்வையாளர் - பிரதேச நில அளவை அலுவலகம் - திருநெல் வேலி),நிர்மலாதேவி (பேபி -ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், நாகேஸ்வரி, இன்பவதி, கௌரி, வரதராஜா, ஈஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2015) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/2, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (66856)(13.15)

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 1519

## மரண அறிவித்தல்கள்

### அழகன் இந்திரராசா

(பொது சுகாதார மேற்பார்வையாளர் - யாழ் மாநகரசபை)



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அழகன் இந்திரராசா 12.12.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ருக்குமணியின் அன்புக்கணவரும் விஜிதா, சயானா, சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் சதீஸ்குமார், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணிக்கு உரும்பிராய் வேம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைத்தீஸ்வரா வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (66862) (14,16)

தகவல்:
குடும்பத்தினர்.

### கிட்ணன் கணேசன்

(காங்கேசன்துறை லங்கா சிமெந்து தொழிற்சாலையின் முன்னாள் போமன் ஊழியர்)



அன்னையின் மடியில் 25.10.1945
ஆண்டவன் அடியில் 12.12.2015

தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வீதி, (Redcross Farm) தொண்டமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணன் கணேசன் 12.12.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்ணன் பூரணி தம்பதியரின் பாசமிகு மகனும், மனோகராணியின் ஆசைமிகு கணவரும், செல்வகுமார் (ஜேர்மனி),சூரியகுமார் (கனடா), சந்திரகுமார், உதய ராணி, இந்திரகுமார் (ஜேர்மனி), வேணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகேசு, தம்பிராசா, மகேஸ்வரி, தங்கவேல், இராசதுரை, தவமணி, சரோஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சந்திரிகா, மிதிலா, விமலா,கண்ணன், பாலேந்தினி, ராஜ்பவன் ஆகியோரின் மாமனும் பிரவஷ்தி, அஸ்வின், பிரவின்,நிலா, நர்மிகா, சமீனா, கஜானா, கஜிந்தன், கவிசன், இலக்கியா, லக்ஷா, விஷாகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2015) திங்கட்கிழமை நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு.
077 607 7549, 077429 8336

தகவல்: குடும்பத்தினர்.
(60674) (13.15)

### திருமதி நவமணி சந்திரமௌலீசன்

தோற்றம் 02 . 09 . 1937



மறைவு 13 . 12 . 2015

(நீர்வேலி- சரசாலை)

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி சந்திரமௌலீசன் நேற்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் நாகலிங்கம் பூரணம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் அமரர் சந்திரமௌலீசனின் (முன்னாள் பிரதம எழுதுநர் நகரசபை, சாவகச்சேரி) அன்பு மனைவியும் லலீசனின் (பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை) அன்புத் தாயாரும் கவிதாவின்(ஆசிரியர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்) அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், நவரத்தினசிங்கம், இராசசிங்கம் மற்றும் ஜெகசோதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2015) திங்கட்கிழமை நீர்வேலியுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி அரசகேசரிப்
பிள்ளையார் கோயில் தேர்முட்டி
அருகில்,
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

தகவல்
ச. லலீசன்(மகன்)
(உ 20788)
(12.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாஜுதீன்...

கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தாஜுதீன் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் வாகனத் தரிப்பிடம் ஒன்றில் பதிவு செய்யப்பட்ட சிசிரிவி காணொலிப் பதிவை வைத்து விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அங்கிருந்த வாகனங்களையும் நபர்களையும் அடையாளம் காண்பதற்காக இந்தக் காணொலிப் பதிவு கொழும்பு பல்கலைக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் இதனை வெளிநாட்டுக்கு அனுப்பி ஆய்வு செய்யவும் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
அத்துடன் இந்தக் காணொலி ஆதாரங்கள் தொடர்பில் வெளிநாட்டு தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடன் ஆய்வு செய்து விரைவில் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று குற்றப்புலனாய்வுப்பிரிவினருக்கு கடந்த வாரம் உத்தரவிட்டுள்ளது.
இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சாரதியாகப் பணியாற்றிய இராணுவ அதிகாரி, தற்போது அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, திருகோணமலையில் உள்ள இராணுவ முகாமில் பணியாற்றி வருகிறார். அவரை இந்த வாரம் கைது செய்வதன் ஊடாக, குறித்த கொலையுடன் தொடர்புடைய ஏனையவர்களையும் கைது செய்ய முடியுமென குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, இந்தக் கொலை தொடர்பாக, பொய்யான தகவல்களை வழங்கியது தொடர்பாக, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க, மற்றும் முன்னாள் சட்ட மருத் துவ அதிகாரி ஆனந்த சமர சேகர ஆகியோரிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

**காணி விற்பனைக்கு**
இல.44, அரசடிப்பிள்ளையார் கோவில் வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள குழாய்கிணற்றுடன் கூடிய 1¾பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:-
077 4278368, 077 0555965

Galaxy Star
வெற்றி வாரம் 016 திகதி 2015-12-13
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
04 30 40 47 53
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ.2,921,040/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2015-12-13
வெற்றி வாரம் 1915
வர்ணம் ஊதா
மேடம்
வெற்றி இலக்கங்கள்
33 35 46 60
ரூ.2,340,020
பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 040881630- 4- 24 | - குருநாகல | 040883854- 4- 44 | - மாத்தறை |
| 040887013- 3- 33 | - கம்பஹ | 040887929- 4- 44 | - பொலநறுவ |
| 040887449- 9- 29 | - களுத்துறை | 040893047- 0- 10 | - ரட்ணபுர |
| 040890598- 6- 06 | - கொழும்பு | 040893205- 4- 14 | - அம்பாற |
| 040892376- 7- 07 | - காலி | 040893854- 8- 08 | - மாத்தறை |
| 040896155- 7- 17 | - கண்டி | 040895751- 9- 39 | - நுவரேலியா |
| 040881273- 4- 24 | - புத்தளம் | 040895846- 0- 30 | - மட்டக்களப்பு |
| 040881544- 6- 26 | - மொனராகல | | |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

**சிங்களம்**
3 மாத சனி ஞாயிறு பயிற்சிநெறி
அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!
இது ஒரு முழுமையான தமிழ்மூல சிங்களப்பயிற்சிநெறி என்பதால் சரளமாக சிங்களம் பேசவும், எழுதவும் பரீட்சைகளை எதிர்கொள்ளவும் முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.12.2015 சனிக்கிழமை
பிரிவு1. மாலை 03.00 பிரிவு2. மாலை 04.00
வாரநாள் (செவ்வாய் வியாழன்) பிரிவுகள் ஆரம்பம்-17.12.2015
1. மாலை.3.30 பிரிவு2. மாலை 04.30
SAMSON
Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியஅழைப்பும்**

தோற்றம்
01.11.1943
மறைவு
14.11.2015
கடந்த 14.11.2015 சனிக்கிழமை அன்று
இறைபதம் எய்திய
அமரர் **பூதன் மகாலிங்கம்**
(மணியம்)
அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியை கள் இன்று (14.12. 2015) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.

## கிளிநொச்சி...

தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் குறித்த வீட்டுத் திட்டம் எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
இது தொடர்பில் மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் மேலும் கூறுகையில்:-
போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங் களில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற அபிவிருத்தி கருத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கான திட்ட நடைமுறை ஒப்பந்தத்தை ஹபிர்ரார் போஃர் ஹியூமானிட்டி நிறுவனத்துடன் எமது அமைச்சு கடந்த 7 ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியத்தின் 14 மில்லியன் யூரோ நன்கொடை நிதிப்படுத்தலின் கீழ் 2016 -2018 மூன்று வருட காலப் பகுதியில் கிளிநொச்சி - முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் 15 ஆயிரத்து 345 இடம் பெயர்ந்த மக்கள் நிரந்தரமான வீடுகளைப் பெறவுள்ளனர்.
3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கட்டட நிர்மாணப் பயிற்சி மற்றும் நுண்பாக கடன்கள், சமூக உட்கட்டமைப்புகள் மற்றும் வாழ்வாதார பலாபலன்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.
இந்தக் கருத்திட்டத்தின் கீழ் கட்டட நிர்மாணத்திற்கான மூலப் பொருட்கள், ஊழியம் என்பன உள்நாட்டில் பெறப்படுவதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு பெரிய ளவிலான பங்களிப்பைச் செய்யும் கருத்திட்டமாக இது அமையும்.
தமிழ்நாடு உட்பட வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கை அகதிகளுக்கும் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும் நிலைத்து நிற்கக் கூடியதும் நிரந்தரமானதுமான ஒரு தீர்வினை இந்தத் திட்டம் வழங்கும் - என்றார். (வ-5)

## பஸ் ஓடாது...

வந்து தமது கோரிக்கைகளை நிறைவேற்ற உடன்பட்டவுடன் வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிடத் தயார் எனவும் தொழிற் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.
இதேவேளை, இந்தப் போராட்டத்தை நிறுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது ஒரு வெறும் பகல் கனவு என அத்தகையவர்களுக்கு தெரிவித்துக் கொள்வதாகவும் அரச தொழிற்சங்கங்களின் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (வ)

## பிரதமர்...

தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.
இதனால், நாளை நடத்தத் திட்டமிட்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடக்கும் என அரச மற்றும் தனியார் தொழிற் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.
இந்த நிலையிலேயே இது குறித்து பிரதமர் இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## திருமலை...

யாழ்ப்பாணம் வரையான அதிவேக நெடுஞ்சாலைத் திட்டமே முன்னெடுக்கப்படுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
இது தொர்டர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வடக்குக்கான மூன்று அதிவேக நெடுஞ்சாலைத் திட்டங்கள் அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தத் திட்டங்களுக்கு 13.4 பில்லியன் அமெரிக்க டொலர் (1,900 பில்லியன் இலங்கை ரூபா) செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த நிதி சீனா, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உள்ளூர் மூலங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளிடம் இருந்து நிதி திரட்டப்படவுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.பி.கே.எல். குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:-
இந்த வடக்கின் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் பணிகள் மத்திய மாகாணத்திலிருந்து எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் போது, ஹகதுடுவ மற்றும் பெல்மடுவ ஆகிய பகுதிகளில் இந்த பணிகள் ஆரம்பிக்கப்படும்.
வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலைப் பணிகள் தம்புள்ளையில் ஆரம்பித்து குறுக்காக, பொலன்னறுவை - கந்தளாய் - திருகோணமலை - முல்லைத்தீவு வழியாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். இதற்காக, 5.5 பில்லியன் அமெரிக்க டொலர் (800 பில்லியன் இலங்கை ரூபா) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
எனினும் முன்னர் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஊடாகவே குறித்த அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் முன்னெடுக்கப்பட விருந்தது - என்றார்.
இந்த நிலையில், குறித்த அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிகால் ஆர். சூரியாராச்சி -
திருகோணமலைத் துறைமுகம் மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சி என்பனவற்றைக் கருத்தில் கொண்டு வவுனியா மற்றும் கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணம் வரையான திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
அதிகளவு குடியிருப்புகள் இல்லாத இந்தப் பிரதேசங்களில் புதிய அதிவேக நெடுஞ்சாலைக் குத் தேவையான காணிகளைப் பெறுவதும், இலகுவானது. அத்துடன், தற்போது வவுனியா மற்றும் கிளிநொச்சி வழியான ஏ-9 வீதி போதியளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, இந்த அதிவேக நெடுஞ்சாலைத் திட்ட முன்னெடுப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டப் பணிப்பாளர் எல்.வீ.எஸ். வீரக்கோன்:- மத்திய மாகாணத்துக்கான நெடுஞ்சாலைத் திட்டம் அமைக்கும் பணிகள் ஒரே நேரத்தில் நான்கு நிலைகளில் முன்னெடுக்கப்படும். இவை ஒவ்வொன்றும் 20 கிலோ மீற்றர் பணிகளாக அமையும்.
சீனாவின் நிதியுதவியில் முதலாவது பணி கடவத்த தொடக்கம் மீரிகம வரையான 37 கிலோ மீற்றர் தூரமுடைய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படும். இரண்டாவது நிலை, மீரிகம தொடக்கம் குருணாகல் ஊடாக அம்பே புஸ்ஸ வரையான 49 கிலோ மீற்றர் தூர முடைய அதிவேக நெடுஞ்சாலை திட்டப் பணிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும்.
மூன்றாவது நிலை பணிகள் பொதுஹெற தொடக்கம் கலகற வரையான 32.5 கிலோ மீற்றர் அதிவேக நெடுஞ் சாலைத் திட்டம் உள்ளூர் நிதி மூலங்களைக் கொண்டு முன்னெடுக்கப்படும். நான்காது நிலைப் பணிகள் குரு நாகல் தொடக்கம் தம்புள்ளை வரையான 60 கிலோ மீற்றர் தூரம் கொண்ட அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கான நிதி மூலம் இது வரை தீர்மானிக் கப்படவில்லை - என்றார். (வ-5)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**
திருமதி
**அன்னலட்சுமி சிவனேசன்**
திதி: சதுர்த்தி (15.12.2015)
தோற்றம் 24.06.1951
மறைவு 26.11.2014

நீவீர் எங்களை எல்லாம் விட்டு
பன்னீரு திங்கள் கழிந்த போதும் உங்கள்
மதிமுகம் எங்கள் விழிகளில் இருந்து
மறையவில்லை. குடும்ப குலவிளக்காய்
வந்துதித்து நீர் பெற்றவர், உறவுகள், உற்றார்
எல்லோரையும் அன்பாய், பண்பாய், பாசமாய்
உபசரித்து பணிவிடை செய்து வையகம்
போற்ற வாழ்ந்த உன்னை காலன் விரைவில்
அழைத்தது ஏனோ? இப் பூவுலகில் நீர் செய்த
புண்ணிய பலனுக்காக விண்ணுலகில் இறைவன்
உன்னைத் தன் அடியதனில்
பணிவிடை செய்ய பணித்தானோ!
கணவர் - சிவனேசன்
(சுட்டத்தரணி)
பிள்ளைகள்.
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 போராளிகளுடன்

வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரிடம் சரண டைந்தனர். எனினும் இதுவரை எனது கணவர் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

இவ்வாறு காணாமற்போன விடுதலைப் புலிகள் உறுப் பினர் தொடர்பில் அவரது மனைவி பிரதீபா ஜனாதிபதி ஆணைக்குழு முன் நேற்று சாட்சியமளித்தார்.

எனது கணவரை படையினரிடம் நான் ஒப்படைத்தேன். எனவே அவரை கண்டு பிடிக்கத்தேவையில்லை.அவரை படையினரிடமிருந்து மீட்டுத் தாருங்கள் எனவும் அவர் உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்று வரும் காணமற்போனவர்கள் தொடர்பில் விசா ரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசா ரணைகளில் நேற்று மூன்றாவது நாள் அமர்வு பருத்தித் துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றது.

இதன்போது, சாட்சியமளிக்கையிலேயே தனது கணவ ரான விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் படை யினரிடம் சரணைந்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை என பிரதீபா தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி இறுதிப் போரின் போது, முல்லைத்தீவில் இருந்து இடம் பெயர்ந்து வட்டு வாகலை நோக்கி வந்த வேளை, வட்டுவாகலில் நின்ற இராணுவத்தினர், தமது கட்டுப்பாட்டுக்குள் வந்த அனைவ ரையும் சரணடையுமாறு அறிவித்தனர்.

இதன் போது இராணுவத்தினர் முல்லைத்தீவில் இருந்து வந்த அனைவரையும் ஒரு வயல் வெளியில் அமைக் கப்பட்டிருந்த முள்வேலி அடைப்புக்குள் சரணடைந்தவர் களை விட்டனர்.

அப்போது எனது கணவர் உட்பட அந்த முள் வேலிக்குள் 60இற்கும்மேற்பட்டவிடுதலைப்புலிகளின்உறுப்பினர்கள் இருந்தார்கள். மறுநாள் மே 18 ஆம் திகதி காலை தான் வண. பிதா பிரான்சிஸ்ஸை நாங்கள் கண்டோம். அப் போது ஒரு நாள் அல்லது ஒரு மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தாலும் அவர்களும் சரணடைய வேண் டும் என்று இராணுவம் அறிவித்திருந்தது.

இதனால் வண. பிதா பிரான்ஸிஸ் அடிகளார் தான் இராணுவத்தினரிடம் சென்று கதைத்தார். அதன் பின்னர் இராணுவத்தினர் அங்கு உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் பெயர்களை எடுத்து கொண்டு வருமாறு கூறினார்கள். இதனால் வண. பிதா முள் வேலிக்குள் இருந்த புலிகளின் உறுப்பினர்களின் விவரங்களை கொடுத்தார். பின்னர் இராணுவத்தினர் அனைவரையும் கூட்டி வருமாறு தெரிவித்தனர் .இதனால் எனது கணவர் உட்பட அங்கு இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் 60இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் சென்று சரணடைந்தார்கள்.

அவர்கள் வண. பிதா பிரான்சிஸ் அடிகளாரையும் ஏனைய அனைவரையும் தங்களுடைய வாகனங்களில் ஏற்றி ஒரு மணிநேரம் வைத்திருந்தார்கள். பின்னர் குடும் பங்களை அழைத்து வர விரும்பியவர்கள் அழைத்து வர லாம்எனக்கூறினார்கள்.இதனால்பலர்குடும்பங்களாகவே இராணுவ வாகனத்தில் ஏறினார்கள். ஆனால் எனக்கு பெண் பிள்ளைகள் இருந்ததால் எனது கணவர் வர வேண்டாம் என்று கூறிவிட்டார். எனவே நாங்கள் போக வில்லை.

சரணடைந்தவர்களை ஏற்றிய இராணுவ வாகனங்கள் புறப்படும் போது, ஒரு வாகனத்தில் இருந்து தாய் ஒருவர் இறங்கி நாங்கள் இருந்த முள் வேலிக்குள் மீண்டும் வந்தார். அவ்வாறு வந்தவர் தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்த இளம் பரிதியின் தாய். அது தான் எனது கணவரை நான் இறுதி யாகக் கண்ட நாள். இன்று வரை அவர் தொடர்பில் விவ ரங்கள் எதுவும் இல்லை.

எனது கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்தேன். எனவே அவரைக் கண்டுபிடித்து தருமாறு கேட்கவில்லை. இராணு வத்தில் இருக்கும் எனது கணவரை மீட்டுத் தாருங்கள் என பிரதீபா உருக்கமாக சாட்சியமளித்தார். (வ- 21)

## படையினரிடம்

வருடம் படையினர் தங்களிடம் எனது மகன் இல்லை எனத் தெரிவித்துவிட்டார்கள். இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழு முன்பு நேற்று சாட்சியமளித்தார் தாயொருவர்.

யாழ்ப்பாணம் இராணுவ சிவில் அலுவலகத்திலேயே கையெழுத்திட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் அலுவல கத்தில் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் மூன்றாம் நாள் அமர்வில் சாட்சியம் வழங்கிய போதே அந்தத் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

சு.சுலோசன் என்ற எனது மகன், 2009ஆம் ஆண்டு தை மாதம் யாரோ வரச் சொன்னதாக கூறி முல்லைத்தீவு உடையார் கட்டு நகர்ப் பகுதிக்கு சென்றான். அப்போது உடையார் கட்டுக்கு பின்புறம் தான் நாங்கள் இருந்தோம். அவ்வாறு கூறி போனவன் திரும்பி வரவில்லை. நாங்கள் எல்லா இடமும் தேடினோம். அவன் கிடைக்கவில்லை.

பின்னர் இறுதிப் போரின் பின்னர், வெற்றிலைகேணி முள்ளியானில் உள்ள எங்களது சொந்த வீட்டிற்கு வந்து விட்டோம். அதன் பின்னர் இராணுவ புலனாய்வாளர்கள் எங்களது வீட்டிற்கு வந்து எனது மகன் குறித்து விசாரணை செய்தார்கள். அதன் பின்னர் தொடர்ச்சியாக விசாரிப்பதற் காக எங்களது வீட்டிற்கு வந்தார்கள். அப்படி வருபவர்கள் தாங்கள் இராணுவ புலனாய்வாளர்கள் என்று தான் கூறு வார்கள். வந்து விசாரணைகளை மேற்கொண்டு மகனி னுடைய பிறப்பு சான்றிதழ், சாதாரணதர பரீட்சை சான்றி தழ், அடையாள அட்டை என்பனவற்றை என்னிடமிருந்து வேண்டிச் சென்றார்கள்.

அதற்கு பின்னர் ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் அலுவலகத்திற்கு வருமாறு அழைத்தார்கள் 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொரு 8 ஆம் மாதமும் சென்று கையெழுத்திட்டேன். அப்போது கேட்கும் போது எங்களிடம் தான் உங்கள் மகன் இருக் கின்றார். விசாரணைகள் நடைபெறுகின்றன. அந்த விசார ணைகள் முடிந்தால் பின்னர் விடுவோம் என்றார்கள்.

இறுதியாக, ஒரு நாள் எங்களுடைய வீட்டையும் படம் எடுத்து கொண்டு போனார்கள். அதன் பின் எந்த புல னாய்வாளர்களும் வருவதில்லை. யாழ்ப்பாணம் சிவில் அலு வலகம் சென்று கேட்டால் அங்கு எனது மகன் இல்லை என்று கூறுகின்றார்கள். என்னை அலைய வைத்துவிட் டார்கள். எனது பிள்ளை இருக்கிறான் என்று கூறிய இரா ணுவம் இப்போது இல்லை என்று கூறுகின்றது. எனது மகனை இராணுவத்தினரிடமிருந்து மீட்டுத் தாருங்கள் என்று அவர் உருக்கமாக கேட்டுக்கொண்டார். (வ-21)

## ஊசி மருந்து

இவ்வாறு, இறுதிப் போரின் போது இராணுவக் கட்டுப்பாட் டுப் பகுதிக்கு வந்த போது, காணமற்போன ஜோன்சன் விஜயதாஸின் தாயார் அருளானந்தம் புஸ்பராணி, ஜனாதி பதி ஆணைக்குழு முன் கண்ணீருடன் சாட்சியமளித் தார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று 3 ஆவது நாளாகவும் காணமற்போனவர்களை கண்டறியும் ஜனாதி பதியின் ஆணைக்குழு விசாரணை நடைபெற்றது. அவர் தனது சாட்சியத்தில்,

என்னுடைய மகன் விஜயதாஸ் 1986 ஆம் ஆண்டு பிறந் தவர். 2009ஆம்ஆண்டுமே18ஆம்திகதிகாணாமற்போனார். அப்போது அவருக்கு வயது 23.அவர் ஒரு போலியோ நோயாளி.கால் ஏலாது.

இறுதிப் போர் நடக்கும் போது எங்களுடன் முள்ளிவாய்க் கால் வரை வந்தவர்.நாங்கள் படகில் ஏறி கரை வந்த பின் னர் அவர் காணமற்போனார்.முள்ளி வாய்க்கால் போர் உக்கிரமாக நடந்த படியால் அவர் இறந்திருப்பார் என்று தான் நினைத்தோம்.


ஆனால் 2011 ஆம் ஆண்டு திடீரென ஒருநாள் அவரிட மிருந்து தொலைபேசி அழைப்புவந்தது.அவரின் குரலை வைத்து அடையாளம் கண்டு கொண்டேன்.இருந்தாலும் ஒரு சந்தேகம் இருந்தது. அது எனது மகன் தானோ என்று அறிவதற்காக, என்னுடைய கடைசி மகளுக்கு என்ன நடந்தது உனக்கு தெரியுமோ என கேட் டேன். உடனே அவன், என்ன அம்மா சுனாமியிலை அகப்பட்டு இறந்து போனவளைப்பற்றி கேட் கிறாய் என சொல்லி அழுதான்.

பின்னர்என்னை இப்ப இராணுவம் தான் பிடித்து வைத்திருக்கு. ஊசி மருந்துஏற்றிஎன்னைசித்திரவதை செய்கிறார்கள். என்னைக்காப்பாற் றுங்கள் என விம்மி அழுதான். இப்ப எங்கே இருக்கிறாய் என்று கேட்டதற்கு, தனக்கு இடம் தெரிய வில்லை என்று சொன்னான்.

அந்தச் சம்பவத்தை கொண்டே அது மகன் தான் என்று உறுதிப் படுத்திக் கொண்டேன்.நாங்கள் வயது போனவர்கள்.உடனே என்ன செய்ய முடியும்.அந்த தொலை பேசி இலக்கத்தை பொலிஸாரிடம் கொடுத்து (0774950121) முறைப் பாடு செய்தோம். வந்து அறிக்கை எடுத்தவர்கள் விசாரணை செய் கின்றோம் என்று பொலிஸார் சொன்னவர்கள். ஆனால் ஒரு தக வலும் இதுவரையில்கிடைக்கவில்லை எமது குடும்ப அங்கத்தவர் 8 பேர். ஐந்து பேர் இருக்கிறார்கள். ஏனைய மூன்று பேரில் இவர் தான் காணாமற்போனவர்.மற்ற இரண்டுபேரில்ஒருபெண்பிள்ளை சுனாமியில் இறந்து போனார். நாங்கள் என்ன செய்வது. எல்லா இடத்துக்கும் போய் முறைப்பாடு செய்தோம்.

தற்போது, இங்கு வந்திருக்கிறன். என்னுடையபிள்ளை இயலாதவர். சித்திரவதை செய்யிறாங்கள் என்று சொல்லி அழும் போது, எனது மனம் என்ன பாடுபடும். உங்களுடைய பிள்ளைகள் போன்று தான் எங்களுடைய பிள் ளையளும்.என்னுடைய பிள் ளை[illegible] என கண்ணீருடன் சாட்சியமளித் தார். (வ-ரி2)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் நாகராசா

முல்லைத்தீவு குமுளமுனை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் மணற்காட்டை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகராசா கடந்த (12.12.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிர மணியம் - சிவக்கொழுந்து தம் பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆரோக்கிய நாதர்- பிரான்சிஸ்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரி மசோஸ் லத்றினின் அன்புக் கணவரும், யூட்நிறோக்ஷன் (டென் மார்க்), யூட்நியூட்டன் (பெல்ஜியம்), மேரி நிறோஜினி, யூட் நிருஷன், மேரிநிலூஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 15.12.2015 செவ்வாய்க்கிழமை மணற்காடு றோமன் கத்தோலிக்க ஆலயத் தில் பி.ப. 3.00மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணற்காடு,குடத்தனை

தகவல்:
குடும்பத்தினர்-

### திருமதி சின்னத்துரை அப்பலோனிக்கா



பலாலி தெற்கு, வசாவிளானை பிறப் பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் தற்போது கோப்பாய் தெற்கில் வசித்து வந்த வருமான திருமதி சின்னத்துரை அப்ப லோனிக்கா கடந்த (11.12.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.12. 2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கோப்பாய் புனித மரியன்னை ஆல யத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டு நல்லடக்கத் துக்காக புனித மரியன்னை சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
T.P:- 077 5245537

தகவல்: குடும்பத்தினர்.
0033 1558310007 (பிரான்ஸ்)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்ரனி றெஜினோல்ட் திரேஸ்கமலா

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரனி றெஜினோல்ட் திரேஸ் கமலா 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அன்ரனி றெஜினோல்ட்டின் ( Asiri Laboratory - Manager Jaffna) அன்பு மனைவியும், ஜெனிபர் சரண்யா (Development Officer - J/DivisionalSecretariate), றொட்னி பிரசாந்த் (Amana Takaful - Senior executive officer ) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் ஆசீர்வாதம் - ஞானம்மா சிசீலியா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜோன் பிரான்சிஸ்பிள்ளை மற்றும் லில்லிமேரி தம்பதியரின் அன்பு மருமகளும், அருளானந்தம், அன்ரன் (Pastor AOG- Jaffna ), நித்தியானந்தம், தாசன், காலஞ்சென்ற குலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விநிபிறட், றாகினி, லலிதா, சறோஜா, சுசீலா ஆகியோரின் மைத்துனியும், பிறிம்றோஸ் (லண்டன்), காலஞ்சென்றவர்களான நந்தினி, அன்ரன் சில்வெஸ்டர் மற்றும் விநிபிறீடா (ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வினோதினி (Jaffna Traders ), காலஞ்சென்ற ரஜனி மற்றும் வொஷிங்டன் (லண்டன்), வெலாணி ஆகியோரின் பாசமிகு அண்ணியும், குணரட்ணம் (லண்டன்), காலஞ்சென்ற கிறிஸ் தோப்பர் மற்றும் சந்திரகலா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்),காலஞ்சென்ற பால தாசன் மற்றும் சாமினி (லண்டன்), செந்தில் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.12.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் யா/ கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29/4, [illegible],
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(62220)(11,16,17)

தகவல்:
குடும்பத்தினர்.
077 602 7391


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரி-20 உலகக்கிண்ணத் தொடர் சவாலாக அமையும் - ரகானே




அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடர் கடும் சவாலாக அமையும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னணி வீரரான ரகானே.

குறித்த தொடருக்கான அட்டவணையை ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இந்த நிலையில் தொடர் தொடர்பாக ரகானே தெரிவிக்கையில் - 'ரி-20 உலகக் கிண்ணத் தொடரை ஆவலுடன் காத்துள்ளேன். இந்தியா கிண்ணத்தை கைப்பற்றும் என்ற நம்பிக்கை உள்ளது. எதிரில் உள்ள அணி எது என்பது அல்ல வெற்றிமட்டுமே எமக்குத் தேவை. அதை நோக்கியே இந்தியா தற்பொழுது சென்றுகொண்டிருக்கிறது. உலகக்கிண்ணத் தொடரிலும் நாம் சிறப்பாகச் செயற்படுவோம்.' என்றார். (ம)





## கிரிக்கெட் வரலாற்றிலேயே டோனிதான் சிறந்த தலைவராம்

கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த அணித்தலைவர் யார்? என்று என்னைக் கேட்டால் அது டோனிதான் என்று உடனடியாகத் தெரிவிப்பேன் எனத் தெரிவித்துள்ளார் டெஸ்ட் அணித் தலைவரான கோக்லி.

இந்தியாவில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. தொடரில் அணிகள் இடம் பெற்றிருக்கும் குழுக்கள், விளையாடவிருக்கும் இடங்கள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கோக்லி இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் - விளையாட்டு வரலாற்றில் சிறந்த அணித் தலைவர்களில் ஒருவர் டோனி. அமைதி மற்றும் இக்கட்டான நிலையில் பதற்றம் அடையாமல் இருப்பது ஆகிய விடயங்களை அவரிடம் இருந்து கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். மற்ற அணித்தலைவர்கள் படைத்த சாதனைகள் எதையும் டோனி முறியடிக்காமல் இல்லை. 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத் தொடர் இந்திய கிரிக்கெட்டுக்கு மிகப்பெரிய சாதனை. ரி-20 பற்றி எவரும் அறிந்திருக்காத காலத்தில் உலகக்கிண்ணத்தை வென்றது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது நம்மைப்பற்றி பெருமைப்படுத்தும் உணர்வாக தெரிகிறது. என்னைப் பொறுத்தவரை கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த தலைவர் என்றால் அது டோனிதான்.' என்றார். (ம)

# நியூசிலாந்து - இலங்கை டெஸ்ட்; சம பலத்தில் இரு அணிகளும்



நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய நான்காவது நாளில் 267-3 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தி 405 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது நியூசிலாந்து. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை நாள் முடிவில் 109-3 என்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மத்தியூஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய சகல இலக்குகளையும் இழந்து 431 ஓட்டங்களைப் பெற்றது நியூசிலாந்து. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரதீப் 4 இலக்குகளையும் லக்மல், சமீர இருவரும் தலா இரு இலக்குகளையும் மத்தியூஸ், சிறிவர்தன இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குதமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கையின் இன்னிங்ஸ் 294 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. பந்துவீச்சில் சவுத்தி, வாக்நெர் இருவரும் தலா 3 இலக்குகளையும் சான்நெர், போல்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

137 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து மூன்றாம் நாள் முடிவில் 171-1 என்று இருந்தது. லாதம் 72 ஓட்டங்களுடனும் வில்லியம்சன் 48 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக களமிறங்கினர். ஆட்டத்தை வேகமாக இடைநிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அடித்தாடவே செய்தனர். ஒரு சில பந்துப்பரிமாற்றங்களில் சதம் கடந்தார் லாதம். அரைச்சதத்தை பதிவுசெய்தார் வில்லியம்சன். வில்லியம்சனை போல்ட் ஆக்கினார் சமீர. ரெய்லர் களமிறங்கி ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அடித்து விளையாடினார். ரெய்லரால் நீண்ட நேரம் நிலைத்திருக்க முடியவில்லை. 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மக்கலம் களமிறங்க வெள்ளை உடையில் ரி-20 ஆட்டம் எதிரொலித்தது. 6 பந்துகளில் இரண்டு சிக்சர் உட்பட 17 ஓட்டங்களை எடுத்தார். 267-3 என்றிருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தினார் மக்கலம். லாதம் 109 ஓட்டங்களுடனும் மக்கலம் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

> லாதம் 72 ஓட்டங்களுடனும் வில்லியம்சன் 48 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக களமிறங்கினர். ஆட்டத்தை வேகமாக இடைநிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அடித்தாடவே செய்தனர். ஒரு சில பந்துப்பரிமாற்றங்களில் சதம் கடந்தார் லாதம். அரைச்சதத்தை பதிவு செய்தார் வில்லியம்சன்.

405 ஓட்டங்களை இலக்காகக் கொண்டுகளமிறங்கிய இலங்கைக்கு ஆரம்பம் நம்பிக்கை தரும்படியாக அமைந்தது. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது இலங்கை. 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. மூன்றே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் ஜெயசுந்தர. நீண்ட நேரம் நிலைத்து நின்றாலும் அரைச் சதத்தை 4 ஓட்டங்களால் தவறவிட்டார் மெண்டிஸ். நாள் முடிவில் இலங்கை 109-3 என்றுள்ளது. சந்திமல் 31 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)




## கரோலினாவை வீழ்த்தினார் சாய்னா சுப்பர் சீரிஸ் பூப்பந்தாட்டத் தொடரில்

டுபாயில் நடைபெற்றுவரும் சர்வதேச பூப்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள கரோலினாவை வீழ்த்தியுள்ளார் சாய்னா நேவால்.

தரப்படுத்தலில் முதல் எட்டு வீராங்கனைகளுக்கு மட்டுமாக வருட இறுதிப் பகுதியில் பூப்பந்தாட்டத் தொடர் ஒன்று நடத்தப்படுவதுண்டு. நடப்பு வருடத்துக்கான தொடர் டுபாயில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஸ்பெயினின் கரோலினா மரினை எதிர்கொண்டார் சாய்னா நேவால். இதில் முதல் செற்றை போராடி வசப்படுத்திய சாய்னா 2ஆவது செற்றை சுலபமாக கோட்டைவிட்டார். என்றாலும் 3ஆவது செற்றில் சுதாகரித்துக்கொண்டு, கரோலினா மரினை மீளவிடாமல் அடக்கினார். 1 மணி 15 நிமிடங்கள் நடந்த இந்த பரபரப்பான ஆட்டத்தில் சாய்னா 23-21, 9-21, 21-12 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

## தோல்வி பின்னடைவில்லை கோல்டர் தெரிவிக்கிறார்

ஆஸியிடம் முதல் டெஸ்டில் இன்னிங்ஸால் வேண்டிக் கட்டிக்கொண்ட பின்னரும் அந்தத் தோல்வி பின்னடைவு அல்ல என்கிறார் தீவுகளின் தலைவரான கோல்டர்.

கோல்டர் தலைமையிலான இளம் வீரர்களைக் கொண்ட தீவுகளின் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்டில் தீவுகள் இன்னிங்ஸ் மற்றும் 212 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை சந்தித்தது.

குறித்த ஆட்டம் தொடர்பாக கோல்டர் தெரிவிக்கையில் - ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இன்னிங்ஸ் தோல்வியை பின்னடைவாகக் கருதவில்லை. எமது அணியில் ஏராளமான இளம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் சர்வதேச ஆட்டங்களுக்கு ஏற்ப மாற்றம் பெற இன்னும் அவகாசம் தேவை. அதுவரை எமது அணியில் தளம்பல் நிலை இருக்கும் என்பதை நன்கு



அறிவோம். இன்னும் ஓரிரு வருடங்களில் எமது அணி சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தும். ஓய்வறையில் எங்களுக்குள் ஒற்றுமை உள்ளது.' என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணவிருது நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 14
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டிற்கான வர்ண விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச, தேசிய, கனிஸ்ர, சிரேஷ்ட போட்டிகளில் பங்குபற்றி சாதித்த வீரவீராங்கனைகள் தங்களது சான்றிதழ்களின் பிரதிகளை எதிர்வரும் 18ஆம் திகதி விளையாட்டுத் திணைக்களத்தில் நேரடியாகக் கையளிக்குமாறு வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க அறிவித்துள்ளார். (ம-23)

# யாழ்.பல்கலைக் கழகத்தின் விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்தும் 2014ஆம் ஆண்டிற்கான யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட அரங்கில் பிற்பகல் 2மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட அணியின் முன்னாள் வீரரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வு பெற்ற உபஅதிபருமான எஸ். அன்ரனிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)



# யாழ். தேசிய இளைஞர் மன்றத்தின் இளைஞர் வர்ணவிருது நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 14
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2014ஆம், 2015ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட விளையாட்டு, கலாசாரப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய யாழ். மாவட்ட வீரவீராங்கனைகளுக்கான இளைஞர் வர்ணவிருது விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள லக்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

2014ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்ட தடகளத் தொடரில் சாதித்த வீர, வீராங்கனைகள் முதற்கட்டமாக கௌரவிக்கப்பட்டனர். இதன்படி 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஈட்டி ஏறிதலில் வெண்கலப்பதக்கம் பி.ராஜிதா, 20வயதுப்பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வெண்கலப் பதக்கம் வென்ற ராம்குமார், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் வெண்கலப்பதக்கத்தையும், ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் வெள்ளிப் பதக்கத்தையும், பெண்களுக்கான கயிறு இழுத்தலில் வெள்ளிப்பதக்கத்தையும், துடுப்பாட்டத்தில் வெண்கலம் வென்ற யாழ். மாவட்ட ஆண், பெண் அணியினரும் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து இடம்பெற்ற 2015ஆம் ஆண்டுக்கான கௌரவிப்பு நிகழ்வில் 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஈட்டி ஏறிதலில் வெள்ளிப்பதக்கம் பெற்ற பி.ராஜிதா, ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் இரண்டாம் இடத்தையும், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் வெண்கலப் பதக்கத்தையும், ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் வெள்ளிப் பதக்கத்தையும், பெண்களுக்கான கயிறு இழுத்தலில் வெண்கலப் பதக்கத்தையும், பெண்களுக்கான எல்லே தொடரில் வெண்கலப் பதக்கத்தையும் வென்ற அணியினர் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தன், வடமாகாணசபை உறுப்பினர்களான ஆனல்ட், சுகிர்தன், கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)

# மேசைப்பந்தாட்டத் தரப்படுத்தல்

கரணவாய், டிசெ. 14
வடமாகாண மேசைப்பந்தாட்டச் சங்கம் தனது வீரவீராங்கனைகளது பெறுபெறுகளின் அடிப்படையில் அவர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. 18வயதில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவனான எஸ்.சஜீவன் முதலிடத்தைப் பிடித்துள்ளார். பெண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ஜென்சிகா முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

**ஆண்கள் பிரிவு**

ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மாணவனான எஸ்.சஜீவன் 25 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். எஸ். ஹரிபிரசாத் (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) இரண்டாம் இடத்தையும், எஸ். ஜெசிகரன் (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), எஸ்.மகாநாம (யூனியன் கல்லூரி)



ஆகிய இருவரும் மூன்றாமிடத்தையும், எஸ். கிருசிகன் (யூனியன் கல்லூரி), எஸ்.தட்சாயினன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.சியாம்ராஜ் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.துஸ்யந்தன் (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) ஆகிய நால்வரும் நான்காம் இடத்தையும் பிடித்தனர்.

**பெண்கள் பிரிவு**

பெண்கள் பிரிவில் எஸ்.ஜென்சிகா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) 25 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தில் உள்ளார். எஸ்.நிதுசா (கொக்குவில் இந்துக் கல்லூரி) இரண்டாமிடத்தையும், எஸ்.சுகன்யா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), எஸ்.கரதுர்சனா (வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை) இருவரும் மூன்றாம் இடத்தையும், எஸ்.ஜனனி (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.பிரியங்கா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), எஸ்.அனோசிகா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), எஸ்.மதுமிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகிய நால்வரும் நான்காம் இடத்தையும் கைப்பற்றினர். (ம-108)



# உதயதாரகை, இளந்தளிர் அணிகள் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், டிசெ. 14
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஏவ்.ஏ. கிண்ணத் தொடரில் கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் உதயதாரகை, இளந்தளிர் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் செம்மலை உதயதாரகை அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்து கிராஞ்சி செந்தாரகை அணி மோதிக் கொண்டது. இதில் இளந்தளிர் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# புதிய அணியில் விளையாடத் தயார் என்கிறார் ரவிச்சந்திரன் அஸ்வின்



சென்னை அணி தடை செய்யப்பட்டுள்ளமையினால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள புனே, ராஜ்கோட் அணிகளில் ஏதேனும் ஒன்றில் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளார் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின்.

ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டதால் புதிய அணிகளாக புனே, ராஜ்கோட் அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை, ராஜஸ்தான் அணிகளில் இடம்பெற்றிருந்த வீரர்களில் [illegible]மான தலா 5 பேரை புனே, ராஜ்கோட் அணி நிர்வாகங்கள் நாளை தெரிவு செய்ய இருக்கின்றன. சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக தொடர்ந்து விளையாடி வந்த சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின், அடுத்த இரு ஆண்டுகள் வேறு அணிக்காக விளையாட மனதளவில் தன்னைத் தயார்படுத்தி விட்டார். அவர் நேற்று தனது ருவிட்டர் பக்கத்தில் அடுத்த ஐ.பி.எல். சீசனில் புனே அல்லது ராஜ்கோட் இவற்றில் எந்த அணியில் இணைவேன் என்பது இன்னும் 2 நாட்களில் முடிவாகிவிடும். புதிய தொடக்கத்தையும், கூடுதல் சவால்களையும் சந்திக்க ஆவலோடு எதிர்நோக்கி இருக்கிறேன். ஒருவேளை இவ்விரு அணிகளும் என்னை தேர்வு செய்யாவிட்டால், நான் ஏலப்பட்டியலில் இடம்பெறுவேன். எந்த அணி என்னை வாங்குகிறது என்பது [illegible] இல்லை. என்னைப் [illegible] புதிய சவால்கள் அவசியமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ரி-20 உலகக்கிண்ணத் தொடர் அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மார்ச் மாதம் 19ஆம் திகதி உலகின் மிகவும் அழகான ஆடுகளம் என்று வர்ணிக்கப்படும் தர்மசாலா மைதானத்தில் நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தைக்காண ரசிகர்கள் அலைமோதுவார்கள் என்ற காரணத்தினால் மைதானத்தில் இருக்கைகளின் எண்ணிக்கையை 5ஆயிரத்தால் அதிகரிக்க திட்டமிடப்பட்டுளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(ம)

## இலங்கை கிரிக்கெட் சபைக்கான தேர்தலில் மூவரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன

இலங்கை கிரிக்கெட் சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்திருந்த மூவரின் விண்ணப்பங்கள், நிராகரிக்கப்பட்டுள்ளன. அவர்களது வேட்புமனுக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த எதிர்ப்பைத் தொடர்ந்தே, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கெதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

உபதலைவர் பதவிக்காகப் போட்டியிட்ட கே.மதிவாணன், அசங்க செனவிரத்ன ஆகியோரது வேட்புமனுக்களும், பொருளாளர் பதவிக்காகப் போட்டியிட்ட ஈஸ்மான் நாரங்கொட ஆகியோரது வேட்புமனுக்களே அவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன. இப்பதவிகளுக்காகப் போட்டியிடுவதற்கு, நிறைவேற்றுச் செயற்குழுவில் குறைந்தது 2 வருடங்கள் பணியாற்றியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை, இவர்கள் பூர்த்தி செய்யவில்லை என்ற காரணத்தினாலேயே, இவர்களது வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம)


## இந்தியாவுக்கு எதிராக சிமித் இல்லை?



ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடருக்கு தலைவராக வோர்ணர் செயற்பட வாய்ப்புக்கள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் முதுகு வலியாலும் முழங்கால் வலியாலும் அவதியுற்று வருகிறார். ஜனவரியில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரும், 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரில் சிமித்துக்கு ஓய்வு கொடுக்க முடிவு எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வு கொடுக்கப்பட்டால் குறித்த தொடரில் வோர்ணர் தலைவராகச் செயற்படுவார். (ம)

## மரண அறிவித்தல்



## இராமுப்பிள்ளை இராசலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை இராசலிங்கம் நேற்று (13.12.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், நாகலிங்கம், தியாகலிங்கம், தர்மலிங்கம், சுப்பிரமணியம், சிவபாக்கியம் மற்றும் தனபாக்கியம் (கனடா), சரஸ்வதி (சுவிஸ்), சரோஜினி தேவி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (முல்லைத்தீவு), சுதா, லதா (இந்தியா), உமா (ஜேர்மனி), ரதி, ரகு (கனடா), ரஜனி (கனடா) காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரோகினி (இந்தியா), சிவராசா காலஞ்சென்ற தியாகராசா மற்றும் தர்மசீலன் (இலண்டன்), தருமலிங்கம் (ஜேர்மனி), அகிலன், புனிதா (கனடா), பிரபாகரன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமனும், சதீஸ், தர்சன் (கனடா), கபில்ராஜ் (ஆஸ்திரேலியா), புருசோத்தமன் (பிரான்ஸ்), காயத்திரி (இந்தியா), தர்சா (இந்தியா), சிந்தூரி (இந்தியா), சுயிந்தன் (இந்தியா), தாட்சாயினி (ஜேர்மனி), கம்ஷா, லோஜிதன், ரம்யா, கிஷாந், தயானி (கனடா), சோனா (கனடா), சுயந்த் (கனடா) அஜந்த் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அனுஸ்கா, துளக்ரினா, சாய்சரன் (கனடா), கனுஸ்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2015) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 9582570 (சுதா)
077 8805879 (கண்ணன்)




வேலை வாய்ப்பு
SUN FURNIY CITY
Infront of Old Hospital #315, A-9 Road, Kilinochchi
Infront of Mansolai Hospital, Mulliyawalai, Mullaitivu
DAMRO
Authorized Agent for
Kilinochchi/Mullaitivu District
கீழ்வரும் வேலைவாய்ப்பு களுக் கு சுயவிபரத்துடன் தகுதியானவர்களின் விண்ணப்பங்களை குறித்த விலாசத்துக்கு அல்லது
sunfurniycitykili@gmail.com
அனுப்பிவைக்கவும்.
- Showroom Managers – Male - 25-40 age
- Sales Assistant – Male - 18-25 age
- Accounts Assistant – Male – 25-40 age

25Km உட்பட்ட நிரந்தர வதிவிடம்
T.P:- 0773 659106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.